# பாரதிதாசன் பாரதிக்குத் தாசனா?





பாவலர் மணி
புலவர் ஆ. பழநி

பாரதி பைந்தமிழ்ப் பதிப்பகம்

# பாரதிதாசன் பாரதிக்குத் தாசனா?

ஆசிரியர்

**பாவலர்மணி**

**புலவர் ஆ. பழநி**

காரைக்குடி

**பாரதி பைந்தமிழ்ப் பதிப்பகம்**

20, பெரிய கடை வீதி,

திருப்பூர்-641004.

☎ 0421-2427976, 9976117055

## நூல் விவரப் பட்டியல்


நூலின் பெயர் : பாரதிதாசன் பாரதிக்குத் தாசனா?

ஆசிரியர் : பாவலர் மணி புலவர் ஆ. பழநி

உரிமை : ஆசிரியருக்கு

நூல் வகை : ஒப்பாய்வு

முதற் பதிப்பு : 1989, அக்டோபர்

இரண்டாம் பதிப்பு : 2007, டிசம்பர்

தாளின் தன்மை : 14.4 கி.கி.

நூலின் அளவு : 14.5 × 21.5 செ.மீ. டெம்மி

அச்சு எழுத்து : 11 புள்ளிகள்

மொத்தப் பக்கங்கள் : 120

வெளியிடுவோர் : பாரதி பைந்தமிழ்ப் பதிப்பகம்,
20, பெரியகடை வீதி,
திருப்பூர்-641 604.
தொலைபேசி: 0421-2427976,
9976117055

விலை : ரூ. **45.00**

கணினி அச்சு & அச்சிட்டோர் : சிவா கிராபிக்ஸ்,
சென்னை-94. ☎ 9884712091


# பதிப்புரை

'பாரதி பைந்தமிழ்ப் பதிப்பகம்' பதிப்புத் துறையில் தன் வலக்காலை எடுத்து வைத்து நடக்கத் தொடங்கி இருக்கின்றது. எங்கள் பதிப்பகத்தின் முதல் வெளியீடு, முதன்மையான வெளியீடாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினோம். அதன் விளைவுதான் 'பாரதிதாசன் பாரதிக்கு தாசனா?' என்ற நூல்.

பாரதியும் பாரதிதாசனும் இருபதாம் நூற்றாண்டு முழுவதையும் தங்கள் கவிதையால் வழி நடத்தியவர்கள். வருகின்ற நூற்றாண்டுகளையும் கூடத் தங்கள் கவிதை ஆக்கத்தின் கீழ் வைத்திருக்கப் போகின்றவர்கள்.

இவ்விரு கவிஞர்களும் இந்த மண்ணையும் மக்களையும் நேசித்தவர்கள். இம் மண்ணுக்குரிய கலைகளையும், நாகரிகத்தையும் கண்ணாகப் போற்றியவர்கள். இவர்கள் ஒரு காலத்தவராகவும் இருந்தார்கள். உணர்ச்சி ஒத்தவராகவும் இருந்தார்கள். மனிதர்கள் உறுப்புக்களால் ஒத்திருந்தாலும் உருவத்தால் ஒத்திருப்பதில்லையே! வேற்றுமையும், ஒற்றுமையும் ஒன்றிலே ஒன்றாகிக் கலந்திருப்பது இயற்கைதானே! இதனையறியும்போது இவ்விரு கவிஞர்களும் ஒன்றுபட்டும், வேறுபட்டும் தோற்றமளிப்பதில் வியப்பொன்றுமில்லை என்ற முடிவிற்கே வருவோம்.

பாரதிதாசன் பாரதிக்கு தாசனா? என்ற நூலை இயற்றிய பாவலர்மணி புலவர் ஆ. பழநி அவர்கள் படைப்பிலக்கியத்திலும், திறனாய்வுக் கலையிலும் முத்திரை பதித்தவர்கள். தமிழக அரசின் 'பாவேந்தர் விருது' முதல், மதுரைப் பல்கலைக் கழகத்தின் 'தமிழ்ச் செம்மல்' விருது வரை பத்துக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றவர்கள். பாரதி- பாரதிதாசன் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை விவரிக்கும் இடத்தில் ஆசிரியரின் நடுநிலை உள்ளம் நன்கு வெளிப்படுகின்றது.

இந்நூல் வெளிவருவதற்கு வாய்ப்பாக இந்நூலாசிரியரைத் தொடர்பு படுத்தியும், நூற்பதிப்புக்கான பணிகளில் துணை நின்றும் உதவிய ஈரோடு இளங்கோ இசை நாட்டியப் பள்ளி நிறுவனர் தேவகோட்டை V.K. வள்ளியப்பன் அவர்கட்கு எம் நெஞ்சார்ந்த நன்றி. இந்நூலை மிகச் சிறப்புடன் வடிவமைத்து அச்சமைத்த சிவா கிராபிக்ஸ் நிறுவனத் தாருக்கும் எங்கள் நன்றி.

இது எங்கள் முதல் நூல். இது எங்கள் பதிப்பகத்தின் 'முதல்' நூலாக வேண்டுமானால் வாசகர்கள் துணைபுரிய வேண்டும்; என்ற வேண்டுதலோடு இந்நூலைப் படைக்கின்றோம்.

பாரதி சரவணன்
பாரதி பைந்தமிழ்ப் பதிப்பகம்
திருப்பூர்

# முன்னுரை

தமிழ்க் கவிதை உலகம் எத்தனையோ திருப்பங்களைக் கண்டுள்ளது. இயற்கை வாழ்க்கையில் திளைத்து நின்ற கவிதை, அறங்களை நோக்கித் திரும்பியது; சமயங்களை நோக்கித் தாவியது; பக்திச் சுவையிலே சொக்கிக் கிடந்தது; காவிய நலத்திலே கட்டுண்டு கிடந்தது; பரலோக வாழ்க்கையையும் பார்த்து மகிழ்ந்தது.

காலச் சக்கரத்தின் சுழற்சியில் தமிழக வாழ்க்கைப் போக்கு தலைகீழ் மாற்றத்திற்கு ஆளாகச் சிற்றிலக்கியங்கள் புற்றீசல் போலப் புறப்பட்டன. உரிமை இழந்த மன்னர்களின் பெருமை குறைந்த காமக்களியாட்டங் களைக் கூடத் தமிழ்க்கவிதை பார்த்து விட்டது. ஒரு செயற்கையான வாழ்முறையின் சிக்கலுக்குள் கவிதை அகப்பட்டுக் கொண்டு விழிபிதுங்கி நின்றது.

அந்நிய ஆட்சியும் அதனால் எழுந்த எழுச்சியும்தாம் சேற்றுள் புதையுண்டு சிக்கிக் கிடந்த கவிதையை ஆற்றல் மிக்க கருவியாக- அடிமை விலங்கு களை ஒடித்தெறிகின்ற விசையாக- சமூக அவலங்களைச் சுட்டெரிக்கின்ற பெருநெருப்பாக- கண்மூடி வழக்கங்களை எல்லாம் மண் மூடிப் புதைக்க வந்த கருவியாக- சுதந்தரச் சுடரின் கொழுந்துகளை மனித வாழ்க்கையில் ஏற்றி வைக்க வந்த இளஞ் சூரியனாக- மாற்றித் தந்தது. ஆம்! தமிழ்க் கவிதை தன் தேக்கத்தை உடைத்துக் கொண்டு புதிய நோக்கத்தைத் தாங்கிப் பயணத்தைத் தொடங்கியது விடுதலைப் போராட்டம் வீறு கொண்டு எழுந்த போதுதான். முரண்பாடுகள் என்ற வாள்கள் மோதிக் கொள்ளும் போதுதான் புதுமைப் பொறிகள் சிதறி விழுகின்றன.

அரசியல் சமுதாய முரண்பாடுகள் மோதி நின்ற விடுதலைப் போராட்டத் தில் தமிழ்க் கவிதைகள் உணர்ச்சி வெப்பத்தை உமிழ்ந்த பொறிகளைச் சிதறிப் போராட்டத்திற்கே ஒரு புதிய உந்துதலை வழங்கின. அந்த உந்துதலை வழங்கிய உயிரோட்டமான கவிதைகளை உதிர்த்த நா யாருடைய நா? சுப்பிரமணிய பாரதி என்ற அற்புதக் கவிஞனின் நாதான் அந்த நா. பழைய களத்தின் கதவு முழுமையாக மூடப்படவில்லை என்றாலும் புதிய களத்தை அவருடைய பாடல்கள் அறிமுகம் செய்யத் தவறவில்லை.

புதிய களம்- புதிய பார்வை- இங்கேதான் பாரதியார் பாரதிதாசன் சந்திப்பு நிகழ்கின்றது. இருவரையும் எவ்வாறு அழைப்பது? ஆசிரியர்



மாணவர் என்று அழைக்கலாமா? தலைவரும் தொண்டரும் என்று அழைக்க லாமா? ஆண்டான் அடிமை என்று சொல்லலாமா? உணர்ச்சியொத்த நண்பர்கள் என்று கூறலாமா? எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். எல்லாவற்றிற்கும் பொருத்தமாக உள்ளதுதான் அவர்களிடையே இருந்த உறவு என்பதை வரலாறு நமக்குக் காட்டுகின்றது.

இத்துணை நெருக்கமும் இறுக்கமும் அவர்களிடையே இருந்த போதிலும் காலம் அவர்கள் மீது அள்ளித் தெளித்த வேறுபாடுகளும் இருக்கவே செய்கின்றன. பாரதியாரைப் பொறுத்தவரையில் அவருடைய முந்தைய காலம் பிரச்சனைகளை எழுப்புகிறது. பாரதிதாசனைப் பொறுத்த வரையில் பாரதியாருக்குப் பிந்தைய காலம் பிரச்சனைகள் தோன்றக் காரணமாக இருக்கின்றது. பழமையும், புதுமையும் எண்ணெய்யும், தண்ணீருமாகி ஒட்டிக் கொள்ளாமல் வெட்டிக் கொண்டு நிற்பதைக் காண முடிகின்றது.

வேறுபாடுகள் முகங்காட்டினாலும் அவற்றையும் மீறி வெளிப்படும் ஒற்றுமைகளையும், நம்மால் காணமுடிகின்றது. இந்திய நாட்டை ஒன்றாகக் காண விரும்பிய பாரதியார் மாநிலங்களின் எல்லைக் கோடுகளும் மக்களின் மொழிகளும் வேறுபட்டு நின்றாலும் இவற்றுக்குள் ஊடுருவி நிற்கின்ற ஒற்றுமையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் - இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள்எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்.

என்ற பாடலில் முகங்கள் முப்பது கோடியாக இருந்தாலும் அவற்றை எல்லாம் இயக்குகின்ற உயிர் ஒன்றுதான்; மொழி பதினெட்டாக இருக்கலாம்; அம்மொழியில் வெளிப்படுத்தப்படும் சிந்தனை ஒன்றுதான் என்கின்றார். என்ன இதன்பொருள்? ஒரு மூல வித்திலிருந்து முளைத்து எழுந்த பல கோடிச் செடிகள்தாம் இந்திய மக்கள். ஒரு மூலச் சிந்தனைக் குருத்திலிருந்து முகிழ்த்தெழுந்த மொழிகள்தாம் இப்பதினெட்டு மொழியும் என்கின்றார். எல்லைக் கோடுகள், மொழி வரையறைகளைத் தாண்டிய ஒரு மனித உறவு தோன்றியாக வேண்டும் என்பதுதான் பாரதியின் கனவு.

இதே கனவைப் பாரதிதாசனும் காணுகின்றான்.

'இமயச் சாரலில் ஒருவன் இருமினான்
குமரி வாழ்பவன் மருந்துகொண் டோடினான்.'

என வரும் அந்நிலை பூத்துப் பொலிய வேண்டும் என்கின்றான். இந்நிலை மலரத் தடையாயின உளவேல் அவை தகர்க்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தையும் அவன் வெளிப்படுத்தத் தவறவில்லை. ஆக்ப்

பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் ஒப்பும் உண்டு; கொஞ்சம் உரசலும் உண்டு என்பதை நாம் அறிவோம். இதனை ஊதிப் பெருக்கிய சூழ்நிலையும் ஒன்றுண்டு. அது என்ன?

காங்கிரசு இயக்கமும், பொதுவுடைமை இயக்கமும் பாரதிக்கு உரிமை கொண்டாடின. திராவிட இயக்கங்களோ பாரதிதாசனுக்கு உரிமை கொண்டாடின. இவ்விரண்டின் உரிமைப் போராட்டமும், இவ்வணிகளுக் கிடையே தோன்றிய அரசியல் வெப்பமும் பாரதி-பாரதிதாசன் கவிதைகளுக்குள் நுழைந்து சூடேற்றின. அவர்களின் கோபதாபங்கள் பாரதிக்கும் பாரதிதாசனுக்குமான கோபதாபங்கள் போல உருக்காட்டத் தொடங்கின. உணர்ச்சியால் ஒன்றிப்போன இரண்டு கவிஞர்கள் போலிப் பகைமைக்கு ஆளாக்கப்பட்டார்கள். இதன் விளைவாகப் பாரதிதாசன் பாரதிக்குத் தாசனா? ஒருக்காலும் இருக்க முடியாது என்ற விவாதங்கள் தலைதூக்கின. பாரதி அணியினர் பாரதிதாசனைப் பிற்போக்குக் கவிஞன் என்றனர்; பாரதிதாசன் அணியினரோ பாரதியைப் பிற்போக்குவாதி என்றனர். முற்போக்குச் சிந்தனையின் மூலவர்களாக விளங்கிய கவிஞர்கள் இருவரும் இடையில் உள்ளவர்கள் எழுப்பிய பூசலால் பிற்போக்குப் பட்டத்தைச் சுமக்க வேண்டியவர்கள் ஆனார்கள்.

பாரதியாரின் சிறந்த படைப்பு எது? இந்த வினாவிற்குச் சிலர் தேசியப் பாடல்கள் என்பர்; சிலர் பாஞ்சாலி சபதம் என்பர்; இன்னும் சிலர் கண்ணன் பாட்டே என்பர்; மற்றும் சிலர் குயில் பாட்டே என்பர். இவையெல்லாம் இரண்டாந்தரமான விடைகள். அப்படி என்றால் முதல்தரமான விடை எது?

பாரதியாரின் மிகச்சிறந்த படைப்பு பாரதிதாசன் என்பதுதான் என்ற முன்னுரையோடு இந்நூலை உங்கள் பார்வைக்குத் தருகின்றேன்.

இந்நூலினை வெளியிடுகின்ற திருப்பூர் பாரதி பைந்தமிழ்ப் பதிப்பகத்தாருக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். இதனை வெளிக்கொணர வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்தோடு செயல்பட்ட என் இனிய நண்பர் திரு. வி.கே. வள்ளியப்பன் அவர்கட்கும், நூலை மதிப்பிட்டு ஆய்வுரை அருளிய நற்கதை நம்பி திரு. அய்க்கண் அவர்கட்கும் என் நன்றி என்றும் உரியது.

அன்பன்
ஆ. பழநி

# மதிப்புரை

## பேராசிரியர் டாக்டர் அய்க்கண்

தற்கால இலக்கியப் படைப்புகளில் தன்னிகரற்ற 'அனிச்ச அடி'யின் மூலம் தமிழ்கூறு நல்லுலகத்தில் வலுவான அடியூன்றியவர் பாவலர்மணி ஆ. பழநி அவர்கள். 'மதிநுட்பம் நூலோடு உடைய' அப்பெருமகனார், எந்தக் கருத்தையும் புதுமையான கோணத்தில் நோக்கி, 'சமன் செய்து சீர் தூக்கும் கோல்' போல, நிறைகுறைகளைக் காட்டும் ஆய்வுப் பண்பு படைத்தவர். திங்கள்தோறும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் திருமுன்னர் நடக்கும் 'சிந்தனை நந்தவனத்தில்' புதிய கருத்து மலர்களை மலரச் செய்யும் சிந்தனையாளர். பேச்சாளர்களின் கருத்துகளைத் தம் நுண்மான் நுழைபுலத்தால் மேலும் துலக்கித் தெளிவுறுத்தும் மாண்பு மிக்கவர்.

பாவேந்தர் தன் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்ட நிகழ்வு, எதிர்காலத் தலைமுறையினர்க்கு ஓர் ஐயத்தை ஏற்படுத்துவது. பார்ப்பன எதிர்ப்பும், தனித் தமிழின்பால் உறுதியும் படைத்த பாவேந்தர், ஏன் தன் பெயரைப் 'பாரதிதாசன்' என்று அமைத்துக் கொண்டார் என்பது ஒரு நெருடலான வினா.

பாரதிதாசன் என்பது, பெற்றோர் இட்ட பெயர் அன்று; அப்படியிருந்தால் கூட, அதற்கு நாம் ஓர் அமைதி கூறிக்கொள்ள முடியும். 'இராமரை எதிர்க்கும் பெரியார் ஏன் இராமசாமி என்ற பெயரைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்?' என்ற கேள்வியை 'அவர் வெறும் இராமசாமி அல்லர். இராமனுக்கே சாமி' என்ற விடையால் அடித்து நொறுக்கிய காலம் அது. நாராயணசாமி, இராமையா, சின்னராஜ், துரைராஜ், சாத்தையா முதலான பெயர்களெல்லாம், நெடுஞ்செழியன், அன்பழகன், சிற்றரசு, முடியரசன், தமிழ்க்குடிமகன் என்று தமிழ்ப் பெயர்களாக மாற்றப்பட்ட காலம். அந்தக் காலச்சூழலில் பாரதிதாசன் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது என்று, வருங்காலம் கேட்கிற கேள்வியை முன்னிறுத்தி பாவலர்மணி அவர்கள், இந்த அரிய நூலைப் படைத்திருக்கிறார்.

'மனிதர்களைப் பாடும் இலக்கிய நெறி என்னும் மாளிகைக்குக் கால்கோள் செய்தவர் வள்ளலார்; முகப்புத் தொடங்கி முதல் மாடம் வரை எழுப்பியவர் பாரதியார்; இதனை எதிரிலா வனப்புடைமை எழுநிலை மாடமாக உயர்த்தியவர் பாரதிதாசன்' என்று சமநிலையோடு இலக்கிய வரலாற்றை வரைகிறார் பாவலர்மணி.

1908-இல் இருந்து, 1918 வரை பத்தாண்டுக் காலம் பாரதி-பாரதிதாசன் உறவு, செழித்து வளர்ந்தது. இந்த உறவே, பக்திப் பாடல்களையும், பாவையர் பற்றிய இன்பியற் பாடல்களையும் பாடிக் கொண்டிருந்த கனகசுப்புரத்தினத்தைப் பாரதிதாசனாக மாற்றியது எனலாம்.

'பழம் பெருமை' புலவர்களுக்கும் புதுமைக் கவிஞர் பாரதிக்கும் இடையே நடந்த இலக்கிய இலக்கணச் சண்டைகளில், பாரதிதாசன் பாரதியாருக்கு உறுதுணையாக நின்று வெற்றிகாணச் செய்திருக்கிறார். தேசியம், புரட்சிக் கருத்துகள், தெய்வங்களைப் பாடுதல் ஆகிய மூன்றும் இணைந்த ஒரு கலவையான பாரதியாரில், கனக சுப்புரத்தினமும் தாசனாகக் கலந்து கரைந்து நின்ற வரலாற்றைக் கால நிரலின் வண்ணம் எடுத்துக்காட்டுகிறார் பாவலர்மணி.

பாரதியார் புதுவையை விட்டுச் சென்ற பிறகும், 1924 வரையிலும் பாவேந்தர், பாரதிதாசனாகவே வாழ்ந்தார். ஆனால் 1924க்குப் பிறகு, பாரதியாரின் தாக்கம் தாசனிடம் குறையத் தொடங்கியது.

முதலாவதாக, நாடு பற்றிய கொள்கையில் இருபெரும் கவிஞர்களின் நோக்கைத் தீவிரமாக ஆராய்கிறார் பாவலர்மணி.

'பாருக்குள்ளே நல்ல நாடு-எங்கள்
பாரத நாடு'

என்று முழங்கியவர் பாரதியார். ஆனால் 1930க்குப் பிறகு, பாரதிதாசன், பாரத நாட்டைப் பாடுவதையே நிறுத்திவிட்டார். அதற்கு மாறாகத் திராவிட நாட்டைப் பாடத் தொடங்கிவிட்டார்.

பாரதியார் திராவிட நாட்டுக் கொள்கையினரை 'கயவர்கள்', 'போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகள்', 'பொய்மேளக்கச்சேரி செய்வோர்', 'அபாண்டமான அர்த்தங்கள் கற்பித்துக் கூறுவோர்' என்றெல்லாம் கடுமையாகத் திட்டித் தாக்குகிறார்.

வ.வே.சு.அய்யர் மேற்கொண்ட சாதி குறித்த இரட்டை வேடமும், அதை எதிர்த்துப் பெரியார் செய்த பரப்புரையும், பாரதிதாசனின் மனத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது. உயர்ந்த நூல்கள் பற்றிய மதிப்பீட்டிலும் இருவரது முரண்பாடுகளைத் தொகுத்துச் சுட்டுகிறார் பாவலர்மணி. ஆய்வுக்கு, பாடல்களை மட்டும் ஆதாரங்களாகக் கொள்ளாமல், பெரும் பாலானோர் படித்திராத பாரதியாரின் உரைநடைத் தொகுதிகளையும் ஆவணங்களாகப் பாவலர்மணி பயன்படுத்துவது, அவரது வாதத்திறனுக்கு வலுவான சான்றாக அமைவதைக் காண்கிறோம்.

திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகியவற்றைப் போற்றிப் பாடும் பாரதியார், வேதம், உபநிடதம், சாகுந்தலம் முதலான வடமொழி நூல்களே சிறந்தவை என்ற நம்பிக்கை உள்ளவராக, அவரது உரைநடை வழி நாம் அவரை அறிய நேர்கிறது.



தெய்வம் சார்த்திப் பாடுதலிலும் இருவரது முரண்பாடுகளைக் காட்டு கிறார் பாவலர்மணி.

'நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்
இமைப் பொழுதும் சோராதிருத்தல்...'

என்று தன் வாழ்க்கைக் குறிக்கோளை முழங்கும்போது கூட, கணநாதரை நம்பித்தான் பாடுகிறார் பாரதியார். தனக்கு வேண்டும் வரங்களையும் கணபதியிடம் இசைத்தே கேட்கிறார். உருசிய நாட்டுப் புரட்சியையும் 'மாகாளி பராசக்தியின் கடைக்கண் பார்வைப் புரட்சியாகவே பார்க்கிறார். 'எங்கள் சுதந்திர தாகம் தணிய' வைக்கும் பொறுப்பையும், 'அன்றொரு பாரதம் ஆக்க வந்த' கண்ணனிடமே விட்டுவிடுகிறார். ஆனால் பாரதி தாசனோ, கடவுட் கொள்கையில், குருவுக்கு முற்றிலும் எதிர்த்திசையில் நிற்கிறார்.

உருசிய நாட்டுப் புரட்சியை வரவேற்றுப் பாடிய பாரதி,

'முப்பது கோடி சனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை'

என்றும் முழங்குவதைக் கேட்டு, அவர் ஒரு பொதுவுடைமை வாதி என்று உளம் கொள்கிறோம்.

ஆனால் பாவலர்மணி அவர்கள், பாரதியின் உரைநடைப் பகுதிகளை எடுத்துக்காட்டி பாமர நம்பிக்கைக்கு எதிரான ஒரு பாரதியை அடையாளம் காட்டும்போது, நாம் அதிர்ந்து போகிறோம்.

'செல்வம்' என்ற கட்டுரைத் தொகுப்பில் 'ஸ்ரீமான் லெனின் சொல்வது முற்றிலும் தவறான கொள்கை' என்று கண்டிக்கிறார் பாரதி. 'தனி ஒருவனுக்கு உணவு இல்லை' என்னும் குறையை மாற்ற, பொதுவுடை மைக்கு மாற்றாக, நடைமுறைப்படுத்த முடியாத ஒரு 'புது உடைமை' வழியையும் பாரதி முன்மொழிகிறார்.

பாரதியாரின் பாடல்களிலே சரிபாதி அளவு கடவுள் பற்றிய பாடல்களே என்று கணக்கிட்டு நிறுவும் பாவலர்மணி, பாரதிதாசன் அதற்கு மாறான கொள்கையில் நிலையூன்றி நிற்பதைப் பல சான்றுகளுடன் காட்டுகிறார்.

கனகலிங்கம் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்புத் தோழனுக்குப் பூணூல் அணிவித்துப் புரட்சி செய்தவர் பாரதி என்பது நமக்குத் தெரியும். 'மதம் மனிதர்களைப் பிளவுபடுத்தக் கூடாது; குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று பாடிய பாரதிக்கு, இந்து மதத்தின் மேல் அழுத்தமான பற்று உண்டு என்று காட்டுகிறார் பாவலர்மணி.

'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடித் தமிழைப் போற்றிய பாரதி, 'தமிழுக்கான இலக்கணத்தை அகஸ்தியரும் திரணதூமாக்னி என்ற தொல்காப்பியரும்,

வடமொழி இலக்கணத்தை அனுசரித்தே அமைத்தார்கள்' என்று, தன் கட்டுரையில் கருத்துத் தெரிவிக்கிறார். 'சமஸ்கிருத பாஷை, மற்ற சாதாரண பாஷைகளையெல்லாம் விட, உயர்ந்த தெய்வ பாஷை' என்று அறுதியிட்டுப் பிரகடனம் செய்கிறார்.

ஆனால் இக்கருத்துக்களைப் பாரதிதாசன், வன்மையாகக் கண்டிக்கிறார். மறைமலையடிகள் முதலியோர் தொடர்பால், பாவேந்தர் தனித்தமிழ் இயக்கத்தைச் சார்ந்து எழுதத் தொடங்கிவிட்டார். பாரதியாருக்குத் தனித்தமிழ் பற்றிய கொள்கை இல்லை. கல்வி நிறுவனங்களில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று கட்டளையிடுகின்ற பாரதியார், வடமொழிக் கலப்பை ஏற்றுக் கொள்கிறார்.

குறிக்கோள் வெளிப்பாட்டிலும் இருவருக்கும் பெரும் வேற்றுமை இருப்பதை எடுத்துக்காட்டுகிறார் பாவலர்மணி. நாட்டுக்காகவும் தமிழுக்காகவும் கருத்துச் செறிந்த கவிதைகள் எழுத வேண்டும் என்ற குறிக்கோளோடு புதுச்சேரி வந்த பாரதியார், அங்கே அரவிந்தரின் தொடர்பால் வழிதடுமாறித் தெய்வ வழிபாட்டின் பக்கம் திரும்பி விடுகிறார்.

நாட்டு விடுதலையையும் நாட்டு மக்கள் அவலங்களையும் பாட வேண்டும் என்ற குறிக்கோளின் இடத்தை, பராசக்தியின் வழிபாடு பிடித்துக் கொள்கிறது என்பதை உரிய சான்றுகளுடன் எடுத்துக் காட்டுகிறார் பாவலர்மணி.

'பாரதியாரின் புதுச்சேரி வருகை, பாரதிதாசனுக்குத்தான் நன்மையைத் தந்தது; ஆனால் பாரதியாருக்கு நன்மையைத் தரவில்லை' என்ற பாவலர்மணி அவர்களின் கூற்று, பெரும் வரலாற்று மெய்ம்மையை உள்ளடக்கியது எனலாம்.

'பாரதியார் மனிதனைப் பாடிய பின்னர், [பெரும்பாலும்] தெய்வத்தைப் பாடப் போனவர்; பாவேந்தரோ, தெய்வத்தைப் பாடிய பின்னர், [பெரும் பாலும்] மனிதனைப் பாட வந்தவர்' என்னும் வரிகள், இருபெரும் கவிஞர்களின் குணச்சித்திரங்களாக இலங்குகின்றன.

நூலின் பகுதிகளில் பாரதிதாசனின் படிப்படியான வளர்ச்சியைச் சித்திரிக்கும் பாவலர்மணி, பாரதியாரின் பல சரிவுகளையும் முரண்களையும் பட்டியலிடும்போது, பாரதியின் அன்பர்களுக்கு வருத்தம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆய்வாளரின் 'சுயமரியாதைக்' கொள்கை, தலைதூக்குகிறதோ என்ற ஆதங்கம்கூட, அவர்களுக்கு எழலாம். ஆனால், பாரதியாரின் வழுக்களுக்கு அமைதி கூறும் பாவலர்மணியின் மனித நேய மாண்பு, நம் நெஞ்சை நெகிழச் செய்கிறது.

பாரதியார், புரட்சிக் கருத்துக்களைப் பாடிப் 'பிழைத்தவர்' அல்லர்; அவற்றையே வாழ்நாளில் கடைப்பிடித்துக் காட்டியவர். அதன் விளைவாகவே, அவர் தாங்கொணா வறுமையில் வாட நேர்ந்தது. 'நீ என்னை



அற்பத் தொல்லைகளுக்கு உட்படுத்திக் கொண்டே இருந்தால், நான் நாஸ்திகனாகி விடுவேன்' என்று பராசக்திக்கே எச்சரிக்கை விடுமளவுக்கு வறுமைக்குள்ளாகி வேதனையுற்றார் பாரதி என்பதை அவலச்சுவை ததும்ப எடுத்துக்காட்டுகிறார் ஆய்வாளர்.

குறிக்கோள் இன்றிக் காட்டாற்று வெள்ளம்போல் பாடித் திரிந்த பாவேந்தருக்கு, வழிகாட்டித் திருத்தி மக்கள் கவிஞராக்கியது பாரதியாரே என்று குறிக்கிறார் பாவலர் மணி. பாவேந்தரை, எளிய சொற்கள், எளிய தொடர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கவிதையாக்கும் முறைக்குத் திருப்பியவரும் பாரதியாரே. தமிழிசையைப் போற்ற வேண்டும் என்ற கொள்கையையும் பாரதியாரிடமிருந்து பெற்றார் என்பதும் வரலாற்று உண்மையே.

சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, கைம்பெண் மறுமணம், பார்ப்பனிய எதிர்ப்பு முதலிய கொள்கைகளை, பெரியார் எழுச்சிக்கு முன்பே, பாரதியாரிடமிருந்து பாவேந்தர் பெற்றார் என்பதையும் பல சான்றுகளின் மூலம் நிறுவுகிறார் பாவலர்மணி. பார்ப்பனிய எதிர்ப்பில் உறுதியாக நின்ற பாரதிதாசன், தம் குருவை எப்போதும் 'அய்யர்' என்று குறிப்பிட்டே போற்றியிருக்கிறார் என்பது, நம் நெஞ்சை நெகிழவைக்கும் வரலாற்றுச் செய்தி.

அத்தியாயம் ஒவ்வொன்றின் முடிவிலும் '...இத்தகைய கொள்கைகள் கொண்ட பாரதிதாசன், பாரதிக்குத் தாசனா?' என்ற கேள்வியை எழுப்பி, அடுத்த அத்தியாயத்திற்கு நகரும் கட்டுரைத் தொடர், அத்தியாயம் தோறும் வாசகர்களின் உள்ளத்தில் ஆர்வத்தையும் விறுவிறுப்பையும் தோற்றுவிக்கும் புதினத்தின் உத்தியைப் பின்பற்றியுள்ளது எனலாம்.

ஆய்வின் இறுதி முடிவுகூட, என்னைப் போன்றவர்கள் எதிர்பாராத முடிவாகவே அமைந்திருப்பது, அவரது காய்தல் உவத்தல் அற்ற ஆய்வுள்ளத்தை மெய்ப்பிக்கிறது.

'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'

என்னும் குறட்சட்டத்தின்படி, கருப்பொருள்களின் கனபரிமாணங்களை ஒதுக்கிவிட்டு, எண்ணலளவையில், ஆறு செய்திகளில் பாரதியோடு வேறுபட்டு நிற்கிற பாவேந்தர், பதினொரு செய்திகளில் பின்பற்றி நிற்பதால், அவர் பாரதிதாசனாகவே விளங்குகிறார் என்று தீர்ப்பு வழங்கியுள்ளார்.

'பாரதி தாசன், பாரதிக்குத் தாசனா?' என்ற 'ஒரு மில்லியன் டாலர் வினா'வுக்குப் பாவலர்மணி அளித்திருப்பது 'ஒரு கோடி ரூபாய் விடையே' என உறுதியாகச் சொல்லலாம்.

## உள்ளுறை


அ. பதிப்புரை ........ 3

ஆ. முன்னுரை ........ 4

இ. மதிப்புரை ........ 7

1. தோரணவாயில் ........ 13
2. பத்தாண்டுத் தொடர்பு ........ 22
3. நாடு பற்றிய நோக்கு ........ 27
4. நூல்கள் பற்றிய மதிப்பீடு ........ 34
5. தெய்வம் சார்த்திக் கூறல் ........ 44
6. பொதுவுடைமை போற்றல் ........ 52
7. தமிழ் ஈடுபாடு ........ 70
8. குறிக்கோள் வெளிப்பாடு ........ 82
9. பாரதிக்குத் தாசனா? ........ 94


# பாரதிதாசன் பாரதிக்குத் தாசனா?

## 1. தோரணவாயில்

**ப**தினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் ஒரு பிரிவு எதனைக் காட்டிற்று? இதோ கைலாயம்! அதோ வைகுந்தம்! தேவலோகம்! துறக்கம்! நரகம்! திருநீற்றின் பெருமை என்று சமய வழிப்பட்ட காட்சிகளைக் காட்டின. தலபுராணங்கள் கொடிகட்டிப் பறந்தன. அக்கால இலக்கியங்களின் வேறொரு பிரிவோ தூது, காதல், மடல் பிரபந்தங்களாக மலர்ந்து மலரினும் மெல்லியதாகிய காமத்தைக் கொச்சைப்படுத்தி நாறிக்கொண்டிருந்தது.

அஞ்சி நடுங்கும் கோழைகளை வீரத்தின் விளைநிலம் என்று பாடிக்களித்தது பாவலர் உலகு. களத்திலே பெற்ற புண்களைக் காட்டுவதற்குப் பதிலாக விலை மாதரின் கண்ணடியாற் பெற்ற புண்களைக் காட்டுவதில் பெருமகிழ்வு கொண்டனர்.

எதையாவது பாடி எதையாவது பெற வேண்டும் என்ற எண்ணம் பாவலர்களிடத்திலும், இப்படித்தான் பாடல்பெற வேண்டும் என்ற குறிக்கோள் இல்லாது எப்படியாவது புலவர் வாயாற் போற்றப்பட்டாற் போதும் என்ற உணர்வு குறுநில மன்னர்களிடத்திலும் மேலோங்கி நின்றது.

தகுதி குறைந்த தலைவர்கள், தரங்குறைந்த பாடல்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கியங்களில் எங்கும் பரவலாகக் காணப்படுகின்ற செய்தி.

வானகத்திற்கு மேலே பார் என்பதும், வடிவேற் கண்ணழகியின் துடியிடையும் நடையழகும் இத்துரைமகனின் பூசனைக்குரிய பொருள்களாகிவிட்ட நேர்த்தியைக் காட்டி மகிழ்வதும்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கியக் குறிக்கோளோ என ஐயப்படுமாறுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் எல்லா இலக்கியங்களும் இப்படித்தான் இருந்தனவா என்றால் நூற்றுக்கு

நூறு அப்படி இல்லைதான். ஆனால் தொண்ணூறு விழுக்காடு இப்படித்தான் இருந்தன. இந்த வாய்பாட்டிலிருந்து இலக்கியம் விடுபட மாட்டாதா? வாழும் உலகைப்பற்றி- வாழ்வே மெய் என்பது பற்றி- சராசரி மனிதனின் வாழ்வுச் சிக்கல் பற்றி- அம்மனிதனின் எண்ண ஓட்டங்கள் பற்றி- அவன் ஏமாற்றத்தைப் பற்றி- அவன் எக்களிப்புப் பற்றி எவனும் பாடமாட்டானா?

'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச் சந்தனம் என்று யாரோ தடவினார்' எனத் துடிக்கும் தலைமகளைவிட, சேற்றிலே இறங்கி நாற்று நடும் கருநிற மேனியின் உள்ளக் குமுறலைக் காட்டி ஒரு கவிஞன் பாடமாட்டானா?

உண்ணவும் தின்னவும்- உடுக்கவும் படுக்கவும் ஓராயிரம் பொருள்களை ஆக்கியவன் தோளைப் புகழ்ந்து, அவன் தொண்டைப் பாராட்டிப் பாட ஒரு கவிஞன் தோன்ற மாட்டானா? என இத்தமிழகம் ஏங்கி நின்ற வேளையில்தான் 'இலகு பாரதிப்புலவன்' தோன்றினான்.

தோன்றினான் என்றவுடனேயே புலவர் குழாம் துந்துபி முழங்கிடவில்லை. மாறாகச் சிலர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டனர். வேறு சிலரோ தூற்றவும் தொடங்கினர். 'சிறுவன் இவன்; அறிவானோ அருந்தமிழை? என ஏளனம் பேசினர். மற்றும் சிலர் 'இலக்கணம் உண்டா அவன் பாட்டில்' எனக் கேட்டுத் தமக்குத் தாமே நகைத்துக் கொண்டனர். இந்த ஏளனத்தையும் எள்ளி நகையாடலையும் மீறி அவன் வளரத் தொடங்கினான்.

பிற்காலத் தமிழ் இலக்கியத்தில் வள்ளலாரைத் தொடர்ந்து மனிதனைப்பாடும் இயல்பு பாரதியாரிடத்தில் தான் இருந்தது. மனிதனைப்பாடும் இலக்கிய நெறி என்னும் மாளிகைக்குக் கால்கோள் செய்தவர் வள்ளலார்; முகப்புத் தொடங்கி முதல் மாடம் வரை எழுப்பியவர் பாரதியார்; இதனை எதிரிலா வனப்புடைய எழுநிலை மாடமாக உயர்த்தியவர் பாரதிதாசன்.

இருபதாம் நூற்றாண்டின் கவிதை வளர்ச்சியில் மிகப் பெரிய இடத்தை உரிமையாக்கிக் கொண்டிருப்பவர்கள் பாரதியும் பாரதிதாசனுமேயாவர். பாரதிதாசனுக்கு ஒளி காட்டும் விளக்காகவும், உந்து சக்தியாகவும் விளங்கியவர் பாரதியார். ஒரு நூற்றாண்டுக் காலக் கவிதைப் பரம்பரைக்கே மூலதனமாக



விளங்குபவர் பாரதிதாசனார். 'பாரதாசன் பரம்பரை' என்று ஒரு கவிதை மறவர் குழாம் இன்று தமிழகத்தையே தன் வயப்படுத்திக் கொண்டுள்ளது.

பாரதியாரின் இலக்கியப் பணி இந்திய விடுதலை இயக்கத் தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. வெள்ளைய ராட்சியில் இந்திய மக்கள் படுகின்ற இன்னல்களை விடுதலை இயக்க வீரர்கள் எடுத்துக் காட்டிச் செய்த பரப்புரை மக்களைப் பாடும் பணியில் பாரதியாரை ஈர்த்திருக்க வேண்டும். விடுதலை இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்ட எந்தக் கவிஞனும் மக்களை விட்டு விலகி இருக்க முடியாதே!

விடுதலைப் போராட்டம் வீறுகொண்டு எழுந்தபோது வெள்ளையரின் அடக்குமுறையும் அதே வேகத்தில் உடனெழுந்தது. அதன் விளைவு? பாரதியார் புதுச்சேரி செல்ல நேர்ந்தது. பாரதியாரின் புதுச்சேரிச் செலவு கனக சுப்பு ரத்தினத்தோடு தொடர்பை ஏற்படுத்திற்று. இத்தொடர்பின் இறுக்கம் பக்திப்பாடல்களையும் பாவையர் பற்றிய இன்பியற் பாடல்களையும் பாடிக் கொண்டிருந்த கனகசுப்புரத்தினத்தைப் பாரதிதாசனாக மாற்றியது. கனக சுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறிய வரலாற்றில் ஒரு கவிஞனின் 'உள்ளது சிறத்தல்' நெறி முறையாக நிகழ்ந்திருப்பதனை அறியலாம்.

*1908*-இல் இருந்து *1918* வரை பத்தாண்டுக் காலம் பாரதிதாசன் உறவு செழித்து வளர்ந்துள்ளது. அந்த உறவு நட்பு வடிவில் அமைந்திருந்ததாகப் பாரதியார் பாரதிதாசனார் குறிப்புக்களால் அறியமுடிகின்றது. பாரதிதாசன் அகவையிலும் ஆற்றலிலும் மூத்தவரான பாரதியாரைத் தன் ஆண்டானாகவும் தன்னை அடிமையாகவும் கருதிக் கொண்டு பாரதிதாசன் எனத் தன் பெயரை மாற்றிக் கொள்கின்றார். இவ்வாறு பெயரை மாற்றிக் கொண்டிருப்பினும் பாரதியார் பாரதிதாசனார் உறவு கொண்டும் கொடுத்தும் வாழ்ந்த உரிமை வாழ்வே என்பதனைப் பாரதி தாசனாரின் பாடல் ஒன்று நமக்கு அறிவுறுத்துகின்றது.

'பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்,

**நானும் அவர்க்கே எழுத்தியல் உதவுமோர்**
**தொண்டினால் அவர்க்கும் புலவர்க்கும் தோன்றும்**
**சண்டையில் வெற்றி கண்டிடச் செய்தேன்'**

என்று குறிப்பிடுகின்றார். பாரதியார் எனக்குப் பாடலில் புது முறையும் புதுநடையும் காட்டினார். நான் அவர்க்கும் புலவர்க்கும் நடக்கும் இலக்கியச் சண்டையில் வெற்றிக்குத் துணை நின்றேன் என்று அழுத்தமாகக் குறிப்பிடுகின்றார். பாரதியாருக்கும் புலவர் ஏனையோர்க்கும் நிகழ்ந்த சண்டைகள் அனைத்தும் நமக்குத் தெரியவில்லை. எனினும் இரண்டொரு சண்டைகள் நடந்துள்ளன என்பதைப் பாரதிதாசனின் எழுத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதோ பாவேந்தர் கூறுகின்றார்:

'பாரதியார் பழைய கட்டுத் திட்டங்களை எல்லாம் உதறி விட்டுப் பாமர மக்களுக்கும் புரியும்படி மிக எளிய முறையில் கவிதை எழுதியது புதுவையில் இருந்த பழம் புலவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் யாரும் பாரதியை மதிப்பது கிடையாது. பாரதியாரும் அவர்களைச் சட்டை செய்ய மாட்டார். எனக்குத் தமிழ் பயிற்றிய ஆசிரியர்களுள் ஒருவரான பங்காருப் பத்தருக்குப் பாரதியாரைக் கட்டோடு பிடிக்காது. ஏன்? அவரைப் பாரதியாரின் எதிரி என்றே சொல்லலாம். எப்போது பார்த்தாலும் வருவோர் போவோரிடமெல்லாம் பாரதியாரின் பாட்டை எடுத்து வைத்துக் குறை சொல்லிக் கொண்டிருப்பார். எதிர்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பார். 'இவனெல்லாம் இங்கிலீசு படிச்சுப் புட்டுத் தமிழ்ப் பாட்டு எழுதறானுங்க. சுட்டுக்கு முன்னால வல்லெழுத்து மிகுங்குற சாதாரண இலக்கணமே தெரியலே. அங்கு கண்டான்னு எழுதறான். இவனெல்லாம் கவியாம்' என்று என்னைக் கூப்பிட்டுச் சொல்லித் திட்டுவார். நான் இதனைப் பாரதியாரிடம் சொன்னால் 'அங்குக் கண்டான்' என்று எழுதினால் நன்றாகவா இருக்கிறது என்று என்னைத் திருப்பிக் கேட்பார். நன்றாக இல்லாவிட்டால் என்ன? இலக்கணப் பிழையில்லாமல் எழுத வேண்டாமா? என்று நான் கேட்பேன், பாரதியார் பதிலுக்கு ஒரு சிரிப்புச் சிரிப்பார் அவ்வளவுதான்.'

**பாவேந்தர் நினைவுகள்: ப. 288**

பாரதியாருக்கு இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களில் நல்ல பயிற்சி உண்டு. ஆனால் தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்றவற்றில் நல்ல பயிற்சி இல்லை என்று



தெரிகின்றது. ஆனால் பாரதிதாசனுக்கு இலக்கணத்திலும், சங்க இலக்கியத்திலும் நல்ல பயிற்சி உண்டு. இலக்கணம் தொடர்பாகவும், சங்க இலக்கியம் தொடர்பாகவும் எழுந்த சண்டையில் பாரதியாருக்கு வெற்றி ஈட்டித் தரும் நண்பனாகப் பாரதிதாசன் விளங்கி இருக்க வேண்டும். இதனையே பாரதிதாசன்,

**'நானும் அவர்க்கே எழுத்தியல் உதவுமோர்**
**தொண்டினால் அவர்க்கும் புலவர்க்கும் தோன்றும்**
**சண்டையில் வெற்றி கண்டிடச் செய்தேன்'**

என்று குறிப்பிடுகின்றார் போலும். அண்மையில் வெளியான ஒரு செய்தி இதனை நன்கு உறுதிப்படுத்துகின்றது. இது 28.8.1988ஆம் நாள் வெளிவந்த 'தினகரன்' ஞாயிறு மலரில் காணப்படுகின்றது. இக்கட்டுரையை எழுதியவர் பாவேந்தரோடு புதுச்சேரியில் சிறிதுகாலம் தங்கியிருந்த சாமி. பழனியப்பன்.

'புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தில் ஒரு நாள் கடும் இலக்கிய சர்ச்சை; சர்ச்சையில் பங்கு பெற்றவர்களில் முக்கியமானவர்கள் பாரதியாரும், வ.வே.சு. அய்யரும். அங்கே அன்று சர்ச்சைக்குரிய பிரச்சனையாக இருந்தது 'உலக இலக்கியங்களில் உயர்ந்து நிற்பது தமிழா? பிரெஞ்சா?' என்பது.

'இந்த விவாதத்தில் பாரதியாரைத் தவிர வ.வே.சு. அய்யரும் மற்றவர்களும் 'பிரெஞ்சு இலக்கியமே சிறந்தது' என்று பேசினார்கள். பாரதியோ தன்னந்தனியராக நின்று 'தமிழே! தமிழே!' என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

'தமிழே! தமிழே!' என்று திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டால் போதுமா? தக்க ஆதாரங்களை எடுத்துக் கூறுங்கள் என்று எதிரணியினர் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

'மாலை சந்திக்கும் போது ஆதாரங்களை யாம் அடுக்கிக் காட்டுவோம்' என்று கூறியபடி கவியரசர் பாரதியார் அங்கிருந்து வெளியேறிவிட்டார்.'

அடுத்துப் பாரதியார் நேராகப் பாரதிதாசனைச் சந்தித்தார். சற்றுமுன் ஆசிரமத்தில் நடந்த சர்ச்சையைப் பாரதிதாசனிடம் எடுத்துக்கூறி 'சுப்பு! அவர்கள் பிரெஞ்சு இலக்கியமே சிறந்தது என்று ஒட்டுமொத்தமாகப் பேசுகின்றார்கள். நான் ஒருவனே அதை மறுத்ததோடு மாலைக் கூட்டத்தில் ஆதாரங்களுடன் வந்து

சந்திப்பதாகவும் சொல்லி வந்துவிட்டேன். என்ன செய்யலாம்?' என்று கேட்டிருக்கிறார்கள்.

உடனே பாவேந்தர் பாரதிதாசன் அங்கேயே உட்கார்ந்து சங்க இலக்கியங்களில் இருந்து வேண்டிய மட்டும் ஆதாரங்களை அள்ளி அள்ளி எடுத்துத் தந்திருக்கின்றார். மிக்க மகிழ்வுடன் அத்தனை ஆதாரங்களையும் எடுத்துச் சென்ற பாரதியார் மாலையில் ஆசிரமம் சென்று திரும்பியபோது வெற்றிப் புன்னகையுடன் வந்தாராம்.

பாவேந்தரே பின்னாளில் என்னிடம் கூறிய சம்பவம் இது.

பொதுவாகப் பாரதியாருக்குச் சங்க இலக்கியங்களில் அவ்வளவாகப் பரிச்சயமில்லை என்று ஆய்வாளர்கள் சிலர் கூறியிருப்பதையும், இரசிகமணி டி.கே.சி. அவர்களும் இதே கருத்தைத் தம் நூல் ஒன்றில் குறிப்பிட்டிருப்பதையும் அதற்குப் பின்தான் படிக்க நேர்ந்தது.'

சாமி. பழனியப்பன்
'பாரதிக்குத் துணை நின்ற பாரதிதாசன்'

இவ்வாதாரத்தைத் துணையாகக் கொண்டு பார்க்கின்ற பொழுதும் பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் இடையில் நிலவிய நட்பு கொண்டும் கொடுத்தும் வாழ்ந்த உரிமை நட்பே என்பதில் ஐயமில்லை.

வேறு சில இடங்களில் பாரதியாரைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் பாவேந்தர் தனக்கும் அவர்க்கும் உள்ள உறவு ஆண்டான் அடிமை உறவே என்பதைப் போல எழுதுகின்றார். இந்நிலையில் கவிஞர் சுரதா அவர்கள் குறிப்பிடும் ஒரு செய்தி வியப்பூட்டுவதாக உள்ளது.

'பாவேந்தர் ஒரு நாள் வெண் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்த போது 'இதோ இருக்கிறதே சிகரெட்டு இதைப் பாரதியார் முன்னாலேயும் பெரியார் முன்னாலேயும் தான் குடிக்க மாட்டேன். இந்த இரண்டு பேர் தவிர எவர் முன்னாலேயும் நான் சிகரெட்டை மறைத்தது கிடையாது. ஏனென்றால் இரண்டு பேரும் நிரம்பப் பெரியவர்கள். பாரதி போயிட்டார். இவர் இருக்கிறார்.



இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? ஆண்டான் அடிமை, அல்லது தலைவர் தொண்டர் உறவு தான் பாரதிக்கும் தனக்கு உள்ள உறவு என்று பாவேந்தர் கருதினார் எனக் கொள்ளுமாறுள்ளது. அப்படி என்றால் கொண்டும் கொடுத்தும் வாழ்ந்த நட்பாக முன்னர்க் கூறியது பிழையா? என்றால் இல்லை. பின்னர்க் கூறியது உணர்ச்சி வயப்பட்ட நிலையில், முன்னக் கூறியது வரலாற்றுண்மையை வெளிப்படுத்திய நிலையில், ஆதலின் பிற்கூறியதை விட முற்கூறிய செய்தியே வலுவானது என நாம் கொள்ள வேண்டும்.

தாசன் என்ற வடமொழிச் சொல் தனக்குக் கசப்பானது என்ற போதிலும் தன்னைப் பாரதிதாசன் எனப் பிறர் அழைப்பதையே பாவேந்தர் விரும்பியிருக்கின்றார். அவருடைய விருப்பம் பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் ஒருவர் தன்னை வேறு ஒருவரின் தாசன் என்று கூறிக் கொண்டால் அந்த 'வேறு ஒருவரின்' கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றைப் பின்பற்றுபவராக இருக்க வேண்டும். வள்ளலார் தாசன் என்று தன்னை அழைத்துக் கொள்பவன் நாள்தோறும் புலால் உண்பவனாக இருந்தால் அவன் வள்ளலார்தாசன் ஆவானா? பெரியார் தாசன் என்று பெயரிட்டுக் கொள்பவன் மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடப்பவனாக இருந்தால் அவன் பெரியார் தாசன் ஆவானா?

உயிர் இரக்கம் உள்ளவன்தான் வள்ளலார்தாசன் ஆக முடியும். பகுத்தறிவு நெறியைப் பற்றி வாழ்பவன் தான் பெரியார்தாசன் ஆக முடியும். வள்ளலார் பாடலை வாயினாற் சொன்னவனும், பெரியாரின் பேச்சொன்றைக் கேட்டவனும் அந்த அளவிலேயே வள்ளலார் தாசனும் பெரியார்தாசனும் ஆகிவிட முடியாது.

பாவேந்தர் தன்னைப் பாரதிதாசன் என்று அழைத்துக் கொண்டால் பாரதியாரின் உயிரான கொள்கைகளை ஏற்றுக் கொண்டவராக இருக்க வேண்டும். பாரதியாரின் சிந்தனைப் போக்கு பாவேந்தரின் பாடல்களில் வெளிப்பட்டு நிற்க வேண்டும். அப்படி இருக்கின்றதா? அதுதான் பாவேந்தரே கூறிவிட்டாரே?

'பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுவதும் கண்டபின் கடைசியாய்ச்

சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்'

என்று. பிறகு உனக்கேன் ஐயம்? என்று சிலர் வினவக்கூடும். வழக்கு மன்றத்தினுள் ஒருவன் திடீரென்று நுழைந்து 'நானே குற்றமிழைத்தவன்' என்று கூறினால் அதனை அப்படியே வழக்கு மன்றம் ஏற்றுக்கொள்வதில்லை. தான் குற்றவாளியே என்பதனை அவன் மெய்ப்பிக்க வேண்டும். பிறகுதான் வழக்கு மன்றம் ஏற்றுக்கொள்ளும். இங்குப் பாவேந்தர் தான் பாரதிக்குத்தாசனே என்று சொல்வது முற்றும் பொருந்துமா? ஒரு பகுதிதான் பொருந்துமா? அப்பெயர் உணர்ச்சிவயப்பட்ட சூழலில் வைத்துக் கொண்ட பெயரா? உள்ளார்ந்த மாறா உணர்ச்சியொத்த நிலையில் வைத்துக்கொண்ட பெயரா? அந்த ஒத்த உணர்ச்சி இறுதிவரை இருந்ததா? என்பனவற்றைக் கண்டறிவதும் நம் கடனாகும்.

ஒப்பிலக்கிய ஆய்வு இக்காலத்தே பெரிதாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. வெவ்வேறு சூழலில் வெவ்வேறு நாடுகளில் தோன்றிய இலக்கியங்கள் எவ்வாறு ஒற்றுமை கொண்டுள்ளன என்று ஆராய்ந்து பார்ப்பதும், ஒரே நாட்டில் ஒரே சூழலில் தோன்றிய இலக்கியங்கள் எவ்வாறெல்லாம் வேறுபட்டிருக் கின்றன என்று காண்பதும் ஒப்பிலக்கிய ஆய்வின் அடிப்படை யாகும்.

முதல்வகை ஆய்வில் காலத்தால், இடத்தால், சூழலால் வேறு பட்டிருந்தாலும் மனிதகுலம் ஒருவிதையிலிருந்து தோன்றியது தான் என்பதும், அவர்கள் புறத்தோற்றத்தால், நாகரிகத்தால் வேறுபட்டிருந்தாலும் மனித உணர்வில், சிந்தனைப் போக்கில் ஒன்றுபட்டே இருப்பர் என்பதும் வெளிப்படுத்தப்படும் இரண்டாவது வகை ஆய்வில் ஒரே இடத்தில், ஒரே காலத்தில், ஒரே சூழலில் தோன்றிய இலக்கியங்கள் நோக்கிலும், போக்கிலும், வெளிப்பாட்டுத் திறத்திலும் எப்படி எல்லாம் வேறுபட்டிருக்கின்றன என்பது வெளிப்படுத்தப்படும். முதல் வகையில் மானுட வர்க்கத்தின் பொதுமைகள் கண்டறியப்படும். இரண்டாவது வகை ஆய்வில் படைப்பாளிகள் தனித்தன்மைகள் கண்டறியப்படும், இவ்விரு வகையும் ஒப்பிலக்கிய ஆய்வுதான்.

முற்கூறியது ஒரு நாணயத்தின் தலை என்றால் பிற்கூறியது அந்நாணயத்தின் பூ என்று கூற வேண்டும். பூவும் தலையும்



தனித்தனியே இருந்தாலும் அவை பிரிக்க முடியாதபடி ஒரு நாணயத்தில் தான் அமைந்துள்ளன. ஆக ஒற்றுமையை உரைத்தாலும் வேற்றுமையை விளம்பினாலும் ஒப்பிட்டுத்தான் கூறவேண்டியுள்ளது.

ஒப்பிலக்கிய ஆய்வில் விருப்பு வெறுப்புகளுக்கோ உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கோ இடமில்லை. பாரதியாருக்கும் பாவேந்தருக்கும் இன்னதென எடுத்துரைக்க முடியாத பாசப் பிணைப்புகள் இருந்திருக்கலாம். அவற்றை எல்லாம் நாம் சான்றாதரங்களாக எடுத்துக்கொள்ள முடியாது. அவர்கள் எழுதியவைகள், பேசியவைகள், அவர் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆகியவைதாம் சான்றுகளாக முடியும். பாரதிதாசனே உயிர் பெற்று வந்து 'நான் பாரதிதாசன்தான், இதனை ஆராய வேண்டிய தில்லை' என்று கூறினால் அதனையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது தான். பாரதியாரும் பாவேந்தரும் எழுதிவைத்துச் சென்றுள்ள இலக்கியக் கருவூலத்திற்குள்ளே நாம் நுழைவோம். பாவேந்தர் பாரதியார்க்குத் தாசன் தானா? என்பதற்கான ஆதாரங்களைத் திரட்டுவோம். 'குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகைநாடி, மிக்க கொளல்' என்பதற்கேற்ப இறுதியில் ஓர் உறுதியான முடிவிற்கு வருவோம்.

## 2. பத்தாண்டுத் தொடர்பு

பாரதியாரைப் போலவே பாவேந்தரும் தம் சின்னஞ் சிறு வயதிலேயே கவிதை பாடத் தொடங்கியவர், தொடக்கத்தில் எல்லாக் கவிஞர்களையும் போலவே பக்திப் பாடல்களையும், காதற் பாட்டுக்களையும் மிகுதியாகப் பாடிக் கொண்டிருந்தார். கவிஞன் என்றால் இவ்விரண்டையும் பாட வேண்டும் என்பது அவர் காலத்தில் எழுதாச் சட்டமாக இயங்கிக் கொண்டிருந்தது.

ஒரு முழுமையான குறிக்கோளில் பாவேந்தர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாத காலம். ஒரு குறிக்கோளுக்காகவே கவிதையைப் பயன்படுத்த வேண்டும் என்ற வரையறைக்குள் இயங்கத் தொடங்காத நேரம். இக்காலகட்டத்தில் தான் பாரதியார் புதுச்சேரிக்கு வருகின்றார்.

புதுச்சேரிக்கு வந்தபோது பாவேந்தர் பாரதியாரை நேரிடையாக அறிந்திருக்கவில்லை; ஆனால் அவருடைய பாடல்களை இதழ்களின் வாயிலாக அறிந்திருந்தார். இதனை அம்மாக் கண்ணுவின் மகனார் வேணுநாயகரின் திருமண வீட்டில் பாரதியாரின் 'வீரசுதந்திரம் வேண்டி நின்றார்' என்ற பாடலைப் பாவேந்தர் பாடியதிலிருந்தும், அன்று தான் இருவரும் நேரிடையாக அறிந்து கொண்டனர் என்ற செய்தியிலிருந்தும் தெரிந்து கொள்கின்றோம். முதன் முதலாகப் பாரதியாரோடு தொடர்பு பாவேந்தருக்கு அன்றுதான் ஏற்பட்டது. ஆனால் பாரதியார் பாடலோடு உள்ள தொடர்பு அதற்கு முன்பே ஏற்பட்டுவிட்டது. பின்னர்ப் பாரதியார் பாவேந்தரைத் தம் இல்லத்திற்கு அடிக்கடி வந்து செல்லுமாறு வேண்டுகின்றார். பாவேந்தரும் மிகுந்த விருப்பத்தோடு பாரதியார் வீட்டிற்குச் சென்று வந்தார். நட்பு மேலும் இறுக்கம் பெற்றது.

இந்த இறுக்கத்தின் விளைவாகப் பாரதியாரின் குறிக்கோள்கள் பாவேந்தரின் குறிக்கோள்களாகி விட்டன. விடுதலை இயக்கத்தில் பாவேந்தர் தன்னையும் ஈடுபடுத்திக் கொள்கின்றார். இதோ பாவேந்தரே கூறுகின்றார்.



'எனக்கு இளமையிலிருந்தே அரசியல் ஈடுபாடு அதிகம். காரணம் பாரதியார் தொடர்புதான்.'

பாவேந்தர் நினைவுகள், ப. 43

'பாரதியாரின் தோற்றமும் வெளிப்படையான போக்கும் என்னை அவர்பால் இழுக்கத் தொடங்கின. அவர் தொடர்பு என் பழக்க வழக்கங்களிலும், சிந்தனையிலும் என்னையறியாமலே சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அதைக் காலப் போக்கில் நானும் உணரத் தொடங்கினேன்.'

'அரவிந்தர், வ.வே.சு. அய்யர், பாரதி ஆகியோர் ஓயாமல் பேசிக் கொண்டிருப்பர்.... இப்புரட்சிக்காரர்களின் பேச்சைக் கேட்டு இளைஞனான என் உள்ளத்திலும் அப்போது தேசிய உணர்வும், புரட்சிக் கருத்துக்களும் வேர்விடத் தொடங்கின.

மேலது, ப. 87

இக்கூற்றிலிருந்து பாவேந்தர் சிறுகச்சிறுகப் பாரதியார் மயமாகிவிட்டார் என அறிகிறோம். தேசியம், புரட்சிக் கருத்துகள், தெய்வங்களைப் பாடுதல் ஆகிய மூன்றுங்கலந்த ஒரு கலவைதான் பாரதியார், பாரதியாரின் தாக்கத்தால் இம்மூன்றுங் கலந்த கலவையாக மாறிய கனகசுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறியதில் வியப்பேதுமில்லை. பாரதியார் அடிச்சுவட்டில் மூன்றுங் கலந்த கலவையாக மாறிய பாரதிதாசனார் எப்படி வீறு நடை போடுகின்றார் என்பதனைக் காண்போம்.

'பாருக்குள்ளே நல்ல நாடு-எங்கள்
பாரத நாடு!'

என்கிறார் பாரதியார்; அவர் தாசனாரோ,

'கலைகற்ற தாய், செல்வ
நிலைபெற்ற தாய், காடு
மலைபெற்ற தாய், எங்கள்தாய்-எனிற் பாரதத்தாய்
புலையற்ற தெய்வீகத்தாள்'

என்று பாரதத் தாயின் பெருமைகளைப் பாராட்டுகின்றார்.

பாரதியார் பாரத அன்னையைப் பராசக்தியாக உருவகம் செய்து பார்த்து மகிழ்கிறார். அந்த ஆனந்தத் துள்ளல் இதோ!

'முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடை வில்-எங்கள்

அன்னை பயங்கரி பாரத தேவிநல்
லாரிய ராணியின் வில்
இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்தவில் யாருடையவில்-எங்கள்
மந்திரத் தெய்வம் பாரத ராணி
வைரவி தன்னுடை வில்'

இவ்வாறு வெளிப்படுகின்றது. பாரதிதாசனாரும் பாரதத் தாயைப் பராசக்தியாகப் பாவித்துப் பாடுகின்றார். இதோ அப்பாடல்-

'காலப் பெருங்கடலில்-நாளும்
கரைந்த தோற்றமெலாம்
பாலப் பருவமுதல்-எங்கள்
பாரதத் தாய்அறிவாள்
நாலு திசைமுழுதும்-கொள்கை
நாற்பதி னாயிரத்தார்
ஆலின் கிளையவைகள்-என்னில்
ஆலின் மரம் இவள்தான்'

'முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மெய்ம்புற ஒன்றுடையாள்'

என்றார் பாரதி. பாரதிதாசனோ,

'முப்பது கோடி மக்கள் - பெற்ற
முதன்மைத் தெய்வீகத்தாள்'

என்கின்றார். தேசத்தந்தையாக விளங்கிய காந்தியடிகளுக்குப் பாரதியார்,

'வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மாநீ வாழ்க வாழ்க'

என்று வாழ்த்திசைக்கின்றார். தாசனாரோ சிட்டுக் குருவியை முன்னிறுத்திப் பாடிய பாடலில்,

'மன்னன் அடிமைப் பணியில்லான்
வாய்மைச் சிறகால் உலகேழும்
மன்னன் காந்திப் பெருமானார்
மகிழும் தோழி நீதானோ?''

என்று காந்தியடிகள் அடிமை விலங்கை உதறி யெறிந்தமையை வியப்போடு வெளிப்படுத்துகின்றார். மேலும் பாரதியாரின்



பாஞ்சாலி சபதம் பாரதிதாசனார் உள்ளத்தில் பெரியதோர் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை பாவேந்தர் பாடலால் அறியக் கிடைக்கின்றது.

'கண்ணன் அருச்சுனன் வில்விதுரன் அறங்
காத்தன ரேயந்த நாளிலே - எங்கள்
விண்ணின் மதியொத்த வாழ்வு நினைத்திடல்
வீரமுண் டாகுதென் தோளிலே,
'கற்பி னருந்ததி சீதைதி ரௌபதி
காதல நஞ்செயும் போதிலே - அவர்
பொற்புற நெஞ்சிற் சுவைநினைத் தால்இன்பு
போந்திடு மென்னுள மீதிலே'

'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் வெறும் சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்' என்று வருந்திய பாரதியார் அப்பஞ்சத்தைப் போக்க 'இனியொரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம். தனியொருவனுக்கு உணவில்லையெனில் செகத்தினை அழித்திடுவோம்' என ஆர்ப்பரிக்கின்றார்; இதே ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு பாவேந்தரின் எழுதுகோலிலிருந்து எப்படி வெளிப்படுகின்றது பாருங்கள்;

'ஏழைகள் கையிருப் புள்ளவர் என்னும்
இரட்டையைக் கொன்றிடுவோம்
கூழுக் கொருத்தன் அழும்படி ஆண்டிடும்
கோலை முறித்திடுவோம்.'

பாஞ்சாலச் சிங்கம் இலாலா லசபதிராய் விடுதலைக்காகப் பட்டதுயரங்கள் கொஞ்சமல்ல. அவர் சிறைப்பட்டிருந்த வேளையில் பாரதியார்.

விண்ணகத்தே இரவிதனை வைத்தாலும்
அதன்கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே ஒளிதருதல் காண்கிலமோ?
நின்னையவர் கனன்றிந் நாட்டு
மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்
யாங்களெலாம் மறக்கொ ணாதெம்
எண்ணகத்தே லாசபதி இடையின்றி
நீவளர்தற் கென்செய் வாரே'

என்று பாடுகின்றார்; பாரதிதாசனாரோ இலாலா லசபதி அவர்கள் பிணியுற்றிருந்த வேளையில் பெருகிவரும் தன் ஆற்றாமையை இப்படி இயம்புகின்றார்.

இன்றைக்கே லசபதிநோய் தீர்ந்த தென்றே
யாருரைப்பார் என்காதில்? அந்தோ நாட்டின்
நன்மைக்கே வினவறிந்த நாளாய் இந்த
நாள்வரைக்கும் உழைத்தவனை மறப்பதுண்டோ
குன்றைப்போல் கலங்காத வீரன் பல்கால்
கொடுஞ்சிறையில் பிறநாட்டிற் கொண்டு சேர்த்தும்
அன்றுபோல் சுதந்திரப்போர் இன்றும் நீங்கா
அருந்துணையைப் பிணிநலித்தால் நலியாருண்டா?

இதுவரை காட்டிய காட்டுக்களால் பாவேந்தர் எவ்வாறு பாரதியார் வசமாகிப் போனார் என்பது நன்கு புலனாகும். இன்னும் பாரதிதாசனார் பாடிய 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என்ற பாடலில் பாரதியாரின் சொல்லாட்சிகள், சிந்தனைப் போக்குகள் வியக்கத்தக்க வகையில் ஒத்திருக்கக் காணலாம். இந்தக் கருத்திணக்கம் பாரதியார் புதுவையை விட்டுச் சென்று பிறகும் பாரதிதாசனிடம் இருந்தது என்பதை அவர் பாடல்களைக் கற்பவர்கள் அறியலாம். 1924 வரையிலும் அவர் நூற்றுக்கு நூறு பாரதிதாசனாகவே வாழ்ந்தார். இக்காலத்தில் பாரதிதாசன் என்ற பெயர் காரணப் பெயராகவே அமைந்திருந்தது. 1924க்குப் பிறகு? பாரதியாரின் தாக்கம் பாவேந்த ரிடம் குறையைத் தொடங்குகிறது. 1930-ஆம் ஆண்டிற்குப் பிறகு பாவேந்தர் புதிய உருவத்துடன் வெளிவருகின்றார். பாரதிதாசன் என்ற பெயர் காரணப் பெயராகவே தொடர்ந்ததா? இடுகுறிப் பெயராக மாறிப் போய்விட்டதா என்பதை இனிமுறையாகக் காண்போம்.

---

இப்பகுதியில் வரும் பாவேந்தரின் பாடல்கள் அவர் மைந்தர் திரு. மன்னர் மன்னன் எழுதிய 'கருப்புக் குயிலின் நெருப்புக் குரல்' என்ற நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

## 3. நாடு பற்றிய நோக்கு

பாரதியார் பாரத நாட்டைத் தாய் நாடு என்ற போற்றியவர். 'பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள் பாரத நாடு' என்று ஏற்றிப் போற்றியவர் 'பாரததேசம் என்று பெயர் சொல்லுவார்' என்றும், 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்றும் இவ்விந்திய நாட்டை இசைத்து இசைத்துப் பெருமை கொள்கின்றார். இதே நேரத்தில் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று தமிழ் நாட்டையும் பாடத் தவறவில்லை.

பாரதிதாசனும் பாரத நாட்டையும் தமிழ் நாட்டையும் பாடுகின்றார். ஆனால் 1930க்குப் பிறகு பாரத நாட்டைப் பாடுவதை அடியோடு விட்டுவிட்டார். அதற்கு மாறாகத் திராவிட நாட்டைத் - தமிழ்நாட்டைப் பாடத் தொடங்கிவிட்டார்.

'வாழ்க வாழ்கவே வாழ்கவே
வளமார் எமது திராவிட நாடு
'திங்கள் வாழ்க! செங்கதிர் வாழ்க!
தென்றல் வாழ்க! செந்தமிழ் வாழ்க!
இங்குத் திராவிடம் வாழ்க மிகவே
இன்பம் சூழ்ந்த எங்கள் நாடு'

பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 2

'வாழ்க இளைஞனே வாழ்கநின் கூட்டம்
வாழ்க திராவிட நாடு
வாழ்க நின்வையத்து மாபுகழ் நன்றே'

மேலது தொகுதி 2

இதற்கு முன்னர் தான் பாடிக்கொண்டிருந்த பாரதநாடு தம் நாடில்லை, திராவிட நாடே நம்முடைய நாடு என்று வலியுறுத்து வதைப்போலப் பாடலின் இறுதியில் 'இன்பம் சூழ்ந்த எங்கள் நாடு' என்று முடிக்கின்றார்.

பாரதநாடு விடுதலை பெறவேண்டும், அதன் பயனை இந் நாட்டு மக்கள் நுகர வேண்டும் என்றெல்லாம் பாடிய பாவேந்தர் 1930ஆம் ஆண்டிற்குப்பிறகு பாடிய பாடலில் விடுதலையை முன்னிறுத்திப் பாடுகின்றார்.

உன்னைத்தான் விடுதலையே உள்ளத்தின் ஒளியே
ஓடிவா திராவிடத்தில் ஏசெஞ்சொற்கிளியே
தின்னத்தான் சோறில்லை; செம்மைக்கோர் வழியில்லை
என்போர்கள் இல்லாமே எல்லோர்க்கும் நலமருள்வாய்'

இசையமுது தொகுதி 2, ப.48

ஏன் திராவிடத்திற்கு விடுதலை வேண்டும் என்பதற்கான காரணத்தையும் கூறித் திராவிட நாட்டின் விடுதலையை வரவேற்றுப் பாடுகின்றார். மேலும்,

'இனப்பெயர் என்னென்று பிறன்எனைக் கேட்டால்
மனத்தில் எனக்குச் சொல்லொணா மகிழ்ச்சியாம்
நான்தான் திராவிடன் என்று நவில்கையில்
தேன்தான் நாவெலாம், வான்தான் என்புகழ்'

பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 2, ப. 91

இவ்வளவு இன்பவெறியோடும் மகிழ்ச்சித் துள்ளலோடும் பாவேந்தர் பாரதத்தைப் பற்றிப் பாடியதில்லை. இந்தப்பாடலின் உணர்ச்சிக் குவியலைப் பார்க்கிற பொழுது பாவேந்தருக்கு இருந்த 'பாரதப்பற்று' பாரதியாரால் ஏற்பட்டதேயன்றி இயல்பாக எழுந்ததில்லையோ என்ற ஐயத்தைக் கூடத் தோற்றுவிக்கின்றது.

திராவிடர் இயக்கம், மொழி, கலை, நாகரிகத் தொடர்புடைய தமிழரும் தெலுங்கரும், மலையாளியும், கன்னடரும், துளுவரும், மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்டு ஒரு கூட்டாட்சியை நிறுவ வேண்டும் என்ற கோட்பாட்டை வலியுறுத்த எழுந்த இயக்கமே என்பதை அறிவோம். அது அக்காலத்தில் இந்தியாவில் இருந்து பிரிந்து திராவிட நாடு தனிநாடு ஆதல் வேண்டும் என்று வலியுறுத்தி வந்தது. இதனை ஏற்றுக்கொண்டு விட்ட பாவேந்தர் திராவிட நாட்டையும் பாடுகின்றார். தமிழ் நாட்டையும் பாடுகின்றார். பாரதியார் பாரத நாட்டையும் தமிழ் நாட்டையும் பாடுகி ன்றார். பாரதிதாசனோ பாரதத்தைப் பாடுவதை



விட்டுவிட்டுத் திராவிட நாட்டையும் தமிழ் நாட்டையும் பாடுகின்றார். இதோ தமிழ்நாட்டை பாவேந்தர் பாடுகின்றார்.

'தமிழ் நாடுதான் மேலான நாடு
தமிழர்கெல்லாம் மற்றவை காடு
கமழ்தென் றலேநட மாடுநாடு
காவிரி நீள்வையை பாயும் நாடு'

இசையமுது தொகுதி - 2

'நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான்கண்டும்
ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான்தவறேன்'
'தமிழரின் மேன்மை இகழ்ந்தவ னையென்
தாய்தடுத் தாலும்விடேன்
எமைத்து வாயென எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் தொடேன்,

இசையமுது தொகுதி - 1

இவ்வாறு தமிழ்நாடு, தமிழர் பற்றி மிகுதியான பாடல்களைப் பாடியுள்ளார்.

திராவிடம், திராவிடர் என்ற சொற்களைக் கேட்டாலே பாரதியாருக்குப் பிடிக்காது. இது குறித்துப் பாடல்களிலே பாடவில்லை என்றாலும் கட்டுரைகளில் சில இடங்களில் குறிப்பிடுகின்றார். அது வருமாறு:

'திராவிடக் கட்சியார் என்றும் இஸ்லாமியக் கட்சியார் என்றும் யாரோ சிலர் செய்யும் பொய் மேளக் கச்சேரியை நாம் இகழ்ந்து நகைத்து காங்கிரஸ் முஸ்லிம் சங்கங்களே தேசத்துக்குப் பொது என்பதை ஒரே வார்த்தையாக எங்கும் நிலைநிறுத்த வேண்டும்!'

பாரதி நூல்கள் ப-117

'தமிழ் நாட்டிலேயும் இது போலவே ஜாதீய விரோதங்களை வளர்த்துவிட வேண்டும் என்று சில கயவர் பாடுபட்டு வருகின்றனர்.'

மேலது, ப- 351

'இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும். இங்ஙனம் நான் தமிழ் ப்ரதானம் என்று சொல்வதால் டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் கட்சியார் என்ற போலிப்பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்ய பாஷா விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று யாரும் நினைத்து விடலாகாது'

-மேலது, ப. 487

'ஸ்வராஜ்யம் கிடைத்தால் சட்ட சபையில் எல்லா ஜாதி மேதாவிகளும் கலந்திருப்பார்களாதலால் அந்த சபைகளின் மூலமாக இந்தியாவில் முதலாவது ராஜரீக வாழ்வில் சமத்துவக் கொள்கையை நிறுத்தி விடலாம். பிறகு சமூக வாழ்விலும் அக்கொள்கைதானே பரவிவிடும் இதை விட்டுப் பொய்யும் புலையுமாக திராவிடர்களென்றும் ஆரியர்களென்றும் உள்ள பழைய சொற்களுக்குப் புதிய அபாண்டமான அர்த்தங்கள் கற்பித்துக் கொண்டு வீண்சண்டைகள் வளர்ப்பதனால் ஹிந்து சமூகத்துக்கே கெடுதி விளையக் கூடும்.'

மேலது, பக் - 560-561

மேற்குறித்த எடுத்துக் காட்டுக்களில் பாரதியார் திராவிடம், திராவிடர் என்பன பற்றி எவ்வளவு கடுமையான கருத்துக் கொண்டிருந்தார் என்பது புலனாகின்றது. திராவிடம், திராவிடர் என அழைப்பவர்களைப் பொய்மேளக் கச்சேரி செய்வோர், கயவர், போலிப் பெயர் புனைந்த தேசவிரோதிகள், அபாண்டமான அர்த்தங்கள் கற்பித்துக் கூறுவோர் என்றல்லாம் கூறித் தாராளமாகத் தாக்குகிறார் இவ்வளவு வசவுகளையும் பாரதியார் வழங்கிய பிறகுதான் பாவேந்தர்.

'நான்தான் திராவிடன் என்று நவில்கையில்
தேன்தான் நாவெலாம் வான்தான் என்புகழ்'

என்று கூறுகின்றார் என்றால் நாடுபற்றிப் பாரதியார் பாரதி தாசனிடம் ஏற்றிய கருத்துக்கள் காலப் போக்கில் கரைந்து விட்டன என்று தானே பொருள். பாவேந்தர் பாரதியாரின் நாடு பற்றிய கொள்கையைக் கைவிட்டது மட்டுமில்லை; நாடு பற்றிய இவருடைய எதிர்க்கருத்தைத் தன் உயிர்க்கருத்தாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் என அறிகிறோம். பாரதியாரின் எச்சரிக்கையையும் மீறி ஏற்றுக் கொள்கிறார் என்றால் 1930க்குப் பிறகு இவரைப் பாரதி 'தாசன்' என அழைத்தல் தகுமா? இதோ பாரதியாரின் முரசு முழங்குகிறது.



'வெற்றி எட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே
வேதம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே
நெற்றி யொற்றைக் கணணனோடே நிர்த்தனம் செய்தாள்
நித்த சக்தி வாழ்க வென்று கொட்டு முரசே'

பாரதியாரின் முரசு என்ன சொல்லி முழங்குகிறது? வேதம் என்றும் வாழ்க என்று முழங்குகின்றது. சக்தி வாழ்க! ஆம் பராசக்தி வாழ்க என்று முழங்குகிறது. இனிப் பாரதி தாசனின் முரசு என்ன சொல்லி முழங்குகின்றது என்று பார்ப்போம்.

'எல்லார்க்கும் நல்லின்பம் எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்ததென்று கொட்டு முரசே! வாழ்வில்
கட்டுத் தொலைந்ததென்று கொட்டு முரசே!

(பாரதிதாசன் கவிதைகள் தொகுதி-2)

'அறிவுள்ள திராவிடர் நாட்டில் - சற்றும்
ஆண்மையில் லாதவர் வந்து
நமர்பசி கொள்ளநம் சோற்றை - உண்ண
நாக்கைக் குழைப்ப துணர்ந்தோம்
உயர்வென்று கொட்டுமுரசே!

(இசையமுது தொகுதி 1)

பாவேந்தரின் முரசு மக்களை முதன்மையாக வைத்து முழங்குகிறது பாரதியாரின் முரசோ வேதத்தையும் பராசக்தியையும் முதன்மைப்படுத்தி முழங்குகின்றது. இம்முரசுப் பாட்டில் பாரதியார் மக்களைப் பற்றியும் பாடுகின்றார். பாவேந்தரின் முரசுப்பாட்டோ மக்களைப் பற்றி மட்டுமே பாடுகின்றது. இப்பாடலில் பாரதியாரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆன்மீகச் சட்டையைப் பாவேந்தர் கழற்றி எறிந்துவிட்டுப் பாடுவதனைப் பார்க்கின்றோம். இந்த நிலையில் பாவேந்தரைப் 'பாரதிதாசன்' எனல் பொருந்துமா?

பாவேந்தர் தம் பழைய கொள்கைகளிலிருந்து விடுபடக் காரணம் என்ன? அத்துணைப் பற்று வைத்திருந்த பாரதியாரின் ஆறிக்கோள்களை எல்லாம் உதறிவிட நேர்ந்தது ஏன்?

பாவேந்தரிடம் தோன்றியது கருத்து வேறுபாடு அன்று, கருத்து முரண்பாடு, இம்முரண்பாடு முகிழ்க்கக் காரணம் என்ன? இவற்றிற்கெல்லாம் பாவேந்தரின் மைந்தர் திருவாளர் மன்னர் மன்னன் அவர்கள் 'கருப்புக் குயிலின் நெருப்புக் குரல்' என்ற நூலிலே விளக்கம் தருகின்றார்.

வ.வே.சு. ஐயரால் நடத்தப்பட்ட சேரன்மாதேவிக் குருகுலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் பொருள் உதவியோடு நடத்தப்பட்டது. அக்குருகுலத்தில் பயிலும் மாணாக்கர்களில் பார்ப்பனப் பிள்ளைகட்கு வேறிடத்திலும் பார்ப்பனர் அல்லாதார் வீட்டுப் பிள்ளைகட்கு மற்றோரிடத்திலும் வைத்து உணவிடப்பட்டது சாதிவேறுபாட்டுக்கு வித்திடப் பட்டது. இதனைக்கண்ட தந்தைபெரியார் பெருஞ்சினங் கொண்டார். இதனை எதிர்த்துப் பெருமளவில் பரப்புரை செய்தார். வ.வே.சு. அவர்களின் இரட்டை வேடம் பாவேந்தரின் மனமாற்றத்திற்குத் தேவையான விதையை விதைத்துவிட்டது.

அடுத்தபடியாகப் பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் அதன் சார்பில் வெளிவந்த 'குடியரசு' இதழும் பாவேந்தரின் முழுமன மாற்றத்திற்குத் துணையாக நின்றன. இதோ திருவாளர் மன்னர் மன்னன் அவர்களின் வினாவிற்குப் பாவேந்தரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த திலாசுப்பேட்டை கனகசபை கூறும் பதில்:-

'பத்திரிகை வாங்கியான்னாரு; குடியரசு கொண்டாந்து போட்டேன். படிச்சுப் பார்த்தாரு. அப்பெல்லாம் வெங்கடாசல நாயக்கர் பெரியகடை மார்க்கெட்டுக்குப் பக்கத்தில் உள்ள கடையில்தான் உக்காந்திருப்பாரு. குடியரசு படிப்பாரு. அதுக்கப்புறம் இந்தக் கதரையும் உட்டுட்டாரு; சாமியையும் உட்டுட்டாரு. இதைப் புடிச்சுக்கினாரு. அப்புறம் அடியோடு மாறிட்டாரு. அப்புறம் சாமியைப்பற்றி எழுதறதை எல்லாம் அடியோடு உட்டுட்டாரு.'

(கருப்புக்குயிலின் நெருப்புக்குரல், ப. 199)

மேற்காட்டிய செய்திகள் பாவேந்தரின் மனமாற்றத்திற்கான காரணத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. ஒடுக்கப்பட்ட தமிழர்களின் சார்பாக இனிக் குரல் கொடுப்பதே தன்னுடைய குறிக்கோள் என்ற முடிவிற்குப் பாரதிதாசனார் வந்து



விடுகின்றார். சுயமரியாதை இயக்கமே தான் வாழ வேண்டிய வீடு, பெரியாரே தலைவர் என்று தேர்ந்து தெளிகிறார். இந்திய தேசியம், ஆன்மீகம், இந்து சமூகம் என்ற திரைகளை அறுத்தெறிந்து விடுகின்றார். நாத்திகம், திராவிடத் தேசியம், தமிழ்ச் சமுதாயம் என்ற புதிய நோக்கங்களை ஏற்றுக்கொண்டு கடுமையாகக் கடைபிடிக்கத் தொடங்கி விடுகின்றார். அதனால் தான் மீண்டும் கேட்கிறோம். இனியும் பாரதி'தாசன்' என்ற பெயர் பொருந்துமா?

# 4. நூல்கள் பற்றிய மதிப்பீடு

பாரதியார் பழைமையைப் போற்றும் இயல்புடையவர். இந்த மண்ணையும் மண்ணில் வாழ்ந்த முன்னோர்களையும் வணங்கும் இயல்பினர். 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே; அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே' என்று பழம் பெருமை பாராட்டுபவர். இது போலவே இந்நாட்டிலே தோன்றிய நூல்களையும் கண்போற் கருதும் உளம் வாய்ந்தவர்.

'வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு-நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு

என்றும்,

'கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு'

என்றும் பாடி வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகியோரைப் போற்றுகின்றார். அதே நேரத்தில்

'பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே'

என்றும்,

'வேதமென்றும் வாழ்கவென்று கொட்டுமுரசே

என்றும் பாடி வேதங்களையும் உபநிடதங்களையும் போற்று கின்றார். செந்தமிழ்ப் பனுவல்களையும் வேத உபநிடதங்களையும் ஒன்றாகவே பாடுகின்றார். என்றாலும் வேத உபநிடதங்களில் அவருக்கிருக்கும் பற்று கொஞ்சம் தூக்கலாக இருப்பதுபோல் தெரிகின்றது. பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே என்றவர்



பார்மிசை ஏதொரு நூல் இது போலே என்று கேட்பதனால் இதனை அறிய முடிகின்றது. உலகத்திலேயே உபநிடதத்திற்கு இணையான நூல் வேறில்லை என்றால் ஏனைய நூல்களெல்லாம் உபநிடதத்தை விடத் தாழ்ந்தன என்று தானே பொருள். தமிழ் நூல்களை விட வடமொழி நூல்கள் மேலானவை என்று கருத்துப் பாரதியாருக்கு இருப்பதனை வேறொருசான்றும் உறுதிப்படுத்து கின்றது.

பாரதியாரின் உரைநடை நூல்களில் 'ஞானரதம்' என ஒரு பகுதி உள்ளதை யாரும் அறிவர். அதில் 'ஒரு பீடிகை' என்று போட்டுச் சில செய்திகளை எழுதுகின்றார் அதுவருமாறு:

''பின்மாலைப் பொழுது; திருவல்லிக்கேணி வீரராகவ முதலி தெருவில் கடற் பாரிசத்தை நோக்கியிருக்கும் ஒரு வீட்டு மேடையின் மீது சிரம பரிகாரத்தின் பொருட்டு ஓர் மஞ்சத்தின் மீது படுத்துக் கொண்டிருந்தேன். ஆனந்தகரமான கடற்காற்று நான் படுத்திருந்த முன்னறையிலே நான்கு பக்கங்களிலிருந்தும் கண்ணாடிச் சாளரங்களின் மூலமாகவும், புறக்கதவு நிலைகளின் மூலமாகவும் வந்து நிரம்பிய வண்ணமாக இருந்தது அந்தக் காற்றும் பின் மாலையொளியும் கலந்ததனால் உண்டாகிய தெளிவும் இன்பமும் என்னால் கூறிமுடியாது. 'ஆஹா! இப்போது போய் ஸ்நானம் செய்துவிட்டு, நேர்த்தியான ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு கடற்கரையோரமாகத் தெற்கே அடையாற்றுக்குப்போய், வழியெல்லாம் காளிதாசனுடைய சாகுந்தலத்தையேனும் அல்லது, ஓர் உபநிஷத்தையேனும் கொண்டு போய்ப்படித்து இன்ப மடைந்து திரும்பினால் நல்லது என்று சிந்தனை உண்டாயிற்று.''

ஓர் இன்பமான சூழ்நிலையில் படிப்பதற்குப் பாரதியார் தேர்ந்தெடுக்கும் நூல் எது? சாகுந்தலம், உபநிடதம், இவை இரண்டும் தமிழ் நூல்களா? இல்லை; வடமொழிநூல்கள். பாரதியார் தமிழைத் தாய்மொழி என்றுதான் கூறுகின்றார். ஆனால் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது வடமொழி நூல்களே உயர்வானவை என்பதை நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஒப்புக்கொள்கின்றார். இதற்கு என்ன காரணம்? பரம்பரை யாகவும் அவர்க்கு வடமொழி தாய்மொழியாக அமைந்தது. தமிழகத்திலே பிறந்ததனாலே தமிழும் தாய்மொழியாகிவிட்டது. இரண்டையும் தாய்மொழிகளாக ஏற்றுக் கொண்டமையால்

'இரண்டு கன்றினுக்கு இரங்குமோர் ஆ போல்' இருக்கின்றார். மேலும் அவர் காசியில் தங்கியிருந்த போது நல்ல வடமொழிப் புலமை அவருக்குக் கிடைக்கின்றது. தமிழைவிட வடமொழியில் அவர்க்கு நல்ல புலமையுண்டு என்று கூறினால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. இதனால்தான் தமிழைவிட அவருடைய வடமொழிச் சார்பு மிகுதியாக உள்ளது. ஆகவே வேதங்களும், உபநிடதங்களும், சாகுந்தலமும் அவருடைய அடிமனம் வரை ஆழ்ந்து கிடக்கின்றன.

அதுசரி நூல்களிலே சிறந்தன உபநிடதங்களும், வேதங்களும், சாகுந்தலமுமே என்று சொல்வதனை அவருடைய தாசன் ஏற்றுக் கொள்கிறாரா? ஏற்றுக் கொண்ட காலம் ஒன்று உண்டு. அது பொய்யாக் கனவாய்ப் பழங்கதை யாகப்போய்விட்டது. பாவேந் தருக்கு எது உயர்வான நூலாக விளங்குகின்றது!

'நூலைப்படி – சங்கத்தமிழ்
நூலைப்படி – முறைப்படி
நூலைப்படி –
காலையிற்படி கடும்பகல்படி
மாலை இரவு பொருள்படும்படி'

என்று சங்கத்தமிழ் நூல்களே உயர்வான நூல்கள் என்று அறுதி யிட்டுக் கூறுகின்றார். கட்டுக் கதைகளாக விளங்கும் புராண, இதிகாச நூல்களை ஒப்புக்கொள்ள முடியாது என்றும் கூறுகின்றார்.

'பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள நூல்களை ஒப்புவதெப்படி'

பாரதியார் உபநிடதங்களைப் பற்றிக் கூறும்போது 'பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே - பார்மிசையே தொரு நூலிது போலே' என்று கூறியதனைப் பார்த்தோம். 'பார்மிசை யேதொரு நூலிது போலே' என்ற தொடருக்கு இணையான தொடர் ஒன்றைப் பாவேந்தர் திருக்குறள் பற்றிக் கூறும் பொழுது குறிப்பிடுகின்றார்.

'வெல்லாத தில்லை; திருவள் ளுவன்வாய் விளைத்தவற்றுள்
பொல்லாத தில்லை; புரைதீர்ந்த வாழ்வினி லேயழைத்துச்



செல்லாத தில்லை; பொதுமறையான திருக்குறளில்
இல்லாத தில்லை; இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே'

முப்பாலுக்கு இணையான நூல் வேறு எதுவும் கிடையாது என்று அடித்துச் சொல்லுகின்றார். பாரதியாருக்கு உபநிடதத்திற்கு இணையான நூல் இல்லை. பாவேந்தருக்கோ திருக்குறளுக்கு இணையான நூல் இல்லை. ஒரு சிறந்த நூலைத் தேர்ந்தெடுப்பதில் கூடப் பாரதியார் வழியைப் பின்பற்றாத பாவேந்தரைப் 'பாரதிதாசன்' என்று கூறுதல் பொருந்துமா என்ற ஐயம் மேலும் வலிவு பெறுகின்றது.

பாரதியார் 'வேதமென்றும் வாழ்கவென்று கொட்டுமுரசே' என்று பாடியதோடு அமைந்து விடவில்லை. பதஞ்சலி யோக சூத்திரத்தையும் வேத இருடிகளின் பாடல்களையும் மொழி பெயர்த்துள்ளார். இதனைப் பாரதி நூல்கள், வசனங்கள் என்ற பகுதியிலே காணலாம். அவர் இவற்றை எல்லாம் மொழி பெயர்க்கக் காரணம் என்ன? அவை தமிழ் மக்கட்குத் தேவை என்று கருதியதுதான் காரணம். மேலும் அந்நூல்கள் உயர் வானவை என்று கருதியதும் மற்றொரு காரணம் ஆகும். இதிலிருந்தே அந்நூல்களில் அவர் கொண்டிருந்த பெரும்பற்று இனிது விளங்கும். அது சரி, இந்நூல்களைப் பற்றிப் பாவேந்தர் என்ன கருதுகின்றார். இதோ பாவேந்தர் பாடல்:

'வித்திப் பிழைக்கும் உழவனும் வேந்தனும் நாடனைத்தும்
ஒத்துப் பிழைக்க வழிகாட்டி வள்ளுவன் ஓதியநூல்
எத்துப் பழுத்தவர் ஏமாற்றும் ஆரியர் நான் மறைபோல்
அத்திப் பழமன்று; தித்திக்கும் முப்பழம் ஆம்படிக்கே'

நான் மறை யாருடையது? ஆரியருடையது; ஆரியர் எத்தகை யவர்? எத்துப் பழுத்தவர்; ஏமாற்றும் இயல்புள்ளவர். நான்மறை நூல் எத்தகையது? பிட்டுப் பார்த்தால் அத்தனையும் சொத்தை யாகவும், புழுநெளிவதாகவும் உள்ள அத்திப்பழம். இந்நூல் தமிழர்க்குரியதா? இல்லை ஆரியருக்கே உரியது. ஆனால் திருக்குறளோ முப்பழம். இது தமிழர்க்கே உரியது என்கிறார். வேத நூல்களைப் பற்றிய கருத்துக்களிற்கூட பாரதியாரோடு ஒத்துப் போகாத பாவேந்தரை எப்படிப் பாரதி'தாசன்' என்பது?

இனி, தேவாரம், திருவாசகம் இராமாயணம் போன்ற நூல் களை எதிர்ப்பதுபோல பாவேந்தர் காட்டிக் கொண்டாரேயன்றி

உண்மையில் எதிர்க்கவில்லை என ஒரு கருத்தைப் பேராசிரியர் அ.ச. ஞானசந்பந்தனார் 'பாரதியும் பாரதிதாசனும்' என்ற நூலிலே குறிப்பிடுகின்றார்.

பாவேந்தர் 'தமிழியக்கம்' என்ற நூலில் பாடிய சில பாடல்களை எடுத்துக்காட்டிப் பேராசிரியர் அ.ச.ஞா. அவர்கள் எழுதுகின்றார்.

'சொற்கோவின் நற்போற்றித் திருஅகவல்
செந்தமிழில் இருக்கும் போது
கற்கோவில் உட்புறத்தில் கால்வைத்த
தெவ்வாறு சகத்ர நாமம்?
தெற்கோதும் தேவாரம் திருவாய்நன்
மொழியான தேனி ருக்கச்
செக்காடும் இரைச்சலென வேதபா
ராயணமேன் திருக்கோ யில்பால்'

'இப்பாடலில் மாணிக்கவாசகப் பெருமானுடைய போற்றித் திருஅகவலையும், திருவாய்மொழி ஆகியவற்றையும் தமிழ்த்தேன் என்று கூறுகின்றார்.'

'கம்பனுடைய இராமாயணம் நாட்டுக்குப் பெருந்தீங்கு விளை வித்தது என்றகருத்தைப் பல இடங்களிலும் கூறிச் சென்றுள்ளார்.'

'பன்னீ ராயிரம் பாடிய கம்பனும்
இப்போது மக்கள்பால் இன்தமிழ் உணர்வை
எழுப்பிய துண்டோ? இல்லவே இல்லை'

என்பதும் அவருடைய வாக்குத்தான், சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்ற கவிதையில்.

'இராமா யணமென்ற நலிவு தருங்கதை
பூமியில் இருப்பதை இப்பொழுதே அறிந்தேன்
நம்பத் தகாதவெலாம் நம்ப வைக்கும்'

என்றெல்லாம் பாடியவர் கம்பராமாயணப் பாடல்களை ஆய்ந்து வெளியிட்ட இரசிகமணி டி.கே.சி. அவர்கள் பலபாடல்களை இடைச் செருகல்கள் என்று கூறிப் புதிய பதிப்புப் போட்டதற் காகச் சீறுகின்றார்.

'கம்பனார் பதினோரா யிரம்பாட்டில்
முக்காலும் கழித்துப் போட்டு



நம்பினால் நம்புங்கள் இவைதாம்கம்
பன்செய்யுள் எனஅச் சிட்டு
வெம்புமா றளிக்கையிலும் மேவாத
செயல்இதனைச் செய்ய இந்தக்
கொம்பன்யார் எனக்கேட்க ஆளில்லை
யாபுலவர் கூட்டந் தன்னில்'

'உண்மையில் கம்பராமாயணத்தை வெறுப்பவர் அந்நூலின் அளவை ஒருவர் குறைத்தால் 'அது ஒழிந்தது' என்று மகிழ வேண்டியதற்கு பதிலாக ஏன் சீற வேண்டும்'

பாரதியும் பாரதிதாசனும், ப 87 - 89

இவ்வாறு சீறுவதனாலேயே தேவார, திருவாசக, இராமாயணங் களின் மீது அவருக்கு உண்மையில் வெறுப்பில்லை என்றும், அவற்றின் மீது பற்று உண்டென்றும் எழுதுகிறார்.

தந்தை பெரியார் அவர்கள் கோயிலுக்குப் போகாதே என்று கூறுபவர்தாம், கடவுள் இல்லை என்பவர் தாம். ஆனால் கோயிற் கருவறைக்குள் செல்லும் உரிமை எல்லோருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறினாரே எதற்காக? தமிழனுக்குள்ள உரிமை தரப்பட வேண்டும் என்பதற்காகத்தான். பார்ப்பனரின் ஆதிக்கம் கோயிலை விட்டு வெளியேற வேண்டும் என்பதற்காகத்தான். இதைவிடுத்துப் 'பெரியார் இவ்வாறு கோயில் கருவறைக்குள் செல்லும் உரிமை வேண்டும் என்ற கேட்பதனால் அவருடைய அடிமனத்தில் 'பக்தி' மறைந்திருப்பதனை அறியலாம், என்று யாரேனும் கூறுவார்களேயானால் அது குதர்க்க உரையாக இருக்கலாம்; உண்மை உரையாக இருக்க முடியாது. இதே உணர் வோடுதான் பாவேந்தரும் தேவாரத்தையும் திருவாசகத்தையும், இராமாயணத்தைப் பற்றியும் பாடுகின்றார்.

போற்றித்திரு அகவலும், தேவாரமும் கோயிலில் இடம் பெற்றால் தமிழ் தனக்குரிய இடத்தைப் பெற்றது என்று பொருள் தமிழ்த்தாய் கோயிற்கருவறைக்குள் செல்லும் உரிமை பெற்றாள் என்று பொருள். சகத்ரநாமம் கோயிலிலே இடம் பெற்றால் ஆரியர் ஆதிக்கம் தொடர்கிறது என்று பொருள். தமிழில் எல்லை யற்ற பற்றுடையவராகிய பாவேந்தர், கோயிலில் தமிழ் இடம் பெற வேண்டும் என்று பாடியதில் வியப்பேதும் இல்லை. எந்த உட்பொருளும் இல்லை. இதனால் தான் 'யானோதும் தேவாரம்

திருவாய் நன் மொழியான தேன்' என்று கூறாமல் 'தெற்கோது தேவாரம் திருவாய் நன் மொழியானதேன் என்று குறிப்பி கின்றார் திருவாசகத்தைத் தேன் என்பது சைவமரபு. தே யாருக்கு? தெற்கில் ஓதிக் கொண்டிருக்கும் சைவர்களுக்கு தமிழைக் கோயில் கருவறைக்குள் கொண்டு வரும் போரா டத்தில் சைவர்களும் பங்கு பெற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தத்தான் இவ்வாறு பாடுகின்றார் 'சைவர்களே! உங்க திருவாசகத்தேன் ஒதுக்கித் தள்ளப்பட்டு வேதபாராயண கோலோச்சுகிறது. உங்கள் போற்றித்திரு அகல் உயிரோ இருக்கும் போதே சகத்ர நாமம் கோயிலுக்குள் குடியேறிவிட்ட அவற்றைத் துரத்துங்கள் என்றகருத்தை விளக்கத்தான் இவ்வா பாடினாரேன்றி தேவார திருவாசங்களின் மீது கொண் பற்றினால் அன்று.

இனி இராமாயணப் புதிய பதிப்புப் பற்றி டி.கே.சி.யை ஏ கண்டிக்க வேண்டும்? இராமாயணத்தின் அளவைக் குறைந்தா 'அது ஒழிந்தது' என்று மகிழத் தானே வேண்டும்! ஏன் சீறுகிறா என்று கேட்கிறார் பேராசிரியர் அ.ச.ஞா. அவர்கள்.

அது ஒழித்தது என்றால் பாவேந்தர் மகிழ்ந்துதான் இருப்பா டி.கே.சி.யின் முயற்சி கம்பராமாயணத்தை ஒழிக்கும் முயற் யன்று. அதனை ஓங்கச் செய்யும் முயற்சி என்பதனால்தா சீறுகின்றார். சில நூறு பாடல்களை அகற்றி விடுவதால் இராம யணம் ஒழிந்து போய்விடும் என்று எப்படித்தான் நம்புகின்றாரே பேராசிரியர். கம்பராமாயண எதிர்ப்பாளர் ஏன் எதிர்க்கிறோ என்பதற்குச் சில காரணங்களைத் தெரிவிக்கின்றனர்:

1. தமிழ் இன உணர்வை அழிப்பது; தாழ்த்துவது.
2. வடபுலத்து இராமனைத் தெய்வமாக்குவது.
3. ஆபாசங்கள் மலிந்தது.

கம்பராமாயண எதிர்ப்பாளர்கள் அதில் உள்ள ஆபாசங்கள எடுத்துக்காட்டியபோது மக்களுக்கு இராமாயணத்தின் மீ இருந்தபற்று கொஞ்சம் சரியத் தொடங்கியது. மேலு ஆபாசங்கள் எடுத்துக்காட்டப்பட்டபோது கம்பராமாயண சொற்பொழிவாளர்களுக்கு இடையூறாகவும், மறுப்புச் சொல் வது கடினமாகவும் இருந்தது. இதனைத் தவிர்க்க ஆபாசம் மி பாடல்களை அகற்றிவிட்டால் இராமாயண எதிர்ப்பின் கூர்



மையைச் சற்றே மழுக்கி விடலாம் அல்லவா? ஆகவே தான் டி.கே.சி. ஒரு புதிய பதிப்பைப் போட்டார். இதன்மூலம் இராமனைத் தெய்வமாக்கும் பணி தடையின்றி நடக்கும். இதனை நன்கு அறிந்து கொண்டதனால்தான் பாவேந்தர் கம்பராமாயணப் புதிய பதிப்பைக்கண்டு சீறுகின்றார். இந்த உண்மையை மறைத்து இராமாயணத்தில் பாவேந்தருக்குப் பற்று உண்டு என்பது போல எழுதுதல் முறையன்று.

பேராசிரியர் அ.ச.ஞா அவர்கள் பாவேந்தருக்குக் கடவுட் பற்றும் கூட உண்டு என்று புதிய கரடி ஒன்றையும் கட்டவிழ்த்து விடுகின்றார். இதோ அவர் கூற்று' 'இறுதியாக ஒன்றை நன்கு மனத்தில் இருத்த வேண்டுகிறேன். புரட்சிக் கவிஞர் பாரதி தாசனார் தெய்வ நவம்பிக்கையோ சமய நம்பிக்கையா இல்லாதவர் என்று நினைப்பதை விடப் பெருந்தவறு அவருக்கும், தமிழுக்கும், தமிழருக்கும் தமிழ்ப்பண்பாட்டிற்கும் வேறு செய்ய முடியாது.'

(பாரதியும், பாரதிதாசனும் பக் 99 - 100)

'அனைத்தையும் கடந்து நிற்கின்ற முழுமுதற் பொருளை இன்று பலரும் நாத்திகர் என்று வாய் கூசாமற் சொல்கின்ற புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பார்திதாசனார் இதோ பாடுகிறார்.'

'சீருடைய நாடு - தம்பி
திராவிடநன் னாடு
பேருடைய நாடு - தம்பி
பெருந்திராவி டந்தான்
ஓர்கடவுள் உண்டு - தம்பி
உண்மைகண்ட நாட்டில்
பேரும்அதற் கில்லை - தம்பி
பெண்டும்அதற் கில்லை
தேரும்அதற் கில்லை - தம்பி
சேயும்அதற் கில்லை
ஆரும்அதன் மக்கள் - அது
அத்தனைக்கும் வித்து
உள்ளதொரு தெய்வம் - அதற்
குருவமில்லை தம்பி'

(பாரதியும், பாரதிதாசனும் பக் -101)

ஆகவே பாவேந்தருக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு என்கிறார் பேராசிரியர். பாரதிதாசனார் பாடிய கடவுளுக்குப் பேரில்லை; பெண்டில்லை; தேர் இல்லை; சேய் இல்லை உருவமும் இல்லை. இவையெல்லாம் இல்லாத கடவுளை மக்கள் ஏற்றுக் கொண்டிருக் கிறார்களா? தேவாரமும் திருவாசகமும் இராமாயணமும் கடவுளின் பேரைக் கூறவில்லையா? பெண்டுபற்றிக் கூற வில்லையா? தேர், சேய் பற்றிக் கூறவில்லையா? இவ்வாறு கூறப்பட்டிருந்தால் அவை உண்மைக் கடவுட் கொள்கைக்கு மாறானவை என்று கூறி அந்நூல்களை எதிர்க்கத் தொடங்கு வாரா?

பாவேந்தர் இங்கே தெய்வம் என்று குறிப்பிடுவது இயற்கையையும் அதன் இயக்கத்தையும் தான். "ஆரும் அதன் மக்கள் - அது அத்தனைக்கும் வித்து' என்று பாடுகின்றார். இயற்கையையும் அதன் இயக்கத்தையும் பாவேந்தர் 'அழகின் சிரிப்பு' என்ற நூலில் அழகொழுகப் பாடுகின்றார். இயற்கையும் அதன் இயக்கமும் கடவுள் என்றால் அழகின் சிரிப்பைக் கடவுள் பனுவல் என்று சைவ, வைணவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? 'வெளியிலே தண்ணீர் என்பார் வீட்டிலே தூத்தம் என்பார்' என்று பாவேந்தர் கூறுவது போல இராமாயண, பெரிய புராணச் சொற்பொழிவுகளின் போது பேரும், பெண்டும், சேயும் உள்ள கடவுளரைப் போற்றுவதும் பாவேந்தர் பாடலுக்கு விளக்கும் சொல்லும்போது வேறு மாதிரியாக உரைப்பதும் முறையன்று.

இனிப்பேராசிரியர் 'எதிர்பாரத முத்தம்' என்ற பாவேந்தர் நூலில் உள்ள குமரகுருபரர் வரலாற்றில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் அரங்கேறிய போது மதுரை மீனாட்சி சிறுமியாக வந்து நின்றதையும் குருபரர் பாட்டைக் கேட்டு இன்புற்றதையும் கூறிப் பின்னர் அக் கூட்டத்தைவிட்டு அச்சிறுமி மறைந்ததனை

கூட்டத்தில் இல்லை அந்தக்
குழந்தையாம் தொழும்சீ மாட்டி

என்று பாடியதனையும் எடுத்துக் காட்டிப் பாவேந்தருக்குச் சமய நம்பிக்கை உண்டு என்கின்றார். கடவுள் நம்பிக்கை இல்லாதவரா 'தொழும் சீமாட்டி' என்ற சொல்லைப் போட்டிருப்பார் என்றும் வினவுகின்றார்.



'எதிர்பாராத முத்தம்' என்ற தன்னுடைய நூலில் குமர குருபரரையும் ஒரு பாத்திரமாகக் கொண்டு வருவது என்று முடிவு செய்து விடுகின்றார் பாவேந்தர். ஆகவே குருபரர் பற்றி வழங்கும் செவி வழிச் செய்திகளையும் நூல் ஆதாரங்களையும் இணைத்துப் பாடுகின்றார். இவற்றை எல்லாம் விலக்கிவிட்டு அவர் பாடினால் அது மக்கள் நம்பிக்கொண்டிருக்கின்ற குமரகுருபரர் வரலாறு ஆக இருக்காது. வேறு யாரோ ஒருவர் வரலாறு போல் ஆகி விடும். சிவபெருமானைக் கதை உறுப்பினராக எழுத ஏற்றுக் கொண்டுவிட்டால் சடையையும், கழுத்தில் பாம்பையும், இடையில் தோலாடையையும் கூறித்தான் ஆகவேண்டும். அவன் எவ்வளவு பெரிய நாத்திகனாக இருந்தாலும். நான் புதுமை நோக்குடையவன் என்று சிவபெருமானுக்கு 'பாண்ட்' அணிவித்து வரவிட்டால் அப்பாத்திரம் சிவபெருமானாக இருக்கமுடியாது. இதனை நாம் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். குருபரரின் வரலாற்றைச் சொல்ல நேர்ந்ததனால் இவற்றை எழுதுகின்றாரே யன்றி பக்தியினால் அன்று, இதனை நன்குணராது 'கடவுள், சமய நம்பிக்கை உடையவர் பாவேந்தர்' என எழுதுவது பொருந்தாது.

பாவேந்தரின் இறுதிக்காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை திரு. முருகு சுந்தரம் குறிப்பிடுகின்றார். அதனை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாகவும் தெளிவு தருவதாகவும் இருக்கும்.

'மாரடைப்பால் தாக்கப்பட்டுச் சென்னை அரசினர் மருத்துவ மனையில் பாவேந்தர் படுத்திருந்தபோது அப்பா! அப்பா! என்று அன்போடு பழகும் அனுசூயா வடபழனி முருகன் கோயிலில் இருந்து திருநீறு கொண்டு வந்து பாவேந்தர் நெற்றியில் பூசினார். 'என்ன மந்திரமா? என்று சொல்லிப் பாவேந்தர் அதனைக் கலைத்துவிட்டார். இதுதான் சாகும் போது பாவேந்தருக்கிருந்த கடவுட் கொள்கை'

பாவேந்தர் நினைவுகள், 112

இதிலிருந்து சைவப்பனுவல்களிலும், இராமாயணத்திலும், உபநிடதங்களிலும் வேதங்களிலும் பாரதியார் கொண்டிருந்த பற்றுக்கு மாறாகச் சங்கத் தமிழிலும், திருக்குறளிலும் நீங்காப் பற்றுக் கொண்டிருந்ததோடு பாரதியார் பற்றுவைத்திருந்த நூல்களை எதிர்த்தும் வந்த பாவேந்தரைப் பாரதிதாசன் எனல் எவ்வாறு பொருந்தும்?

## 5. தெய்வம் சார்த்திக் கூறல்

பாரதியார் எப்பொருள் பற்றிப் பாடினாலும் அதனைத் தெய்வம் சார்த்திக் கூறுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றார். தெய்வத்தை வழிபடுவது என்பது வேறு; எல்லாவற்றிற்கும் தெய்வத்தையே நம்பி இருப்பது என்பது வேறு. மனித முயற்சிக்கும் தன்னம்பிக்கைக்கும் முதலிடம் தராமல் உடல் நலம் வேண்டுதலில் இருந்து நாட்டுக்கு விடுதலை பெறுதல் வரை தெய்வத்தை வேண்டிக் கொள்ளும் இயல்பு உடையவராக இருக்கின்றார் பாரதியார்.

தன்னுடைய குறிக்கோள் இன்னது என்று ஒரு பாடலில் வெளிப்படுத்துகின்றார். அப்பாடலிலும் தெய்வம் சார்த்தியே பேசப்படுகின்றது.

'நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோரா திருத்தல் - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நம்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றும் செய்.

தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குக்கூடக் கணபதியிடம் வரம் கோருகின்றார்.

'எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி
மனத்தில் சலன மில்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மௌன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்
கனக்கும் செல்வம் நூறுவய
திவையும் தரநீ கடவாயே'



என்று தன் சொந்தத் தேவைகளுக்கும் தெய்வத்தையே சார்ந்து நிற்கின்றார். இன்னும் காணி நிலம் வேண்டும்' என்று பராசக்தியைப் பராவுகின்றார். தனக்கு வையத்தலைமை தரவேண்டும் என்பதனை.

'உய்யக் கொண்டருள வேண்டும் - அடி
உன்னைக் கோடிமுறை தொழுதேன் - இனி
வையத் தலைமை எனக் கருள்வாய்: அன்னை
வாழி நின்னதருள் வாழி
ஓம் காளி வலியசா முண்டீ
ஓங்காரத் தலைவிஎன் இராணி'

இவ்வாறு பாடுகிறார். தனக்கு வேண்டிய அறிவு, செல்வம், நூறுவயது, வையத் தலைமை வேண்டித் தெய்வங்களைச் சார்ந்து நிற்பது மட்டுமின்றிச் சமுதாயத்தின் தேவைகட்கும் அவர் தெய்வத்திடமே வேண்டுகோள் விடுக்கின்றார்.

'பூமண் டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக; துன்பமும் மிடிமையும் நோயும்
சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரும்
இன்புற்று வாழ்க என்பேன்; இதனைநீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி
அங்ஙனே யாகுக என்பாய் ஐயனே!

என்று பாடுவதன் வாயிலாக உலக உயிர் நலம் பேணும் இயல்பையும் அதனை இறைவனே வழங்குவான் என்ற நம்பிக்கையும் அவர் கொண்டிருந்தார் என அறிகிறோம். இவ்வாறாகத் தன்னலம், உலகநலம் இரண்டிற்கும் தெய்வத்தைச் சார்ந்து நிற்கும் பாரதியார் தெய்வம் சார்த்திச் சொல்ல வேண்டாத சில செய்திகளையும் தெய்வம் சார்த்தியே சொல்கின்றார். அவற்றையும் காண்போம்.

'மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினிற்கடைக்கண் வைத்தாள் அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி'

'செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மைமனம் கனிந்திட்டாள் அடிபரவி
உண்மைசொல்லும் அடியார் தம்மை

மும்மையிலும் காத்திடுநல் விழியாலே
நோக்கினாள் முடிந்தான் காலன்'

என்று உருசிய நாட்டுப் புரட்சியையும் அதன் வெற்றியையும் மாகாளி பராசக்தியின் கருணை என்று பாடுகின்றார் இவ்வாறு பாடுவது சரியா இல்லையா என்று ஆராய்வது நம் வேலையன்று; இவருடைய தாசன் இதனை ஏற்றுக் கொள்கின்றாரா என்று ஆராய வேண்டியதுதான் நம்பணி.

எதனையும் தெய்வம் சார்த்திப் பாடுவதனைப் பாரதிதாசனார் விரும்புவதில்லை. 1930க்கு ப் பிறகு தெய்வத்தைப் பாடுவதையே அவர் விரும்பவில்லை. பாடுவதை விரும்பாதது மட்டுமன்று; எதிர்ப்பவராகவே மாறிவிட்டார்.

'மனைமக்கள் தூங்கினார் நள்ளிரவில் விடைபெற்று
வழிநடைச் சிரமம் இன்றி
மாபெரிய சிந்தனா லோகத்தை அணுகினேன்
வந்தனரென் எதிரில் ஒருவர்
எனையவரும் நோக்கியே 'நான்கடவுள்' நான் கடவுள்'
என்று பலமுறை கூறினார்
இல்லைஎன் பார்கள்சிலர் உண்டென்று சிலர் சொல்வார்
எனக்கில்லை கடவுள் கவலை
எனஉரைத் தேனவர் எழுப்புசுவர் உண்டெனில்
எழுப்பியவன் ஒருவன் உண்டே
இவ்வுலகு கண்டுநீ நானுமுண் டெனஅறிக
என்றுரைத் தாரவரை நான்
கனமான கடவுளே உனைச்செய்த சிற்பிஎவன்
காட்டுவீர் என்ற உடனே
கடவுளைக் காண்கிலேன் அறிவியக் கப்புலமை
கண்ட பாரத தேசமே!

இப்பாடலில் கடவுள் இல்லை என்பதனைத் தருக்க நூல் அடிப்படையில் வாதிட்டுக் கூறுகின்றார். எழுப்பு சுவர் உண்டு என்றால் எழுப்பியவன் இருப்பானல்லவா? அது போலவே உலகம் உண்டு என்றால் உலகைப் படைத்தவன் இருப்பானல்லவா? என்ற வாதத்தை அப்படியே வாங்கிக் கொண்டு கடவுள் உண்டு என்றால் அவரையும் படைத்த ஒருவன் இருக்க வேண்டும் அல்லவா? என்று திருப்பிக் கேட்டுக் கடவுள் மறுப்புக் கோட் பாட்டினை வெளிப்படுத்துகிறார். இன்னும் கடவுளின் பெய



ராலும், விதியின் பெயராலும் வருக்க பேதம் இயல்பானதுதான் என்று கூறுபவர்களையும் எதிர்த்து இவ்வாறு பாடுகிறார்.

'நடவுசெய்த தோழர்கூலி நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர் ஊரையாண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த கயவர்கூட்ட மீதிலே
கடவுளென்ற கட்டறுத்துத் தொழிலுளாரை ஏவுவோம்'

என்று உழைக்கும் பிரிவினர் கடவுள் என்ற கட்டை அறுத்தெறிய வேண்டும் என்று வற்புறுத்துகின்றார். எல்லாவற்றுக்கும் தெய்வத்தையே நம்பிநின்ற பாரதியாருக்கு, தெய்வத்தை எதிர்த்து நின்ற பாவேந்தர் எப்படித் தாசனாவார்?

இந்தியா விடுதலை பெறவேண்டும் என்பதற்கும் பாரதியார் தெய்வத்தையே வேண்டுகின்றார்.

'எத்தனை நாள்கள் அடிமையாகக் கிடப்பது? அருள்புரி கண்ணா' என்று வேண்டுகோள் விடுக்கின்றார். 'சுதந்திர தினம்' என்ற தலைப்பில் உள்ள பாரதியாரின் பாடல் வருமாறு:

'என்று தணியுமெங்கள் சுதந்திர தாகம்
என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்
அன்றொரு பாரதம் ஆக்கவந் தோனே
ஆரியர் வாழ்வினை ஆதரிப் போனே
வென்றி தருந்துணை நின்னரு ளன்றோ
மெய்யடி யோமின்னும் வாடுதல் நன்றோ?

அன்றொரு பாரதம் ஆக்க வந்தவனாகிய கண்ணனிடம் இந்த வெற்றி நின்னாலல்லவா கிடைக்க வேண்டும். எங்கள் விலங்கு களை எப்பொழுது உடைப்பாய்? என்று கேட்கின்றார். இப் பாடலுக்கு தற்பொழுது 'சுதந்திர தாகம்' என்று தலைப்பிடப் பட்டுள்ளது. பாரதியார் பதிப்பித்த பழைய பதிப்பில் 'ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்' என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. விடுதலையைக் கூடப் பாரதியார் இறைவனிடம் வேண்டுவது புதுமையாக உள்ளது.

'சுதந்திரம்' என்ற தலைப்பின் பாவேந்தரும் ஒரு பாடல் பாடியுள்ளார். அதனையும் இங்கு ஒப்பிட்டுக் காணுதல்

பொருத்தமாக இருக்கும். இதோ அப்பாடல்; கூட்டுக்களியை நோக்கிக் கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

'தித்திக் கும்பழம் தின்னக் கொடுப்பார்
மதுரப் பருப்பு வழங்குவார் உனக்கே
பொன்னே மணியே என்றுனைப் புகழ்வார்
ஆயினும் பச்சைக் கிளியே அதோபார்
உன்னுடன் பிறந்த சின்ன அக்கா
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங் கீற்றுப் பொன்னூச லாடி
சோலை பயின்று சாலையில் மேய்ந்து
வானும் மண்ணுந்தன் வாசத்திற் கொண்டாள்;
தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?
அக்கா அக்கா என்றுநீ அழைத்தாய்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே!''

இப்பாடல் பாரதியாரின் கருத்துக்கு ஒரு மறுப்புப் போல அமைந்துள்ளது. அக்கா! அக்கா! என்று நீ அழைக்கிறாயே அக்கா வந்து கொடுப்பதற்குச் சுதந்திரம் என்பது சுக்கும் இல்லை; மிளகும் இல்லை கிளியே. இதனை உணர்ந்து கொள் என்கின்றார். பிறர் வாங்கிக் கொடுத்துப் பெறுவதன்று சுதந்திரம். நான் யாருக்கும் அடிமையல்லன் என எண்ணுகின்ற மனவீறுதான் சுதந்திரம். இத்தகைய மனவீறு படைத்தவன் அடிமை நாட்டிலே வாழ்ந் தாலும் அவன் சுதந்திரனே. இம்மன வீறு இல்லாதவன் விடுதலை பெற்ற நாட்டில் வாழ்ந்தாலும் அவன் அடிமையே, 'கிளியின் உடன் பிறந்த சின்ன அக்காவைப் போலத் தன்னிச்சையாகச் செயல்பட வேண்டும். அதுதான் சுதந்திரத்தின் அடையாளம். மாறாக நான்கு சுவர்களுக்குள்ளே அடைபட்டுக் கிடந்து எனக்கு விடுதலை வேண்டும். யாரேனும் வாங்கித் தரமாட்டீர்களா? என்று கோரிக்கை விடுவது விடுதலை வீரனுக்கு அழகன்று.

'உன்னுடன் பிறந்த சின்ன அக்காவைப் பார்!' என்று சொல்வதன் வாயிலாக' உன்னைப் போல் அடிமைப்பட்டுக் கிடந்த சகோதர நாடுகளைப்பார். அவர்கள் எப்படி விடுதலை பெற்றார்கள் என்பதைச் சிந்தனை செய்' என்று கூறுகின்றார்.

'தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ? அக்கா! அக்கா! என்று நீ அழைத்தாய். அக்கா வந்து கொடுக்கச் சுக்கா? மிளகா சுதந்திரம்'



என்று சொல்வதன் வயிலாகக் கண்ணன் திருமுன்றிலிலே நின்று 'கண்ணா! கண்ணா!' -என்று நீ அழைத்தாய் கண்ணன் வந்து கொடுப்பதற்குச் சுதந்திரம் என்பது அக்கார அடிசிலா என்று கேட்பது போல இருக்கிறது.

'பிஜித்தீவில் கரும்புத் தோட்டத்தில் இந்தியப் பெண்கள் படும் இன்னல்களை எடுத்துக்காட்டிப் பாரதியார் ஒரு பாடல் பாடு கின்றார். இப்பாடல் முழுக்க முழுக்க மக்கள் படும் துயரங் களையே வெளிப்படுத்தி நிற்பது. இப்பாடலைத் தொடங்கும் போது கூடத் தெய்வம் சார்த்தி எதனையும் கூறவில்லை. ஆனால் பாடலை முடிக்கும்பொழுது,

'ஹே! வீரகாளி சாமுண்டீ காளி' என்று தெய்வம் சார்த்தியே முடிக்கின்றார். ஆக எந்தப் பாடலையும் தெய்வம் சார்த்தாமல் பாடுவதில்லை என்ற முடிவுக்குப் பாரதியார் வந்து விட்டாரோ என்று எண்ண வேண்டியுள்ளது. இத்தகைய போக்குகளுக்கு எதிரான பாவேந்தர் எப்படி பாரதிதாசன் ஆவார்.

இன்னொரு செய்தியையும் இங்குக் கூறுதல் பொருத்தமாக இருக்கும். பாவேந்தர் பாரதியாரோடு உடனுறைந்து வாழ்ந்த காலத்திலேயே தெய்வ நம்பிக்கையில் பட்டும் படாமலும் இருந்திருப்பாரோ என ஐயப்படுமாறுளது. பாவேந்தர் தெய்வப் பாடல்கள் பல பாடியிருப்பினும் அந்நம்பிக்கையில் ஓர் அவநம்பிக்கையும் ஊடாடி நின்றிருக்கும் போலும். இதனைப் பாரதியார் அறிந்தும் இருந்திருக்கலாம்.

பாரதியாரின் வசன நூல்களிலே 'தராசு' என ஒரு பகுதி உள்ளது. தன்னில் இடப்படும் பொருளின் நிறைகுறையைத் தராசு வெளிப்படுத்துவது போலப் பாரதியாரின் கற்பனைத் தராசும் நூல்கள், மனிதர்களின் நிறைகுறைகளைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது. எல்லாம் கற்பனைதான். இங்குத் தராசு என்பது பாரதியாரே. அதில் ஒரு பகுதி இவ்வாறு வருகின்றது.

'இன்று நமது கடைக்கு ஒரு தமிழ்க் கவிராயர் வந்தார். கைக்கோள சாதி. ஒட்டக்கூத்தர் கூட அந்தக் குலந்தான் என்று நினைக்கிறேன்.'

'இவருக்கு இங்கிலீஷ் தெரியாது; தம்முடைய பெயரை வெளிப்படுத்தக் கூடாது என்று சொன்னார். ஆதலால் வெளிப் படுத்தவில்லை.'

'தராசு முகமலர்ச்சியுடன் சிரித்தது. இப்படியொரு கவிராயர் வந்தால் எனக்குச் சந்தோஷம். எப்போதும் வீண் வம்பு பேசுவோரே வந்தால் என்ன செய்வேன் என்றது. 'கவிராயரே! என்ன விஷயம் கேட்க வந்தீர்?' என்று தராசு கேட்டது.

'எனக்குக் கவிராயர் என்பது பரம்பரையாக வந்த பட்டம். என்னுடைய தகுதியால் ஏற்படவில்லை. அத்தகுதி பெற முயற்சி செய்து வருகிறேன். அந்த விஷயமாகச் சில வார்த்தைகள் கேட்க வந்தேன்' என்று கவிராயர் சொன்னார். 'இதுவரை பாடிய பாட்டுண்டானால் சொல்லும்' என்று தராசு கேட்டது.

'இதுவரை நாற்பது ஐம்பது அடிகளுக்கு மேல் பாடியது கிடையாது. இப்பொழுதுதான் ஆரம்பம். அது அத்தனை ரஸமில்லை என்று சொல்லிக் கவிராயர் விழித்தார்.'

'மாதிரி சொல்லும்' என்றது தராசு புலவர் பாடத் தொடங்கினார். தொண்டை நல்ல தொண்டை.'

'காளையொருவன் கவிச்சுவையைக்-கரை
காண நினைத்த முழுநினைப்பில்-அம்மை
தோளசைத் தங்கு நடம்புரிவாள்-இவன்
தொல்லறி வாளர் திறம்பெறுவான்
ஆ! எங்கெங்குக் காணினும் சக்தியடா-தம்பி
ஏழுகடல் அவள் மேனியடா
தங்கும் வெளியினிற் கோடியண்டம்-எங்கள்
தாயின்கைப் பந்தென ஓடுமடா
கங்குலில் ஏழு முகிலினமும்-வந்து
கர்ச்சனை செய்தது கேட்டதுண்டோ?
மங்கை நகைத்த ஒலியதுவாம்-அவள்
வாயிற் குறுநகை மின்னலடா.''

'தராசு கேட்டது: புலவரே! தமிழ் யாரிடம் படித்தீர்.'

'கவியாரயர்: இன்னும் படிக்கவில்லை. இப்போது தான் ஆரம்பஞ் செய்கின்றேன்.'

'தராசு: சரிதான், ஆரம்பம் குற்றமில்லை. விடா முயற்சியும் தெய்வபக்தியும், அறிவிலே விடுதலையும் ஏறினால் கவிதையிலே வலிமை ஏறும்.'

(பாரதியார் வசன நூல்கள் பக. 730-732)



தராசின் முன்னின்ற கவிராயர் வேறு யாருமல்லர்; பாவேந்தரே என்பதை மேலே காட்டிய 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என்ற பாடல் தெளிவாக்கி விடுகின்றது. இப்பாடலுக்கான விமரிசனத்தைத்தான் பாரதியார் தராசு என்ற பெயரிலே புதுமையாக எழுதியிருக்கிறார். விமரிசனத்தின் முடிவிலே பாரதியார் பாவேந்தரின் கவிதை வலிமைபெறச் சில பரிந்துரைகளைச் செய்கின்றார். அவை என்ன? விடாமுயற்சி, தெய்வபக்தி, அறிவிலே விடுதலை என்பன. இவற்றில் ஒன்று தெய்வபக்தி. பாவேந்தரிடம் தெய்வபக்திக் குறைபாடு இருப்பதைப் பாரதியார் கண்டிருப்பார் போலும். இதனால்தான் தெய்வபக்தி கவிதையிலே வலிமை ஏற்றும் என்று பரிந்துரை செய்கின்றாரோ என்று எண்ண வேண்டியுள்ளது. தெய்வபக்தி கவிதையிலே வலிமை ஏற்றும் என்று பாரதியார் வலியுறுத்திக் கூறியிருந்தும் பாவேந்தர் அதனைப் புறக்கணித்து விட்டார் என்றால் அவரைப் பாரதி 'தாசன்' எனல் எவ்வாறு பொருந்தும்?

# 6. பொதுவுடைமை போற்றல்

இந்தியாவில் விடுதலை உணர்வு வெளிப்பட்டுப் புரண்டோடிய காலத்தில் உருசியப் புரட்சி நிகழ்ந்தது. நிலஉடைமையாளர்களுக்கும் முதலாளிகட்கும் எதிரான போராட்டத்தில் உழைக்கும் மக்கள் ஒன்று திரண்டு போராடினர். சார் அரசு அடக்குமுறைகளைக் கையாண்டது. முடிவில் சார் மன்னன் மாண்டான். சுரண்டும் பிரிவினரில் பெரிய தலைகள் உருண்டன. உருசியா விடுதலை பெற்றது. பொதுவுடைமைக் கொள்கை அங்கு ஆட்சி புரியத் தொடங்கியது.

உருகியப் புரட்சியும் வெற்றியும் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உணர்ச்சித் தூண்டலை உண்டாக்கின. இந்த உணர்ச்சித் தூண்டலால் தான் பாரதியார்.

> 'மாகாளி பராசக்தி உருகிய நாட்டினிற்
> கடைக்கண் வைத்தாள் ஆங்கே
> ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி'

என்று பாடுகிறார். உடைமை பொதுவாக்கப்பட்ட செய்தியைக் கேட்ட கிளர்ச்சி அவரை மேலும் ஒரு பாடல் பாடத் தூண்டுகிறது.

> 'பாரதசமு தாயம் வாழ்கவே-வாழ்க! வாழ்க
> பாரதசமு தாயம் வாழ்கவே
> முப்பதுகோடி சனங்களின் சங்க
> முழுமைக்கும்பொது உடைமை
> ஒப்பிலாத சமுதாயம்
> உலகத்துக்கொரு புதுமை வாழ்க' (பாரத)

இவற்றில் முதற்பாடல் பிப்ரவரிப் புரட்சியால் சார் வீழ்ச்சியைத் தொடர்ந்தும், இரண்டாம் பாடல் அக்டோபர்ப் புரட்சிக்குப் பிறகும் பாடப் பட்டிருக்க வேண்டும்.



இவ்விரண்டு பாடல்களையும் எடுத்துக் காட்டுகின்றவர்கள் பாரதியாருக்குப் பொது உடைமைக் கொள்கையில் மிகுந்த ஈடுபாடு உண்டு என்றும், அந்த ஆழமான பற்றினால்தான் 'ஆகா என்றெழுந்தது யுகப் புரட்சி' என்று பாடினார் என்றும் கூறுகின்றார்கள். முப்பது கோடி சனங்களின் சங்க முழுமைக்கும் பொது உடைமை என்ற வரிகள் பொதுவுடைமை இம்மண்ணிலே பூக்க வேண்டும் என்ற ஆசையின் விளைவல்லவா? என்றும் பாராட்டுகின்றார்கள்.

மேலே குறித்த இரு பாடல்களையும் பாடிய சூழ்நிலையை நாம் காணவேண்டும். இப்பாடல்கள் சூழ்நிலையின் தாக்கத்தால் உணர்ச்சி வயப்பட்டு பாடப்பட்டனவா? பொதுவுடைமை சித்தாந்தத்தில் நம்பிக்கை வைத்துப் பாடப்பட்டனவா? என்பதை ஆய்தல் வேண்டும் புரட்சியின் எழுச்சியைக் கண்ட மாத்திரத்தில் பாடினாரா? கொள்கையை இனங்கண்டு பாடினாரா? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பாரதியாரின் கட்டுரைத் தொகுப்பில் 'செல்வம்' என்ற தலைப்பில் இரண்டு கட்டுரைகள் உள்ளன. அவற்றில் ஒன்றில் எழுதுகின்றார்:

'ஒரு தேசத்தில் பிறந்த மக்கள் அனைவருக்கும் அந்த தேசத்தின் இயற்கைச் செல்வ முழுவதையும் பொதுவுடைமை யாக்கிவிட வேண்டும் என்ற கொள்கை 'சோசலிசக்' கொள்கை ஆகும். அதாவது கூட்டுறவுக் கொள்கை. இந்தக் கூட்டுறவு வாழ்வுக் கொள்கை ஐரோப்பாவில் தோன்றியபோது இதை அங்கு முதலாளிகளும் மற்றபடி பொது ஜனங்களும் மிக ஆத்திரத்துடனும் ஆக்ரஹத்துடனும் எதிர்த்து வந்தார்கள். நாளடைவில் இக்கொள்கையின் நல்லியல்பு அந்தக் கண்டத்தாருக்கு மேன் மேலும் தெளிவுபட்டு வரலாயிற்று. எனவே இதன் மீது ஜனங்கள் கொண்டிருக்கும் விரோதம் குறைவுபட்டுக் கொண்டே வரவே இக்கொள்கை மேன்மேலும் பலமடைந்து வருகிறது. ஏற்கெனவே ருஷ்யாவில் ஸ்ரீமான் லெனின், ஸ்ரீமான் மின்த்ரோத்ஸ்கி முதலியவர்களின் அதிகாரத்தின் கீழ் ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளைநிலமும் பிற செல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொதுவுடைமையாகி விட்டது. இக்கொள்கை ஜெர்மனியிலும், ஆஸ்திரேலியாவிலும் துருக்கியிலும் அளவற்ற வன்மை கொண்டு வருகின்றது.'

'ஐரோப்பாவிலுள்ள பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய வல்லரசுகள் இந்த முறைமை தம் நாடுகளுக்குள்ளும் பிரவேசித்து விடக்கூடும் என்று பயந்து அதன் பரவுதலை தடுக்குமாறு பலவிதங்களில் பிரயத்தனங்கள் புரிந்து வருகிறார்கள்.'

'ஆனால் இந்த முறைமை போர், கொலை, பலாத்காரங்களின் மூலமாக உலகத்தில் பரவி வருவது எனக்குச் சம்மதமில்லை.'

'கொலையாலும் கொள்ளையாலும் அன்பையும் சமத்துவத்தையும் ஸ்தாபிக்கப் போகிறோம் என்று சொல்வோர் தம்மைத் தாம் உணராத பரம மூடர்கள் என்று கருதுகிறேன். 'இதற்கு நாம் என்ன செய்வோம் கொலையாளிகளை அழிக்கக் கொலையைத் தானே கைக்கொள்ளும்படி நேரிடுகின்றது.' என்று ஸ்ரீமான் லெனின் சொல்லுகின்றார். இது முற்றிலும் தவறான கொள்கை. கொலை, கொலையை வளர்க்குமேயல்லாது அதை நீக்கவல்லதாகாது.'

இவ்வாறு பொதுவுடைமை பரவுதலின் வழிமுறை பற்றிக் கண்டனம் தெரிவிக்கின்றார் பாரதியார் 'மாகாளி பராசக்தி' என்ற பாடலையும், 'செல்வம்' என்ற கட்டுரையின் கருத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் 'மாகாளி பராசக்தி' பாடியபோது பொதுவுடைமை பரவுதலில் இருந்த விழைவு பின்னர் மாறிவிட்டிருப்பதை அறியலாம். கொலையும் போரும், வன்முறையும் கையாளப் படுவதுதான் தன் வெறுப்புக்குக் காரணம் என்பதாகப் பாரதியார் இக்கட்டுரையில் குறிப்பிடுகின்றார். 'மாகாளி பராசக்தி' பாடியபோது உருசியப் புரட்சியில் கொலையும் வன்முறையும் நிகழ்ந்தது பாரதியாருக்குத் தெரியாதா? தெரியும். அதனையும் அவர் அப்பாடலிலேயே பாடுகின்றார்.

'இமய மலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன் இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர்சட சடவென்று சரிந்திட்டார்
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம்விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே'

ஜாரரசன் பாண்டியன் நெடுஞ்செழியனைப் போல 'யானே தீயன்' என்று சொல்லித் தானாகவே வீழ்ந்தானா? இல்லை; வீழ்த்தப்பட்டான். உடனிருந்த சுமடர்கள் சடசட என்று தாமாகவே சரிந்தார்களா? இல்லை; சரித்துவிடப்பட்டார்கள். இதனைப் புயற்காற்றுச் சூறைதன்னில் திமுதிமென மரம் விழுந்து காடெல்லாம் விறகான செய்தி'யால் அறிகின்றோம். மரம் தானாக வீழ்ந்து விறகாகி விடவில்லை. புயற் காற்றுத்தான் அம்மரங்களைச் சாய்த்து விறகாக்கிற்று. இதுபோலவே புரட்சிச் சூறைதான் ஜாரையும் சுமடர்களையும் பிணமாக்கிற்று. புரட்சியினால் அவர்கள் பிணமாக்கப்பட்டார்கள் என்று பாடியிருப்பதனாலே இதில் கொலையும் வன்முறையும் இருப்பதைக் கூறியவர் செல்வம் கட்டுரையில் கண்டிப்பதேன்? இப்பாடலிலேயே மறைமுகமாக வாவது கொலையையும் வன்முறையையும் கண்டித்திருக்கலாம். இப்பாடலில் இவற்றைக் கண்டிக்காததனால் இப்புரட்சியின் எழுச்சியை மட்டுமே கண்டு பாடினார் என்று கொள்ள வேண்டியுள்ளது. இத்தத்துவத்தையும் இதனை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளையும் இனம் கண்டு பாடியிருந்தால் செல்வம் கட்டுரையில் வேறுவிதமான கருத்து தோன்றியிருக்காது.

இன்னொரு வியப்பான கருத்தையும் தெரிவிக்கின்றார் பாரதியார். 'ருஷ்யாவிலும் கூட இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சோஷலிஸ்ட் ராஜ்யம் எக்காலமும் நீடித்து நிற்கும் இயல்புடையதென்று கருத வழியில்லை. சமீபத்தில் நடந்த மகாயுத்தத்தால் ஐரோப்பிய வல்லரசுகள் ஆள்பலமும், பணபலமும், ஆயுதபலமும் ஒரேயடியாய்க் குறைந்துபோய் மஹா பலஹீனமான நிலையில் நிற்பதை ஒட்டி மிஸ்டர் லெனின் முதலியோர் ஏற்படுத்தியிருக்கும் 'கூட்டு வாழ்க்கைக் குடியரசை' அழிக்க மனமிருந்தும் வலிமையற்றோராகி நிற்கின்றனர். நாளை இந்த வல்லரசுகள் கொஞ்சம் சக்தியேறிய மாத்திரத்திலே ருஷ்யாவின் மீது பாய்வார்கள். அங்கு உடைமை இழந்த முதலாளிகளும் நில ஸ்வான்களும் இந்த அரசுகளுக்குத் துணையாக நிற்பர். இதினின்றும் இன்னும் கோரமான யுத்தங்களும், கொலைகளும், ரத்தப் பிரவாகங்களும், ஏற்பட வழியுண்டாகும். லெனின் வழி சரியான வழியில்லை.

(பாரதியார் கட்டுரைகள், ப. 633)

பாரதியாரின் அனுமானம் தவறாக முடிந்துவிட்டதை வரலாறு காட்டுகின்றது. பொதுவுடைமைக் கொள்கை நல்ல கொள்கை தான். ஆனால் துளி இரத்தமும் சிந்தாமல் அது வெற்றி பெற

வேண்டும் என்கிறார் இது நடக்கக்கூடியதா? கத்தியின்றி இரத்த மின்றிச் சுதந்திரம் பெற்றதாக நாம் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு. ஆனால் இந்த விடுதலைப் போரில் எத்தனை ஆயிரம் பேர் உயிர் துறந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிய மாட்டோமா? இந்திய விடுதலைப் போராட்டத்தில் இரத்தம் பெருக்கெடுத்தோட வில்லையா?

பொதுவுடைமை வேண்டும் என்பதற்குப் பாரதியார் கூறும் காரணம் இன்னும் வியப்பாக உள்ளது. 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்ற பாடலில் மனிதர் உணவை மனிதர் பறிக்கக் கூடாது; ஒரு மனிதர் நோக இன்னொரு மனிதர் நோக்கக்கூடாது; தனியொருவனுக்கு உணவு கிடைக்கவில்லையென்றால் உலகையே அழிப்போம்' என்கின்றார். ஏன்?

'எல்லா உயிர்களிலும் நானே இருக்கின்றேன்
என்றுரைத்தான் கண்ண பெருமான்
எல்லாரும் அமரநிலை எய்துநன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும்'

எல்லா உயிர்களிலும் கண்ணனே இருக்கின்றான். ஆகவே எல்லாரும் அமரநிலை எய்த முடியும். ஒரு கண்ணன் இன்னொரு கண்ணனின் உணவைப் பறிக்கக்கூடாது. ஒரு கண்ணன் இன்னொரு கண்ணனின் மனம் நோகுமாறு பார்க்கக் கூடாது. ஒவ்வொரு மனிதனும் தான் கண்ணனின் அம்சம் என்பதைத் தெளிந்து விட்டால் உணவைப் பறிப்பதும், நோகப் பார்ப்பதும் இருக்காது. இருக்காது போகவே எல்லோருக்கும் உணவும் இனிய பார்வையும் கிடைக்கும். கிடைத்தால் அது தான் 'அமர நிலை' என்னும் பொதுவுடைமை வாழ்க்கை. இப்படியொரு 'புதிய பொது உடைமைக் கோட்பாட்டை இந்தியா உலகிற்கு வழங்கும்; இதனால் உலகம் உய்யும் என்று தன் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டுப் பாடுகின்றார் பாரதியார். பொதுவுடைமைச் சமுதாய அமைப்புக்குக்கூட 'எல்லா உயிர்களிலும் நானே இருக்கின்றேன்' என்ற கீதையின் கருத்தை எடுத்துக் காட்டுவது வியப்பாக இல்லையா?

இனிப் பொதுவுடைமை ஆட்சியை (அதாவது கொலை, வன்முறை இரத்தப் பிரவாகம் இல்லாத வகையில்) எவ்வாறு கொண்டு வருவது என்பதையும் அவரே கூறுகின்றார். இந்த



முறைதான் தீங்கற்ற முறை என்றும் கூறுகின்றார். அதனையும் காண்போம்.

நிலஉடைமையாளர்கள் அனைவரும் கோயிலில் கூட வேண்டும் என்றும், உழைப்பாளிகள் அனைவரையும் அங்கு வரவழைக்க வேண்டும் என்றும், நில உடைமையாளர்களின் சார்பில் ஒருவர் எழுந்து உழைப்பாளர்களும் அவர்தம் இல்லத்து மனிதர்களும் உண்ண உணவின்றி வாடுவது தம்மை மிகவும் வருத்துவதாகவும் பரம்பரை பரம்பரையாக எங்களுக்கு இருக்கும் சொத்தை ருஷ்யா முதலிய தேசங்களில் பலாத்காரமாகப் பறித்துக் கொண்டது போலப் பறித்துக் கொள்ளக் கூடாதென்றும், எங்களிற் சிலரும் உங்களிற் சிலரும் கூடித் தொழில் நிர்வாக சங்கம் அமைக்க வேண்டும் என்றும் கிராமத்துக்குத் தேவையான எல்லாத் தொழில்களையும் அரசாங்கம் நடத்தும் என்றும் கூற வேண்டும். மேலும் அவர் (நில உடைமையாளரின் சார்பாளர்) கூற வேண்டியது வருமாறு:

'அந்தக் கிராமத்திலிருந்து நாம் அத்தனை பேரும் தொழில் செய்ய வேண்டும். அந்தத் தொழில்களுக்குத் தக்கபடி ஆண், பெண், குழந்தை முதலியோர், இளைஞர் அத்தனை பேரிலும் ஒருவர் தவறாமல் எல்லோருக்கும் வயிறு நிறைய நல்ல ஆகாரம் கொடுத்து விடுகிறோம். நாங்கள் பிள்ளை பிள்ளை தலைமுறை யாக இந்த ஒப்பந்தம் தவற மாட்டோம். இந்தப்படிக்கு இந்த ஆலயத்தில் தெய்வ சந்நிதியில் எங்கள் குழந்தைகளின் மேல் ஆணையிட்டுப் பிரதிக்னை செய்து கொடுக்கிறோம். இங்ஙனம் நமக்குள் ஒப்பந்தம் ஏற்பட்ட விஷயத்தை எங்களின் முக்கியஸ்தர் கையெழுத்திட்டுச் செப்புப் பட்டயம் எழுதி இந்தக் கோயிலில் அடித்து வைக்கிறோம்.

(பாரதியார் கட்டுரைகள்: ப. 635-639)

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நில உடைமையாளர்கள் தங்கள் நிலங்களைத் தொழில் நிருவாக சங்கத்திடம் ஒப்படைத்த தாக ஒருவரி கூட இல்லை. நிலம் அவர்களுக்கே உடைமையாக இருக்கும். அதன் பயனை உழைப்பவர்களுக்குக் கொஞ்சம் தாராளமாக வழங்குவார்களாம். குழந்தை, பெரியோர், இளைஞர் ஆகிய எல்லார்க்கும் வயிறு நிறைய நல்ல ஆகாரம் கொடுத்து விடுவார்களாம். அதையும் அந்தத் தொழில் நிருவாக சங்கம் கொடுக்கும் என்று கூறக்கூட இல்லை. 'நாங்கள் கொடுத்து

விடுவோம்' என்று நில உடைமையாளர்கள் கூறுகின்றனர். இது நில உடைமையாளர்களுக்கும் உழைப்பாளிகட்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் என்று கூறப்படுகின்றது. அதிலே நில உடைமையாளர் களின் முக்கியஸ்தர் மட்டுமே கையெழுத்திடுவாராம். ஒருவர் மட்டுமே கையெழுத்திடுவது எப்படி ஒப்பந்தமாகும். 'நாங்கள் கொடுத்துவிடுவோம்' 'எங்கள் முக்யஸ்தர் கையெழுத்திடுவார்' என்ற தொடர்களில் இருந்து நில உடைமையாளர்கள் உயர்ந்தவர் களாகவும் உழைப்பவர்கள் தாழ்ந்தவர்களாகவும் சித்திரிக்கப்பட் டிருப்பது நன்கு தெளிவாகிறது.

'ஒரு தேசத்தில் பிறந்த மக்கள் அனைவரும் அந்தத் தேசத்தின் இயற்கைச் செல்வம் முழுவதையும் பொதுவுடைமையாக்கி விடவேண்டும்' என்ற கொள்கைக்கு இங்கிலீஷில் சோஷலிஸ்ட் கொள்கை என்று பெயர்' எனப் பாரதியாரே விளக்கம் தருகின்றார். அப்படியானால் இங்கே கிராமத்தின் இயற்கைச் செல்வம் அனைத்தும் கிராமத் தொழில் நிர்வாக சங்கத்துக்குச் சொந்தம் என்றல்லவா அவர் கூறியிருக்க வேண்டும். தொழில் அமைப்புக்களால் கிடைக்கும் வருமானம் அத்தொழிலில் ஈடுபட்டிருப்போர்க்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே சோசலிசம். அத்தொழிலில் ஈடுபட்டிருப்போரில் ஒரு சாரார் மற்றொரு சாராருக்குப் 'பார்த்துக் கொடுப்பது' சோசலிச மாகாது. அது சரியான முதலாளிக் கொள்கைதான். அதுவும் புரட்சி வந்து விடக்கூடாது என்பதற்காக நயவஞ்சகமாக நடந்து கொள்ளும் முதலாளிக் கொள்கைதான். இதனையா பொது வுடைமைக் கொள்கைக்கு மாற்றாகத் தருகிறார் பாரதியார்; ஆம், இதனைத்தான் தருகிறார்.

பொதுவுடைமைக் கொள்கையின் குறிக்கோள் பொது வுடைமையாளர்களால் இவ்வாறு கூறப்படுகின்றது.

1. 'சுரண்டும் - சுரண்டப்படும் வகுப்பு பேதத்தை ஒழித்து உற்பத்திச் சாதனங்களையும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் களையும் தனி மனிதர்களுக்குச் சொந்தமாக்காமல் சமுதாயத்தின் சொத்தாகச் செய்வது.

2. எல்லா மனிதர்களையும் அவர்களுடைய தகுதிக்கேற்ப வேலை செய்யச் செய்வது.



3. வாழ்க்கைக்கு அவசியமான பொருள்கள், இயந்திரங்களின் உபயோகத்தால் கிடைக்கும் சாவகாசம், மனோவளர்ச்சிக்குச் சந்தர்ப்பம் இவைகளை எல்லாருக்கும் சமமாகவும் விருப்பத்திற்கு ஏற்பவும் பிரித்துக் கொடுப்பது'

(பொதுவுடைமைதான் என்ன ப. 84)

எல்லா மனிதர்களும் வேலை செய்ய வேண்டும் என்ற கோட் பாடுதான் இரண்டிலும் பொதுவாக உள்ளது. அதிலும் தகுதிக் கேற்ப வேலை செய்தல் என்பதில் உடல் தகுதி அறிவுத்தகுதி பொதுவுடைமையாளர்களால் வரையறுத்துக் கூறப்படுகின்றது. பாரதியார் கருத்தில் அந்தத் 'தகுதி' வரையறுக்கப்படவில்லை. பிறவற்றில் பாரதியாருக்கும் பொதுவுடைமையாளருக்கும் எந்த ஒற்றுமையும் இல்லை.

உருசியப் புரட்சியை வரவேற்றுப் பாடியவர், முப்பது கோடி சனங்களின் சங்க முழுமைக்கும் பொதுவுடைமை வேண்டும் என்றவர் ஏன் இப்படி மாறி விடுகின்றார்? முதலாளித்துவ சக்தி களுக்கு எதிராகப் பாட்டாளி இனம் ஆயுதம் ஏந்திப் போராடுவது பிடிக்காமைதான். வன்முறையில்லாமல் பொதுவுடைமை மலர வேண்டும் என்கிறார் பாரதியார். பேராசை பிடித்த மனிதர்களை-முதலாளிகளை ஒரே நாளில் மனமாற்றம் செய்து விடுகின்ற மந்திரத்தை யாரும் இன்னும் கண்டுபிடிக்கவில்லையே! "மயிலே! மயிலே! இறகுபோடு என்றால் போடுமா?" என்பது அல்லவா அனுபவம் கண்ட பழமொழி.

பொதுவுடைமைக் கோட்பாடு பற்றிப் பாரதியாரின் கருத்து இவ்வாறிருக்க அவருடைய தாசன் என்ன கருதுகிறார். பாரதி யாரைப் போலவே கற்பனை சோசலிசத்திலும், தருமகருத்தா சோசலிசத்திலும் மூழ்கிக் கிடக்கிறாரா? விஞ்ஞான சோசலிசந் தான் வேண்டும் என்கிறாரா?

'புதியதோர் உலகு செய்வோம்-கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம் (புதியதோர்)

பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்
இதயமெ லாம்அன்பு நதியினில் நனைப்போம்
'இதுஎனது' என்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்
உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்

'ஒருபொருள் தனி' எனும் மனிதரைச் சிரிப்போம்
இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண் டாமெனில் அனைவரும் புசிப்போம்'

பாரதிதாசன் தொகுதி 1; ப. 158

இப்பாட்லில் பொதுஉடைமைக் கொள்கையை 'நாங்கள் கடைப்பிடிப்பது மட்டுமில்லை; அதனை எங்கள் உயிரென்று போற்றுவது மட்டுமில்லை; அதனை எட்டுத் திசையிலும் கொண்டுபோய்ச் சேர்ப்போம்' என்கின்றார். கெட்ட போரிடும் உலகம் என்பது முதல் உலகப்போர் இரண்டாம் உலகப் போர்களை அல்ல. இருக்கின்றவனுக்கும் இல்லாதவனுக்கும்; சுரண்டுபவனுக்கும் சுரண்டப்படுபவனுக்கும்; அடக்குபவனுக்கும் அடக்கப்படுபவனுக்கும் நடக்கின்ற போரைத்தான் கெட்ட போரிடும் உலகம் என்று குறிப்பிடுகின்றனர். இதனைத் தான் வேரொடு சாய்க்க வேண்டும் என்கிறார். வேரொடு சாய்த்தால் 'புதியதோர் உலகம்' உண்டாகும். அவ்வுலகம் பொதுவுடைமை உலகமாக இருக்கும். அந்த உலகத்தில் 'இது எனது' என்று சொல்லும் கொடுமை இருக்காது. 'இது நமது' என்று சொல்லும்-இதயத்தை அன்புநதியிலே நனைத்துக் கொண்டவர்கள் இருப்பார்கள்.

'ஒரு பொருள் தனி' என்பது எள்ளி நகையாடத் தக்கதாகும். இதன் எதிர்த்தொடர் என்னவாக இருக்கும்? 'எல்லாப் பொருளும் பொது' என்பது தான்.

'போரிடும் உலகம்' 'இது எனது' 'ஒரு பொருள் தனி' என்னும் தொடர்களால் பொதுவுடைமைக் கோட்பாட்டின் அடிப்படைச் செய்திகளைக் கூறியவர் பொருள் பயன் தந்தால் எல்லாரும் உண்போம். தரவில்லை என்றால் எல்லாரும் பட்டினி கிடப்போம் என்கின்றார். இதிலிருந்து உற்பத்தியின் பயன் சமுதாயத்தின் உடைமையாக மாற்றப்பட்டு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்ற பொதுவுடைமைக் கொள்கையை அருமையாக எடுத்துக்காட்டி உடன்படுகின்றார்.

பாவேந்தர் 'உலகப்பன் பாட்டு' என ஒரு பாடல் இயற்றி உள்ளார். அதிலே உலகத்தைப் பகுத்தறிவு மன்றத்திலே நிறுத்தி 'உலகப்பா! நன்செய், புன்செய் நிலத்தையெல்லாம் நெடுநாள் களுக்கு முன்னே குத்தகைக்கு விட்டாயா? என்று வினவுகின்றார்.



உலகப்பன் ஆம் என்கின்றான். அப்படி என்றால் குத்தகைக்காரர் களிடம் நிலம் குறித்த எல்லை முன் குறித்தபடியே இன்றும் இருக்கின்றதா? என்று கவிஞர் கேட்க, உலகப்பன் 'கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட மக்கள் கண்மூடி மக்களுடைய நிலத்தை எல்லாம் ஏப்பமிட்டு விட்டார்கள். ஏழை மக்கள் பொத்தல் இலைக்கலமானார்; செல்வர்களோ புனல் நிறைந்த தொட்டியைப் போல் ஆகிவிட்டார்கள். இதுதான் இன்றைய நிலை என்கிறான் உலகப்பன். கவிஞர் உடனே 'உலகப்பா! நீ புதுக்கணக்குப் போட்டுவிடு. பொருளை எல்லாம் பொதுவாக எல்லார்க்கும் குத்தகை செய்' என்று கட்டளையிடுகின்றார். மேலும் 'ஏழை முதலாளி என்பது இல்லாமற் செய்' என்றும் ஏவுகின்றார். 'பொருளை எல்லார்க்கும் பொதுவாகக் குத்தகை செய்' என்பதில் 'உற்பத்திச் சாதனங்கள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும்' என்ற பொதுவுடைமைக் கொள்கையின் குறிக்கோள் வீறுபெற்றுத் துலங்குவதனைக் காண்கிறோம். இன்னும்...

'உலகம் உண்ணஉண்; உடுத்த உடுத்து;
புகல்வேன் உடைமை மக்களுக்குப்பொது;
புவியை நடத்து; பொதுவில் நடத்து;
வானைப் போல மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்குக் கூறடா தோழனே''

(தொகுதி 1; பக். 150)

பொதுவுடைமை என்பது ஒரு வாழ்க்கை நெறி. அதனை வாழ்ந்து காட்டு என ஆணையிடுகிறார்.

'காண்பதெலாம் தொழிலாளி செய்தான்-அவன்
காணத் தகுந்தது வறுமையோ?-அவன்
பூணத் தகுந்தது பொறுமையோ?
கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளைய டிப்பதும் நீதியோ-புவி
வாழ்வது தானெந்தத் தேதியோ?''

என்று கேட்பவன் இந்த அநியாயங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் சினத்தின் உச்சிக்கே சென்று,

'சிற்சிலர் வாழ்ந்திடப் பற்பலர் உழைத்துத்
தீர்கஎன் னும்இந்த லோகமே-உரு
அற்றொழிந் தாலும்நன் றாகுமே'

என்கின்றான்.

சிலர் வாழப் பலர் உழைக்கும் இந்தக் கொடிய உலகம் உரு வற்று ஒழிய வேண்டியதுதான். அது எப்படி ஒழியும்? தானாகவே ஒழியுமா? வெறும் உபதேசங்களாலேயே ஒழித்துவிடமுடியுமா? நியாயங்களை எடுத்துக்காட்டி, ஏழையர் வீட்டு அவலக்காட்சி களைச் சித்திரித்து அந்த உலகத்தை ஒழித்துவிட முடியுமா? அப்படி முடியுமானால் அது நல்லது தான். முடியாத பொழுது அடக்கப்பட்டவர்கள் கிளர்ந்தெழத்தான் வேண்டும். ஆயுத மேந்திய போராட்டத்தை எதிர்கொள்ளத்தான் வேண்டும். சிலருக்காகப் பலர் துன்புறுவதைவிடப் பலருக்காகச் சிலர் தம்முடைய உடைமைகளை இழப்பது ஒன்றும் தீமையில்லை என்பதை விளக்கத்தான்.

'கொலைவாளினை எட்டாமிகு கொடியோர் செயல்அறவே
குகைவாழ் ஒருபுலியே எனக் குணமேவிய தமிழா!

என்கிறார். ஏன் கொலைவாளை எடுக்க வேண்டும், கொலை வாளை எடுப்பதன் வாயிலாக எதைச்சாதிக்க வேண்டும். இதோ பாவேந்தர் தொடர்ந்து பாடுகின்றார்.

'தலையாகிய அறமேபுரி சரிநீதி உதவுவாய்
சமமே பொருள் சனநாயகம் எனவேமுர சறைவாய்
இலையேஉண விலையேகதி இலையேஎனும் எளிமை
இனிமேலிலை எனவேமுர சறைவாய்முர சறைவாய்'

பொருள்சமம்; இதுதான் சனநாயகம், சரிநீதி உதவு; இதுதான் தலையாகிய அறம் இவற்றைச் செய்தால் 'உணவில்லை; கதியில்லை என்று கூறும் ஏழைமை இந்த உலகத்தில் இல்லாமற் போய்விடும் என்கிறார் பொருள் சமம் என்பதும், சரி நீதியும் பொது உடைமைக் கோட்பாட்டின் உயிர் என்பதனை அறிவோம். இதனை நிலைநிறுத்தத்தான் கொலைவாளினை எடுக்கச் சொல்கின்றார்.

இன்று சிலர் இப்பாடலுக்கு வேறுவிதமாக விளக்கம் சொல்கிறார்கள். கொலைவாளை எடுக்கச் சொன்னான் எதற்கு?



கொடியோர் செயல் அறுவதற்கு; தலை அறுவதற்கன்று. எனவே அவன் வன்முறையையும் ஆயுதமேந்திய போராட்டத்தையும் நாடவில்லை என்கின்றனர். இது பொருந்தாத வாதம். வாதத் திற்காக அவர்கள் கூறுவதை அப்படியே ஏற்றுக் கொண்டாலும் 'செயல் அறுவதற்கு வாள் எதற்கு? பரப்புரை ஒன்று போதுமே? கொலை வாளை எடுத்துச் செயலை வெட்ட முடியுமா?

ஆகவே பாவேந்தர் ஆயுதமேந்திய போராட்டத்தை வலியுறுத்துகின்றார் என்றுதான் கொள்ள வேண்டும். இதனை நன்கு வலியுறுத்தும் பகுதி உலகப்பன் பாட்டின் இறுதியிலே வரு கின்றது. ஒரு பெரிய குறிக்கோளுக்காகச் சிறிய வன்முறையைக் கூடக் கையாளக் கூடாது என்ற கருத்துப் பாரதியாரைப் போலவே பாரதிதாசனுக்கும் இருந்திருந்தால்,

'ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆயிடுவர் உணரப் பாநீ'

என்று பாடியிருக்க மாட்டார். ஆகவே பாட்டாளி வர்க்கம் உருத்தெழுந்து சுரண்டுபவர்க்கு எதிரான ஆயுதப் போராட்டம் நடத்துவதை ஏற்றுக் கொள்கின்றார் என்பதைத்தான் 'உதையப்பர்' என்ற சொல்லாட்சி தெளிவுபடுத்துகின்றது.

பாரதியாரோ உடைமை பொது என்பதையும் ஏற்றுக்கொள்ள வில்லை; உழைப்பின் பயன் சமமாகப் பங்கிடுதலையும் ஏற்றுக் கொள்ளவில்லை. வர்க்கப் புரட்சியில் ஆயுதம் ஏந்துவதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் பாவேந்தரோ இவையனைத்தை யும் ஏற்றுக்கொண்டு பாடுகின்றார்.

'முதலாளிகளுக்கு உதவி செய்யும் மதமும் கடவுளும் பொதுஉடைமைக் கொள்கை விரோதிகளின் மிகப் பயங்கரமான ஆயுதம்.

(பொதுவுடைமைதான் என்ன?; ப. 108)

முதலாளிக்குப் பல ஆயுதங்கள் இருக்கின்றன. ஆனால் மதத்தையும் கடவுளையும் போன்ற பயங்கரமான ஆயுதம் வேறில்லை என்கிறார் இராகுலசாங்கிருத்தியாயன், ஏனெனில் மதமும் கடவுளும் மனிதனைச் சிந்திக்கவிடாமல் தடுக்கும்

தன்மை படைத்தன. ஏன் என்ற கேள்விக்கே இடமில்லாமல் செய்து விடுவன. விதி! விதி! என்று வீழ்ந்து கிடக்கச் செய்வன.

பொதுவுடைமைக் கோட்பாட்டின் எதிரிகளைப் பாரதியார் நண்பர்களாக அரவணைத்துக் கொள்கின்றார். பாவேந்தரோ அவ்வெதிரிகளைப் பாடற் குண்டுகளால் துளைத்து எடுக்கின்றார்.

பாரதியாரின் பாடல்களில் சரிபாதியளவு கடவுளை பற்றிப் பாடிய பாடல்களே. கணபதி, முருகன், சக்தி, கண்ணன், சிவன் என்று எல்லாத் தெய்வங்களையும் பாடுகின்றார். அத்தெய்வங் களிடம் தான் விரும்பும் வரங்களையும் கேட்கின்றார். இன்னும் சொல்லப் போனால் உருசியப் புரட்சியே பராசக்தி கடைக்கண் வைத்ததனாலேதான் வந்தது என்கின்றார். 'எல்லா உயர்களிலும் நானே இருக்கின்றேன்! என்றுரைத்த கண்ணனின் திருவாக்கின் படியே முப்பது கோடி சனங்களுக்கும் பொதுவுடைமை தேவை என்று பாடித் தன்னுடைய கடவுட் பற்றை வெளிப்படுத்து கின்றார்.

இன்னும் அவருடைய கட்டுரைகளிலே இந்து மதத்தைப் பேண வேண்டியதன் தேவையினைப் பல இடங்களிலே கூறுகின்றார்.

'ஹிந்துக்களின் கூட்டம்' என்ற கட்டுரையில் பாரதியார், வீரப்ப முதலியார், பிரம்மராயர் ஆகிய மூவரும் உரையாடுவதாக எழுதுகின்றார். பூணூல் போட்டுக் கொள்வதைப் பற்றிப் பேசுகின்றார்கள். வீரப்பமுதலியார் 'பூணூலை எடுத்துப் போடுங்கள்; இந்தியா முழுவதும் ஒரே சாதி; ஒரே உடுப்பு; ஒரே ஆசாரம் என்று செய்துவிட வேண்டும் என்கிறார். இடையிலே பிரம்மராயர் வீரப்ப முதலியாரைச் சமாதானம் செய்கின்றார். அப்போது வீரப்ப முதலியார் 'எல்லாம் தெரியும் எனக்கு யாரோ ஒரு ராஜாவாம். அவன் பூணூலை ஒரு தட்டிலும் பொன்னை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்துப் பார்த்தானாம். பூணூல் கீழே இழுத்ததாம், பொன் மேலே போய்விட்டதாம். இதெல்லாம் மூட்டை, சரிசமானமாக ஐரோப்பியர்களைப் போலவே நடப்போம்' என்றார்.

'ஹிந்துக்களைப் போலவே இருப்போம்' என்று நான் (பாரதியார்) சொன்னேன்.



'எப்போதும் பிரிவும் சண்டையும் இருக்க வேண்டும் என்பது உமது கக்ஷியோ' என்று வீரப்ப முதலியார் கேட்டார்.

'வேண்டியவர்கள் எல்லாம் பூணூல் போட்டுக் கொள்ளலாம். அது யாகத்துக்கு வெளியடையாளமாக அந்தக் காலத்தில் ஏற்பட்டது. இஷ்டமான ஹிந்துக்கள் எல்லாம் பூணூல் போட்டுக் கொள்ளலாம். பூணூல் இருந்தாலும் ஒன்று போலே; இல்லா விட்டாலும் ஒன்று போலே, ஹிந்துக்களெல்லாரும் ஒரே குடும்பம் என்றேன்'.

இந்த உரையாடலில் இருந்தே இந்து மதத்தில் பாரதியாருக் குள்ள ஈடுபாட்டை அறியலாம். மதத்தைப் பற்றி ஒட்டுமொத்த மான பாரதியாருடைய கருத்து என்ன? இந்து மதம் வேண்டும். ஆனால் அது மனிதனைப் பிளவுபடுத்த அனுமதிக்கக்கூடாது. எல்லோரும் பூணூல் போட்டுக் கொள்ளலாம். போட்டுக் கொண்டால் அனைவரும் உயர்ந்த சாதியினர் ஆகிவிடுவர். ஆகிவிடவே சாதி வேறுபாடுகள் தொலைந்துவிடும் என்பது பாரதியாரின் நம்பிக்கை. பாரதியார் நம்புவதைப் போல மதம் அவ்வளவு எளிதில் தன்னை மாற்றிக் கொண்டு விடுமா? கனக லிங்கம் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்புத் தோழனுக்குப் பாரதியார் பூணூல் அணிவித்துப் போகச் சொன்னாரே அவனைப் பார்ப்பனனாக இந்து மதம் ஏற்றுக்கொண்டு விட்டதா? மற்ற மதவாதிகளைப் போலப் பாரதியார் இல்லைதான். ஆனாலும் அவருடைய மதத்தைப் பற்றிய நம்பிக்கைகள், கணிப்புகள் சரியானவை என்று கூற முடியாது.

கடவுளும் மதமும் பாரதியார் உள்ளத்தில் நீக்கமற நிறைந்திருந்ததனை நாம் அறிகிறோம். கடவுளும் மதமும் பொதுவுடைமை விரோதிகளின் பயங்கரமான ஆயுதம் என்கிறார் பேராசிரியர் இராகுல். சரி இதில் பாவேந்தரின் வழி என்ன? பேராசிரியர் இராகுலின் வழிதான்.

'நீரி லேனும் நாட்டி லேனும் உலகி லேனும் எண்ணினால்
நீர்நிறைந்த கடலையொக்கும் நேர்உழைப்ப வர்தொகை
நீர்மிதந்த ஓடமொக்கும் நிறைமுதல்கொள் வோர்தொகை
நேரிற்சூறை மோதுமாயின் தோணியோட்டம் மேவுமோ?'

என்று வருக்கப் புரட்சிக்கு வழிகூறும் கவிஞர் அதற்காக அமைத்த களத்தில் முதலாளிகள் கடவுளைக் கொண்டு வந்து நிறுத்து

வார்களே என்பதை எண்ணிப் பார்க்கின்றார். அந்த எண்ணத்தின் விளைவு இதோ எரிதழலைக் கக்கிக் கொண்டு ஒரு பாடலாகப் புறப்படுகின்றது.

'நடவு செய்த தோழர்கூலி நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாத செல்வர் ஊரையாண்டு லாவலும்
கடவுளாணை என்றுரைத்த கயவர் கூட்ட மீதிலே
கடவுளென்ற கட்டறுத்துத் தொழிலுளாரை ஏவுவோம்'

கடவுளைக் கொண்டு வந்து நிறுத்தும் கயவர்களுக்கு எதிராகக் கடவுள் என்ற கட்டை அறுத்துத் தொழிலாளர்களை ஏவுவோம் என்கின்றார். 'பொதுவுடமைக் கோட்பாட்டு எதிரிகளின் பயங்கர மான ஆயுதங்களில் ஒன்றான கடவுளை மட்டுமன்று; அதைக் கையிலெடுத்து வரும் கயவர்களையும் அறுப்போம்' என்கின்றார். இனி மற்றொரு ஆயுதமான மதத்தைப் பற்றிப் பாவேந்தர் என்ன கூறுகின்றார்?

'மூடத் தனத்தை முடுக்கும் மதத்தை நிர்
மூலப் படுத்தக்கை யோங்குவீர்-பலி
பீடத்தை விட்டினி நீங்குவீர்''

எனப் பாடுவதன் வாயிலாக மதத்தை நிருமூலம் செய்வது (அடியோடு அழிப்பது) தான் தொழிலாளர் உய்யும் நெறி என்று உரைக்கின்றார்.

தோழர் ம. சிங்காரவேலரைப் பாராட்டிப்பாடும் ஓர் இசைப் பாடலில் தனக்கும் பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கும் உள்ள உறவு எத்தகையது என்பதை விளக்கிக் கூறுகின்றார்.

'மூலதனத் தின்பொருள் புரிந்ததும் அவனால்
புதுவுல கக்கனா முளைத்ததும் அவனால்
கோலப் பொதுவுடைமை கிளைத்ததும் அவனால்
கூடின அறிவியல் அரசியல் அவனால்
போர்க்குண மிகுந்த செயல்முன் னோடி
பொதுவுடைமைக் கேகுக அவன்பின் னாடி'

(தேனருவி, ப-120)

இங்குப் பாவேந்தர் 'மூலதனம்' என்று குறிப்பிடுவது கார்ல் மார்க்சின் 'மூலதனம்' என்ற நூலைத்தான். அந்நூலின் பொருளைத்தான் அவனால் விளங்கிக் கொண்டேன் என்கின்றார்



பாவேந்தர். 'மூலதனத்தின்' பொருளைப் புரிந்து கொண்டதனால் தான் 'பொதுவுடைமைக் கேகுக அவன் பின்னாடி' என்று பாடுகின்றார். உருசிய நாட்டின் எழுச்சியைக் கண்டு மட்டும் பாடல் பாடியவரல்லர் பாவேந்தர். 'மூலதனத்தின்' வாயிலாகப் பொதுவுடைமையை இனங்கண்டுகொண்டு பாடியவர் பாவேந்தர் என்பதனை இதனால் அறிகின்றோம். இன்னும்

'ஆமை என வாழ்வதல் வீணான குறுமை;
ஆக்கு தேக்குக பொருள்பொது உடைமை;
உடையவன் இல்லான் என்பதை நீக்கி
உழைப்பினை அனைவர்க்கும் பொதுமை யாக்கி
உழைப்புக் கேற்ற ஊதியம் தேக்கி
உலகம் நடத்துக ஓரர சாக்கி''

(தேனருவி, ப. 132)

சமதர்ம நெறிப்பட்ட ஒருலக இணைப்பையும், அவ்வுலக முழுமைக்கும் ஓரரசு உருவாக வேண்டும் என்ற நினைப்பையும் வெளிப்படுத்துகின்றார் பாவேந்தர். இதனால் பொதுவுடைமைக் கோட்பாட்டை இனங்கண்டு பாடியவர் பாவேந்தரே என்று தெளிவாக அறிய முடிகின்றது.

இரண்டாவது உலகப் பெரும் போர் தொடங்கி விட்ட நேரம். பெல்சியம், போலந்து முதலிய நாடுகள் ஜெர்மானிய இட்லரின் போர் வெறிக்கு அடிமையாகிவிட்டன. பின்னர் அவனுடைய பார்வை உருசியத்தின் மீது படர்ந்தது. செருமானியப் படையும் சோவியத்து மண்ணிலே கால் வைத்து நடந்தது. உருசிய நாட்டின் இளம் வீரர்கள் செருமானியர்களை எதிர்த்து வீரப்போர் புரிகின்றனர். இதனைப் பாவேந்தர் இதய நடுக்கத்தோடு இப்படிப் பாடுகின்றார். உண்மையான பொதுவுடைமை உள்ளந்தான் இப்படிப் பாடமுடியும். பொதுவுடைமைப் போலியர்களால் இப்படிப் பாடமுடியாது.

'எத்தனை நாட்டின் சொத்துக் குவியல்
எத்தனை நாட்டில் இருந்த படைகள்
எத்தனை நாட்டில் இருந்த காலாட்கள்
அத்தனை யும்சேர்த் தலையலை யாக
உருசிய நாட்டை அழிக்கச் செலுத்தினான்;
பெரிதினும் மிகவும் பெருநிலை கண்ட

உருசிய நாட்டை ஒழிக்கச் செலுத்தினான்;
மக்கள் வாழ்வின் மதிப்பு இன்னதென
ஒக்க வாழும் உறுதி இதுவென
முதிய பெரிய முழுநிலத் திற்கும்
புதிய தாகப் புகட்டிய நாட்டில்
செலுத்தினான் இட்லர், தீர்ந்தான், முற்றிற்று;
உருசிய நாட்டின் உடைமையைக் கடமையை
மக்கள் தொகையால் வகுத்தே வகுத்ததை
உடலில் வைத்தே உயிரினால் காக்கும்
உருசி யத்தை இட்லர் உணர்கிலான்'

(தொகுதி 2, ப. 143)

இப்பாடலில் 'உருசிய நாடு' என்றும், 'பெரிதினும் மிகவும் பெரு நிலைகண்ட உருசிய நாடு' என்றும், 'மக்கள் வாழ்வின் மதிப்பையும், ஒக்க வாழும் உறுதியையும், முதியதான, பெரியதான இந்த முழு உலகத்திற்கும் புதியதாகப் புகட்டிய நாடு என்றும், இவ்வாறு வையக வாழ்வுக்கே எடுத்துக்காட்டாக விளங்கும் உருசிய நாட்டின் மீது தன் கொலைவெறிப் படையைச் செலுத்தினான். இட்லர் ஒழிந்தான்; அவன் கதை முடிந்துவிட்டது.

'தீர்ந்தான்'; 'முற்றிற்று' என்று அவர் பாடுவதிலிருந்தே பாவேந்தரின் ஆவேச உணர்ச்சியை நம்மால் அறியமுடிகின்றது. இந்தப் பாடலை அவர் எழுதிய போது இரண்டாம் உலகப் போர் முடிந்துவிடவில்லை. அப்பொழுதுதான் தொடங்கியிருக்கின்றது. ஏனெனில் இப்பாடலின் கீழ் 'இப்பாடல் வையப் போரில் உருசியாவைச் செருமனி தாக்கத் தொடங்கிய போது எழுதியது' என்ற குறிப்பொன்று உள்ளது. போர் தொடங்கிய போதே அதன் முடிவை எப்படிப் பாவேந்தரால் கூற முடிந்தது? உருசிய மக்களின் உள்ள உறுதி அவரை அப்படிக் கூறவைத்தது. அஃதென்ன உறுதி?

உருசிய நாட்டின் அனைத்து உடைமையும், அந்நாட்டிற்கு அம்மக்கள் ஆற்ற வேண்டிய அனைத்துக் கடமையும் தொகுக்கப் பட்டு அந்நாட்டு மக்கள் தொகையாலே வகுக்கப்பட்டதாம். ஒவ்வொரு குடி மகனுக்கும் ஈவாகக் கிடைத்த உடைமையும் கடமையும் அந்நாட்டு மக்களால் தம் உடம்பிலே வைத்து உயிராலே பாதுகாக்கப்பட்டதாம். உருசியத்தில் அரசு என்பதும் படை என்பதும் வேறு வேறு அன்று; அந்நாட்டு மக்களே, ஆகவே தான் தீர்ந்தான் இட்லர், அவன் கதை முடிந்தது என்கிறார். உருசிய



நாட்டின் கோட்பாடுகளை மட்டுமல்ல; உருசிய மக்களின் உள்ளத்தைக்கூட எவ்வளவு தெளிவாக ஆராய்ந்து பார்த்திருக் கிறார் பாவேந்தர்? பொதுவுடைமைக் கோட்பாட்டிலே மட்டு மன்று, பொதுவுடைமையை நிலைநிறுத்தும் நெறி முறையிலே மட்டுமன்று; பொதுவுடைமை நாட்டுக்கு ஊறு வந்தால் அவ்வூறு ஒழிக்கப்படும் என்பதிலும் **அசைக்க** முடியாத பற்று இருந்ததை அறிகின்றோம்.

பாரதியார் 'உருசியாவில்கூட இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சோசலிஸ்ட் ராஜ்யம் எக்காலத்தும் நீடித்திருக்கும் என்று கருத வழியில்லை' என்றொரு முடிவை வெளிப்படுத்திய செய்தியை முன்னரே எடுத்துக்காட்டினேன். பாரதியாரின் முடிவு பலிக்க வில்லை. ஆனால் பாவேந்தர் இரண்டாம் உலகப் போரில் உருசியாவிடம் இட்லர் தோற்பான்; அவன் கதை முடிந்து விடும் என்று முன்கூட்டியே கூறிய முடிவு பலித்துவிட்டது. பாரதியார் முடிவு தோற்றதற்கும் பாவேந்தர் முடிவு வென்றதற்கும் என்ன காரணம்?

பாரதியார் நீண்டகாலம் வாழ்ந்து உருசியாவின் போக்கையும் மக்களின் மனவளத்தையும் அறிவும் வாய்ப்பில்லாது போய் விட்டது என்பது உண்மைதான் என்றாலும் பாரதியார் பொது வுடைமைக் கோட்பாட்டையும் அதன் வெற்றியையும் அவ நம்பிக்கையோடு அணுகுகின்றார். பாவேந்தரோ அவற்றை முழு நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டு அணுகுகிறார். இதனால் தான் முடிவுகள் எதிரெதிராக அமைகின்றன.

அதெல்லாம் சரிதான் பொதுவுடைமை பற்றிய கருத்திலும் இவர்கள் முரண்பட்டுத்தான் நிற்பார்கள் என்றால் பாவேந்தரைப் பாரதி'தாசன்' என்பது எப்படிப் பொருந்தும்?

# 7. தமிழ் ஈடுபாடு

புலவர்கள் தம் தாய்மொழியிடத்தே பேரன்பு கொள்ளுவதும் பெருஞ்சிறப்புச் செய்வதும் இயல்பான ஒன்றுதான். பாரதியாரும் பாவேந்தரும் தத்தமக்கியைந்த வகையில் தமிழ் மொழியிடத்தே பற்றுக் கொண்டுள்ளார்கள். அப்பற்றினைத் தாம் எழுதிய கவிதை களிலும், கட்டுரைகளிலும் வெளிப்படுத்தியும் உள்ளார்கள். இருவருடைய கருத்துக்களையும் ஒன்று திரட்டி ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து பார்த்தால் முடிவு எப்படி வரும்? அதனை இனிக் காண்போம்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காண்போம்' என்று அறுதியிட்டு உரைக்கின்றார் பாரதியார். அத்தகைய தமிழ் என்றென்றும் சிறப்புற்று வாழ வேண்டும் என்று எண்ணுகிறார். அது தமிழ் வாழ்த்தாகப் புறப்படுகின்றது.

'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வழியவே
வானம ளந்தத னைத்தும ளந்திடும்
வண்மொழி வாழியவே'

என்கின்றார்.

தமிழ்நாட்டில் கல்விமுறை மாற்றியமைக்கப்பட்டுத் தமிழ் வாயிலாகவே எல்லாம் கற்பிக்கப்பட வேண்டும் என்பதில் பாரதியார் அழுத்தமான கருத்துக் கொண்டிருந்தார். இதோ அவர் கருத்து.

'அ........ன்'

'மேலே காட்டிய குறியின் பொருள் யாது? தமிழ்நாட்டில் தேசியக் கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகர முதல்



னகரப்புள்ளி ஈறாக எல்லாவியவகாரங்களும் தமிழ்- பாஷையில் நடத்தப்பட வேண்டும் என்பது பொருள்'.

(பாரதி நூல்கள் கட்டுரைகள், ப. 254)

இவ்வாறாகத் தமிழ் இனிமையான மொழியென்றும் அது பயிற்று மொழியாக்கப்பட வேண்டும் என்றும், அது என்றென்றும் வாழ வேண்டும் என்றும் பாடுகின்றார். இனித் தமிழின் தோற்றம் பற்றி என்ன கருதுகிறார் என்றும் பார்ப்போம். தமிழ்த்தாய் தானே தன் வரலாற்றைக் கூறுவது போல் இப்பாடலைப் பாடியுள்ளார். தமிழ்த்தாய் என்ற தலைப்பிலே வருவது இந்தப் பாடல்:

'ஆதி சிவன் பெற்றுவிட்டான்-என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டும கிழ்ந்தே-நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்
மூன்றுல கத்தமிழ் மன்னர்-என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளி னுள்ளே-உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்.'

இனிக் கட்டுரையிலும் தமிழ் மொழியின் தோற்றம் வளர்ச்சி பற்றி எழுதுகின்றார் அதனையும் காண்போம்.

'தமிழ் பாஷைக்கோ இலக்கணம் முதல் முதலாக அகஸ்தியரா லும் அவருடைய சிஷ்யரான திரணதூமாக்னி (தொல்காப்பியர்) என்ற ஆரிய முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்டது என்பது மெய்யே. அதனின்றும் தமிழ் இலக்கணம் ஸமஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கின்றது என்பது மெய்யே.

(பாரதியார் கட்டுரைகள், ப- 222)

தமிழைப் படைத்தவன் சிவன் என்பதும் அதற்கு இலக்கணம் செய்தவன் அகத்தியன் என்பதும் அதனையும் வடமொழி இலக்கணத்தை அடிப்படையாக வைத்தே எழுதினான் என்பதும் சரியான கட்டுக்கதை என்பதை மொழிப்புலமை முற்றியோர் எடுத்துக் காட்டுகின்றனர். ஒரு மொழியை அதனைப் பேசும் மக்கள்தான் படைத்தார்களே தவிர எந்தக் கடவுளரும் படைப்ப தில்லை. மேலே காட்டப்பட்ட பாடலிலும், உரை நடையிலும்

மூன்று கருத்துக்கள் வரலாற்றிற்குப் பொருந்தா வகையில் வலியுறுத்தப் பட்டிருப்பதைக் காணலாம்.

தமிழுக்கு இலக்கணம் செய்தவன் 'ஆரிய மைந்தன்' அகத்தியன் என்றும், திரணதூமாக்னி' என்ற ஆரிய முனிவர் என்றும் கூறப்படுவது ஒன்று.

''ஆன்ற மொழிகளினுள்ளே உயர் ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்'' என்பது இரண்டு.

சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழுக்கு இலக்கணம் இயற்றப்பட்டது என்பது மூன்று.

தமிழுக்கு ஆரிய முனிவர்கள் இலக்கணம் செய்து கொடுத் தார்கள் என்றால் தமக்கென ஒரு இலக்கணத்தைப் படைத்துக் கொள்ளும் தகுதி இல்லாதவர்களாகத் தமிழர் இருந்தனர் என்று ஆகிறது. இதனினும் கொடுமை என்னவென்றால் தனக்கென ஒரு மொழியைக்கூடப் படைத்துக் கொள்ளத் தெரியாத ஊமைகளாக இருந்தனர் தமிழர். ஆகவே ஆதிசிவன் தமிழைப் படைத்துக் கொடுக்க அகத்தியன் வடமொழி இலக்கணத்தை அடியொற்றித் தமிழுக்கு இலக்கணம் செய்து கொடுத்தான் என்பது. தமிழ் பேச்சு வழக்கு மொழியாக இருக்கும் பொழுதே, சமஸ்கிருதம் இலக்கண வரம்புடைய மொழியாகி விட்டது என்ற கருத்தை வலியுறுத்து வது அல்லவா? இது தமிழை விட வடமொழி உயர்வானது, காலத்தால் மூத்தது என்ற கருத்தை உண்டாக்கவில்லையா?

இனி உயர் ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன் என்பதும் தமிழைவிட ஆரியம் உயர்ந்தது என்ற கருத்தை வலியுறுத்து கின்றது. நிகர் என்பதற்குச் சமம் என்ற பொருளிருந்தாலும் உவமேயத்தை விட உவமை சிறந்தது என்ற அடிப்படையில் ஆரியத்தை உயர்த்துவதாகவே உள்ளது.

எவனுக்கும் அவன் தாய் மொழிதான் உயர்வான மொழியாக இருக்க முடியும். காக்கைக்குத் தன்குஞ்சு தான் பொன்குஞ்சு. எவ்வளவு அழகாக இருந்தாலும் கிளியின் குஞ்சு காக்கைக்குப் பொன்குஞ்சு ஆக முடியாது. பாரதியார் உலக இயல்புக்கு மாறாக இருக்கிறாரே ஏன்?

நாம் இப்படித் தோண்டித் துருவிப்பார்த்துத் தமிழை விட வட மொழியே உயர்வானது என்ற கருத்துப் பாரதியாருக்கு உண்டு



என்று சொல்ல வேண்டியதில்லை. இதனை அவரே நேரிடையாக ஒப்புக் கொண்டு கூறுகின்ற இடமும் உண்டு. அதனையும் காண்போம்.

'நமது முன்னோர்களும் அவர்களைப் பின்பற்றி நாமும் கூடப் புண்ணிய பாஷையாகக் கொண்டாடி வரும் ஸமஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது, அதைத் தெய்வ பாஷை என்று சொல்வது விளையாட்டன்று. மற்ற சாதாரண பாஷைகளை எல்லாம் மனித பாஷை என்று சொல்வோமேயானால் இவையனைத்திலும் சிறப்புடைய பாஷைக்கு தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா? அதன் பொருட்டே அதைத் தெய்வ பாஷை என்கிறோம்.

(பாரதி கட்டுரைகள் - ப- 62)

ஏனையமொழிகளை விட வடமொழி மேலான மொழியே என்பதை மிகவும் அழுத்தமாக எடுத்துக் கூறுகின்றார் அதனை 'தேவபாஷை' என்று நிறுவுவதன் வாயிலாக உண்மையில் தனக்குத் தாய்மொழி வடமொழியே என்பதை ஒப்புக்கொண்டு விடுகிறார்.

பாரதியாருக்குத் தமிழில் பற்றுஉண்டு; வடமொழியிலும் பற்று உண்டு. வடமொழியில் சற்றே கூடுதலான பற்று உண்டு. பாரதியாருக்குத் தமிழும் உயர்ந்தது என்பது கோட்பாடு. பாரதிதாசனுக்குத் தமிழே உயர்ந்தது என்பது கோட்பாடு. தமிழின் தோற்றம். இலக்கணம்பற்றிப் பாரதியார் கூறும் கருத்துக்களைப் பாவேந்தர் ஏற்றுக் கொள்கின்றாரா? ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் விடை. ஏற்றுக் கொள்ளாதது மட்டுமில்லை. பாரதியாருடைய கருத்தை எதிர்த்தே எழுதுகின்றார் இதோ பாவேந்தர் பாடல்.

'அம்மா என்றழைத்தல் காகா
    எனச்சொலல் அஃதென் றொன்றைச்
செம்மையிற் சுட்டல் என்னும்
    இயற்கையின் செறிவி னாலே
இம்மாநி லத்தை யாண்ட
    இயற்றமி ழேயென் அன்பே
<u>சும்மாதான் சொன்னார் உன்னை</u>
    <u>ஒருவன்பால் துளிர்த்தாய் என்றே'</u>

படுப்பினும் படாது தீயர்
 பன்னாளும் முன்னேற் றத்தைத்
தடுப்பினும் தமிழர் தங்கள்
 தலைமுறை தலைமு றைவந்து
அடுக்கின்ற தமிழே பின்னர்
 அகத்தியர் காப்பி யர்கள்
கெடுப்பினும் கெடாமல் நெஞ்சக்
 கிளைதொத்தும் கிளியே வாழி!

(அழகின் சிரிப்பு)

தமிழைச் சிவன் படைத்தான்; அகத்தியன் இலக்கணம் செய்தான் என்று பாரதியாரின் கருத்தைப் பெயர் சுட்டாமல் வெளிப்படையாகவே மறுப்பதனை இப்பாடலால் அறியலாம். மேலும் தமிழ் சிவனாற் படைக்கப்பட்டதன்று. மக்களால் இயற்கையினின்றும் உருவாக்கப்பட்டதே என்ற கருத்தையும் வெளிப்படுத்துகின்றார். அம்மா, காகா, அஃது என்பன விலங்குகள் பறவைகள் இடமிருந்து - அதாவது இயற்கையில் இருந்து உருவாக்கப்பட்டன என்றும், ஆகவே இஃதோர் இயற்கை மொழியேயன்றிச் செயற்கை மொழியன்று என்றும் எடுத்துக் காட்டுகின்றார். ஆக்கத்தமிழின் தோற்றம் பற்றிய கருத்திலும் பாரதிக்கு எதிரான கருத்தையே வெளிப்படுத்துகின்றார்.

பாரதியாருக்குத் தமிழிடம் பகையில்லை; அன்பே உண்டு, எனினும் அவருடைய வடமொழிச்சார்பு மிகுதியாகத்தான் இருக்கிறது. அவர் இரண்டையும் தன்னுடைய தாய்மொழி யாகவே எண்ணுகின்றார். எனினும் அவருக்கிருந்த வடமொழிப் பயிற்சி காரணமாகவும் அக்காலத்தில் வடமொழிக்கிருந்த ஆதிக்கச் சூழ்நிலை காரணமாகவும் அவரிடம் வடமொழிச்சார்பு மிகுதி எனல் பொய்யுரையன்று.

பாரதியார் ஞானரதத்தில் ஏறிக் கந்தர்வலோகம் போகின்றார். அங்குள்ள சிறுவன் ஒருவன் ஒரு பாடலைப் பாடுகின்றான். அப்பாடலின் இனிமையைப் பாரதியார் இவ்வாறு கூறுகின்றார்.

'அவன் (சிறுவன்) மண்ணுலகத்துப் பிராகிருத பாஷையைப் போலிருக்கும் இன்சொல் நிரம்பிய கந்தர்வ பாஷையிலே ஒரு பாட்டுப் பாடினான்.

(பாரதி நூல்கள் வசனங்கள், ப- 24)



பிராகிருத பாஷை என்பது என்ன? வடமொழியின் திருந்திய வடிவம் சமஸ்கிருதம், திருந்தா வடிவம் - அதாவது வழக்கியல் மொழி பிராகிருதம். இங்கே கந்தர்வ மொழிக்கு உவமை சொல்ல வந்தவர் பிராகிருதத்தையும் அதன் இனிமையையும் எடுத்துக் காட்டுகின்றார். கந்தருவ மொழிக்குத் திருந்தாத மொழியாகிய பிராகிருதத்தை உவமையாக எடுத்துக்காட்டியவர் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' என்று பாடினாரே அத்தமிழை உவமையாக்கி இருக்கக்கூடாதா? 'தமிழ் மொழி போல் இனிதாவது யாமறிந்த மொழிகளிலே வேறு இல்லை என்று கூறியபோது அவர் சமஸ்கிருதத்தையும் பிராகிருதத்தையும் படித்திருக்கவில்லையா? ஏன் தமிழை உவமை யாக்கக் கூடாது? ஏனோ அவருக்குத் தமிழை உவமையாக்க மனம் இல்லை.

இன்னும் கந்தர்வலோகப் பயணம் தொடர்கிறது. பாரதியாரும் பர்வதகுமாரியும் ஓர் ஆலயத்தினுள்ளே நுழைகிறார்கள்.

'பர்வத குமாரி ஆலயத்துள்ளே ஓர் தனியிடத்தே கீழ்த்திசை நோக்கிப் பத்மாசனமிட்டு உட்கார்ந்து கொண்டு கண்ணிலே பரவச வெறி மிதக்க 'ஓம் நம: பிரம்மனே' என்று சொல்லிச் சொல்லி ஜபித்தாள். நானும் 'ஓம் நம: குமார்யை' என்று யோகத்தில் ஆழ்ந்து விட்டேன்' என்று பாரதியார் எழுதுகின்றார்.

பாரதியார் என்னதான் தமிழ் உயர்வானது என்ற கருத்துக் கொண்டிருப்பதாக எழுதினாலும் வடமொழியைப் பற்றி எழுத நேரிடுகின்ற பொழுது அவருடைய எழுச்சியும் கிளர்ச்சியும் வேறாகவே இருக்கின்றது. இன்னொரு வகையில் சொன்னால் தமிழைப் பற்றிப் பாரதிதாசன் பாடுகின்ற பொழுது எத்தகைய உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றாரோ அத்தகைய உணர்ச்சி யைப் பாரதியார் வடமொழியைப் பற்றி எழுதுகின்ற போது வெளிப்படுத்துகின்றார்.

பாரதியார் தமிழை ஓர் இலக்கிய வளமுள்ள மொழி என்ற அளவிலேதான் நோக்குகின்றார். கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவி என்பது போலச் சில இடங்களில் நோக்குகின்றார். ஆனால் பாரதிதாசனோ தமிழை ஒரு மொழி என்ற அளவிலே நோக்குவ தில்லை தமிழனின் மானமாக - உயிராக - செல்வமாக என அனைத்துமாகத் தமிழ் விளங்குவதாக எண்ணுகின்றார்.

'செந்தமிழே, உயிரே, நறுந்தேனே,
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தாய் எனில் நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே'

(இசையமுது 1, ப-32)

தமிழின் உயர்வே தமிழனின் உயர்வு. தமிழின் வீழ்ச்சி தமிழனின் வீழ்ச்சி என்று பாவேந்தர் கருதுவதனை அறியலாம். இது போன்ற ஒரு கருத்தைப் பாரதியாரிடமிருந்து (தமிழைப்பற்றி) அறிய முடியவில்லை. தனக்கும் தமிழுக்கும் இருக்கின்ற பற்றும் தொடர்பும் பிரிக்க முடியாதது என்பதனை ஒரு பாடலால் உணர்த்துகின்றார் பாவேந்தர்.

வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும் கூர்வாளும் போலே
வண்ணப் பூவும் மணமும் போலே
மகர யாழும் இசையும் போலே
கண்ணும் ஒளியும் போலே எமது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ?

(இசையமுது 1, ப - 44)

தமிழனுக்கு எல்லாவற்றையும் தரவல்லது தமிழே என்பதனைப் பாவேந்தர் இவ்வாறு பாடுகின்றார்.

'வெல்வது வேலன்று செந்தமிழ் ஒன்றே!
நல்லொற் றுமைசேர்க்கும்; நன்னெறி சேர்க்கும்
வல்லமை சேர்க்கும் வாழ்வைஉண டாக்கும்
வண்டமிழ் நைந்திடில் எதுநம்மைக் காக்கும்?
தமிழர்க்கு மானம் தனியுயிர் யாவும்
தமிழே யாதலால் வாழ்த்துவோம் நாளும்'

(தேனருவி; ப - 12)

'இனியன என்பேன் எனினும் தமிழை என்னுயிர் என்பேன்' என்றும், 'அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்றும், 'நாவிலினித்திடும் அப்பம் உன்னை வளர்ப்பன தமிழா உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே' என்றும் பாடுவார், ஒரு மனிதனின் வாழ்க்கையில் உயிரும் உணர்வும் பெறுகின்ற இடம் உயர்வானது. உயிர் இருந்தால் தான் உணர்வு இருக்க முடியும்



என்பது உண்மைதான், சில நேரங்களில் உணர்வு இருப்பதை வைத்துத் தான் உயிர் இருப்பதை அறிய வேண்டியுள்ளது இது பொதுவாக உயிரும் புலன்களின் செயற்பாடும் பற்றிய கருத்துத் தான். இங்கே பாரதிதாசனார் குறிப்பிடும் உணர்வு ஐம்புல உணர்வுகளுக்கும் மேலான ஓர் உணர்வை என்பது அவர் நூல்களைக் கற்பவர்க்கு எளிதில் புலனாகும். அவர் குறிப்பிடும் உணர்வு இன, மொழி, நாகரிக, பண்பாட்டு உணர்வுகளாகும்.

தமிழ் கலப்பட மற்ற தூய தமிழாக நின்று இலங்க வேண்டும் என்பது பாவேந்தரின் குறிக்கோள். தொடக்க நாளில் வடமொழி கலந்து எழுதியவர் தாம் பாவேந்தர். மறைமலையடிகள், தமிழ் மறவர் பொன்னம்பலனார் போன்றவர்களின் தொடர்பால் தனித் தமிழ் இயக்கத்தைச் சார்ந்து எழுதத் தொடங்கி விடுகின்றார். முதல் கவிதைத் தொகுதியையும் பின்னர் வெளிவந்த குடும்ப விளக்கை யும் ஒப்பிட்டுப் பார்ப்பீர்களேயானால் இவ்வுண்மையை உணர முடியும். இதோ ஒரு தமிழ்க் கனவு பற்றிப் பாவேந்தர் பாடுகின்றார்.

'தமிழ்த் தொண்டர்கள் எங்கும் சுற்றிப் பணம் தொகுத்துத் தொண்டு செய்யக் கிளம்பியுள்ளனர். எங்கும் ஒரு அதிர்ச்சி; மகிழ்ச்சி, திடலிலே கூடினர். 'உயிரோ நம் தமிழ்' என்றார்கள். கூடியிருந்த கூட்டம் அகிலமே கிழியுமாறு ஆம்! ஆம்! என்று கூறிற்று. கவிஞர்கள் தங்கள் பாடல்களை இசைத்தார்கள்; சிறந்த நூல்களைத் தொகுத்தனர். இசையெல்லாம் தமிழாக முழங்கிற்று இந்நிலையில்.

'காதல் ததும்பும் கண்ணா என்றனைக்
கோதை யொருத்தி கொச்சைத் தமிழால்
புகழ்ந்தா ளென்று பொறாமல் சோர்ந்து
வீழ்ந்தான்; உடனே திடுக்கென விழித்தேன்;
அந்தோ அந்தோ பழைய
நைந்த தமிழரொடு நானிருந் தேனே'

கனவிலே கண்ட தமிழ் எழுச்சியும், விழித்த பின் நைந்த தமிழரொடு அவர் இருந்த அவலமும் ஒருபக்கம் இருக்கட்டும். ஏன் கனவு கலைந்தது? கோதை ஒருத்தி காதலன் பெருமையைக் கொச்சைத் தமிழால் புகழ்ந்தாளாம். அக்கொச்சைத் தமிழைப் பொறுத்து கொள்ள முடியாத காதலன் சோர்ந்து வீழ்ந்தான். அது கனவைக் கலைத்து விழிப்பை ஏற்படுத்திவிட்டது. கொச்சைத்

தமிழால் பேசியதே பிடிக்கவில்லை என்றால், பச்சை ஆரியமும் ஆங்கிலமும் கலந்து எழுதுவது பாவேந்தருக்கு எப்படிப் பிடிக்கும்? அதனால் தான் மொழிக் கலப்பை எதிர்த்துக் குரல் கொடுக்கின்றார். இதனைப் பற்றிப் பாரதியார் கருத்து என்ன? மொழிக் கலப்பை ஆதரிக்கின்றாரா? எதிர்க்கின்றாரா?

பாரதியார் 'தனித்தமிழ்' என்று எங்கும் குறிப்பிடவில்லை. அவர் தனித்தமிழில் எழுதாமையும் ஒரு குறையில்லை. ஏனெனில் அக்காலச் சூழலில் பாரதியார் இவ்வளவு எழுதியதே பாராட்டுக் குரியது தான்; ஆனால் மொழிபெயர்ப்புப் பற்றி ஓரிடத்தில் எழுதும்பொழுது.

'பௌதிக சாஸ்திரங்கள் கற்றுக் கொடுப்பதில் மிகவும் தெளிவான எளிய தமிழ் நடையில் பிள்ளைக்கு மிகவும் சுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடத்தில் எல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே பயன்படுத்த வேண்டும் திருஷ்டாந்தமாக 'ஆக்ஸிஜன்' 'ஹைட்ரஜன்' முதலிய பதார்த்தங்களுக்கு ஏற்கனவே தமிழ்நாட்டில் வங்கப்பட்டிருக்கும் பிராணவாயு ஜலவாயு, என்ற நாமங்களையே வழங்க வேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படா விட்டால் ஸமஸ்கிருத பதங்களை வழங்கலாம். பதார்த்தங்களுக்கு மட்டுமேயன்றிக் கிரியை களுக்கும், அவஸ்தைகளுக்கும் (நிலைமைகளுக்கும்) தமிழ் சமஸ் கிருத மொழிகளையே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப் படுத்தலாம். ஆனால் குணங்கள், செயல்கள், நிலைமைகள் இவற்றுக்கு இங்கிலீஷ் பதங்களை ஒரு போதும் வழங்கக் கூடாது.''

(பாரதி நூல்கள் கட்டுரைகள் ப-500)

ஆங்கிலத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று கட்டளை இடுகின்றவர். வடமொழியைக் கலந்து எழுதலாம் என்பது ஏன்? பிராணவாயு, ஜலவாயு என்றே எழுத வேண்டும். மாற்றக்கூடாது என்று கண்டிப்புக் காட்டுவது ஏன்? மேற்கூறிய பாரதியாரின் கூற்றில் கிரியைகள், அவஸ்தைகள் என்று எழுதிக் கொண்டு வந்தவர் இது தமிழருக்கு புரியாது என்று எண்ணினார் போலும், அதனால் இறுதியில் செயல்கள் நிலைமைகள் என்று தமிழில் மாற்றிவிடுகின்றார். வேற்று மொழியில் (வடமொழியில்) எழுதினால் மக்களுக்குப் புரியாது என்பது பாரதியாருக்குப் புரிந்தே



இருக்கிறது. என்றாலும் வடமொழியைக் கலந்து எழுதலாம் என்கின்றார். ஆங்கிலம் கலப்பது மொழிக்கலப்பு என்றால் வட மொழிக்கலப்பு மொழிக்கலப்பு ஆகாதா? இதனை மொழிக்கலப்பு என்று எண்ணாமைக்கு என்ன காரணம்? ஆங்கிலத்திடம் காட்டும் கண்டிப்பை வட மொழியிடம் காட்டவில்லையே ஏன்? தமிழை யும் வடமொழியையும் தன் தாய்மொழியாகக் கருதியிருந்தால் இரண்டையும் சமமாகப் போற்றியிருக்க வேண்டாவா? வட மொழி உயர்வு என்பது போல எழுதியது ஏன்? பாரதியாருக்குப் பெற்ற தாயும் உண்டு; வளர்த்த தாயும் உண்டு என்பதனை நாம் அறிவோம். இருதாயரிடத்தும் அவர் அன்பு செலுத்தியிருக்கலாம். எனினும் பெற்றதாய் பெற்ற தாய்தானே! வளர்த்த தாய் பெற்ற தாயாக முடியுமா?

கொச்சைத்தமிழால் காதலனைப் புகழ்ந்தும் அவன் அதனைப் பொறாது சோர்ந்து வீழ்ந்ததும் பாவேந்தர் உறக்கத்தையும் கனவையும் கலைத்தது. பச்சை ஆரியக் கலப்பும். இசையில் தெலுங்கின் ஆதிக்கமும், நடைமுறை வாழ்வில் ஆங்கிலத்தின் அதிகாரமும் கண்டு இத்தமிழன் உறக்கம் கலைந்து எழுவானா? அவனுடைய அறிவைக் கெடுக்கும் புராணக்கனவுகள் கலையுமா? என்ற கருத்தைத் தமிழ்க்கனவு என்ற பாடலில் அவாய் நிலையாக வெளிப்படுத்துகின்றார். ஆகத் தனித்தமிழ் வளர்ச்சி பாரதி தாசனின் விருப்பம்; கலப்புத் தமிழின் வளர்ச்சி பாரதியாரின் விருப்பம். இதிலும் கூட இருவருக்கும் ஒத்தகருத்தில்லை என்றால் பாவேந்தரை எங்ஙனம் பாரதி 'தாசன்' என்று அழைப்பது?

தமிழைப் பொறுத்தவரையில் தமிழ்ப்புலவர் ஏனையோரில் இருந்து வேறுபட்டவராகக் காணப்படுகின்றார் பாவேந்தர். எல்லாவகையான எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் தமிழே கருவி என்ற கருத்துடையவர். தமிழின் மறுமலர்ச்சிக்காக அவர்பாடிய 'தமிழியக்கம்' போன்ற நூலை அவருக்கு முன்னர் எவரும் பாடியதில்லை. 'தமிழ்விடு தூது' பாடப்பட்டிருக்கின்றது; தமிழ் விடுதலைத் தூது பாடப்பட்டதில்லை.

கோயிலிலே இருந்து தமிழ் அகற்றப்பட்டது. ஆரியம் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது. தமிழர் வாழ்வில் நிகழும் திருமணம் முதல் கருமாதி வரை தமிழ் துரத்தப்பட்டது. ஆரியம் அங்கெல்லாம் அரியணை ஏறியது.

தமிழிசை முழங்கிய மேடைகளில் வாதாபிகணாபதிம்' வந்து குந்திக் கொண்டது. தியாகராஜரின் தெலுங்குக் கீர்த்தனங்கள் தமிழரின் இசைச்செவியை ஒட்டைச் செவியாக்கி விட்டன. கல்லூரிகளை ஆங்கிலம் கைப்பற்றிக் கொண்டது. வணிகர்களின் விளம்பரப் பலகையில் இருந்தும் தமிழ் அப்புறப்படுத்தப்பட்டது. இது போதாது என்று இந்தியின் ஆதிக்கம் வேறு. இந்நிலையில் மொழிக்காகப் போராட வேண்டியது இன்றியமையாததாகி விட்டது. அப்போராட்டத்திற்கான படைக்கலன்தான் 'தமிழியக்கம்' என்ற நூல்,

'விழிப்போரே நிலைகாண்பார்; விதைப்போரே
அறுத்திடுவார்; களைகாண் தோறும்
அழிப்போரே அறஞ்செய்வார்; அறிந்தோரே
உயர்ந்திடுவார்; ஆதல் ஆர்வம்
செழிப்போரே; இளைஞர்களே; தென்னாட்டுச்
சிங்கங்காள்; எழுக; நம்தாய்
மொழிப்போரே வேண்டுவது தொடக்கஞ்செய்
வீர்வெல்வீர்; மொழிப்போர் வெல்க'

(தமிழியக்கம்-52)

பாவேந்தர் எல்லாப் போர்களுக்கும் அடிப்படைப்போர் மொழிப்போரே என்று கருதுகிறார். பாரதிக்கு இந்திய விடுதலைப் போர் முதன்மை; பாரதிதாசனுக்கு மொழிப் போரே முதன்மை.

தமிழைப் பொறுத்த வரையில் புலவர் ஏனை யோரில் இருந்து பாவேந்தர் வேறுபட்டவர் என்பதை முன்பே கூறினேன். இதனை 'அழகின் சிரிப்பு' இறுதிப் பாடல் மேலும் உறுதி செய்கிறது.

''இருளினை வறுமை நோயை
இடறுவேன் என்னு டல்மேல்
உருள்கின்ற பகைக்குன் றைநான்
ஒருவனே உதிர்ப்பேன்; நீயோ
கருமான்செய் படையின் வீடு
நானங்கோர் மறவன்; கன்னற்
பொருள்தரும் தமிழே நீயோர்
பூக்காடு நானோர் தும்பி''

(அழகின் சிரிப்பு-64)



எனக்குப் போராட்டக் காலமும் உண்டு; அமைதிக் காலமும் உண்டு. போராடும்பொழுது தமிழே நீ படைக்கருவியாகத் துணை செய்கின்றாய். போர் முடிந்து அமைதியாக இருக்கும் பொழுது நீ பூக்காடாக இருக்கின்றாய். நான் தேனுண்ணும் தும்பியாக இருக்கின்றேன். தேன் நோய் நீக்கும் மருந்து மட்டுமன்று; உடம்பை வளர்க்கும் உணவுமாகும். தமிழ்த்தேன் அறியாமை நோயை அகற்றுகின்றது. அதுவே உணர்வில் வலிமையேற்றும் உணவாகவும் விளங்குகின்றது அந்த வலிமை போராட்டத்தில் வெற்றி பெற உதவுகின்றது. எனவே தமிழ் நோய் நீக்கி வலிமை தருவதாகவும் இருக்கிறது. அதே நேரத்தில் போருக்குத் தேவையான படைக்கலனாகவும் இருக்கிறது. வலிமையும் கருவியும் இருக்கின்றதனால் வறுமை நோயை இடறித்தள்ளுவேன். என்மேல் வந்துவிழும் பகைக் குன்றத்தை நான் ஒருவனே பொடிப்பொடி யாகுமாறு அடித்து நொறுக்கு வேன் என்ற புதுமையான கருத்தை வெளிப்படுத்துகிறார்.

பாரதியாரிடம் இது போன்ற தமிழ் உணர்வும், தமிழ் மேம் பாட்டுக்கான போராட்ட வேகத்தையும் காண முடியவில்லை. என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு என்ன காரணம்? பாரதியார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் முனைந்து நின்றது ஒன்று. வடமொழியைத் தன்னுடைய முதல் தாய்மொழி யாகக் கருதியது இரண்டு. இவ்விரண்டும் தாம் காரணமாக இருக்க முடியும். பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் தமிழ் பற்றிய கருத்து வேற்றுமை வெளிப்படையாகவும் விரிவாகவும் தெரிகின்ற பொழுது பாரதியாரின் 'தாசன்' என்று பாவேந்தரை அழைப்பது பொருந்துமா?

# 8. குறிக்கோள் வெளிப்பாடு

கவிஞர்களில் இரண்டு பிரிவினர் இருக்கின்றனர். ஒரு பிரிவினர் எதையாவது பாடி எப்படியாவது புகழ் பெற எண்ணும் பிரிவினர். மற்றொரு பிரிவினர் இதைத்தான் பாடுவது என்ற குறிக்கோளோடு பாடிச் சிறப்பு அடைபவர்கள். குறிக்கோள் இல்லாத கவிஞர்களின் பாடல்களில் அழகு, கவர்ச்சி, வியப் பூட்டும் தன்மை இருக்கலாம். எனினும் அவர்களின் பாடல்கள் பொழுது போக்குப் பாடல்களாகத்தான் மதிக்கப் பெறும். குறிக்கோளைப்பற்றி நின்று பாடும் கவிஞர்களின் பாடல்கள் ஊனிலும் உயிரிலும் கலந்து விட்ட பாடலாக மக்களால் மதிக்கப்பெறும்; போற்றப்பெறும்.

நாம் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இருவருமே குறிக்கோள் கவிஞர்களாகவே விளங்குகிறார்கள். 'நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற் குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்ற குறிக்கோளை முன்னிறுத்தித்தான் தன் பாடற் பணியைத் தொடங்குகின்றார் பாரதியார். அடிமைப்பட்ட இந்தியாவின் மிடிமையை அகற்றத் தன்பாடலை அருமையாகப் பயன்படுத்துகின்றார். 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்' என்று மக்களின் அறியாமையையும் மூடத்தனத்தையும் கண்டு இரங்கிப் பாடு கின்றார். 'கஞ்சிகுடிப்பதற்கில்லார் இதன் காரணங்களால் இவை என்னும் அறிவுமிலார்' என்று கூறிக்குடிப்பதற்குக் கஞ்சி கிடைக்காமல் இருப்பது கூடக் கொடுமை இல்லை. ஏன் தனக்குக் கஞ்சி கிடைக்க வில்லை என்பதற்கான காரணத்தைக்கூட அறியாமல் இருக்கிறானே அதுதான் மிகப் பெரிய கொடுமை என்று குறிப்பிடுகின்றார். ஆம்! பொருள் வறுமை வறுமை இல்லை. வறுமை ஏன் வந்தது என்று அறிந்து கொள்ள முடியாத அறிவு வறுமையே கொடிய வறுமை என்பதை ஆழமான



உணர்ச்சியோடு வெளிப்படுத்துகின்றார். இவ்வாறு மக்களையும் அவர்தம் நிலையையும் பற்றியே பாடல்கள் பிறந்தன.

காலச் சக்கரம் சுழல்கிறது. இந்தியாவிலிருந்து வெளியேறி பிரெஞ்சுக்காலனியாகிய புதுச்சேரியில் தங்கவேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாதவாறு உருவாகி விட்டது. பாரதியார் புதுச்சேரி வருகின்றார். இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட - பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற அரவிந்தரோடும், வ.வே.சு. ஐயரோடும் பாரதியாருக்குத் தொடர்பு ஏற்படுகின்றது. இத்தொடர்புகள் பாரதியாரின் போக்கில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டன என்றுதான் சொல்ல வேண்டும் குறிப்பாக அரவிந்தரின் தொடர்பு சக்தி வழிபாட்டிலே பாரதியாரைத் திருப்பி விட்டு விட்டது.

புதுச்சேரிக்கு வருகின்ற பொழுது பாரதியார் உள்ளத்தில் சில திட்டங்கள் இருந்தன என்பதை அவர் கவிதைகளால் அறிய முடிகின்றது. 'கவிதைகள், பெரிய காவியங்கள், செய்யுள் நாடகங்கள் பல இயற்ற வேண்டும். நாட்டு மக்களின் பிணியும் வறுமையும் அகலுமாறு நிறையப் பாடல்கள் பாட வேண்டும். நாட்டு மக்கள் நலமுற்று வாழ நெறிகாட்டும் கவிதைகளை இயற்ற வேண்டும்' என்றெல்லாம் ஆயிரம் ஆசைகளை மனத்திலே தேக்கி வைத்துக் கொண்டு தான் புதுச்சேரிக்கு வந்தார். ஆனால் அவர் ஆசையில் சிறிதுதான் நிறைவேறியது. பெரும்பகுதி நிறைவேற வில்லை; 'நமக்குத் தொழில் கவிதை' என்று குறிக்கோள் கொண்ட பாரதியார் இரண்டாம் முறையாக இன்னொரு நிறை வேறாத் குறிக்கோள் வெளிப்பாட்டுப் பாடலைப் பாடுகின்றார். இதோ 'பராசக்தி' என்ற தலைப்பில் அமைந்த பாடல்:-

**கதைகள் சொல்லிக் கவிதை எழுதென்பார்**
**காவி யம்பல நீண்டன கட்டென்பார்**
**விதவி தப்படு மக்களின் சித்திரம்**
**மேவி நாடகச் செய்யுளை மேவென்பார்**
**இதய மோவெனிற் காலையும் மாலையும்**
**எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்**
**எதையும் வேண்டில தன்னைப ராசக்தி**
**இன்ப மொன்றினைப் பாடுதல் அன்றியே'**

'நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென் றொருதெய்வம் கூறுமே:
கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்
கொண்டு வையம் முழுவதும் பயனுறப்
பாட்டி லேயறங் காட்டெனு மோர்தெய்வம்.
பண்ணி லின்பமும் கற்பனை விந்தையும்
ஊட்டி எங்கும் உவகை பெருகிட
ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே'

'நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலை எய்தவும்
பாட்டி லேதனி இன்பத்தை நாட்டவும்
பண்ணி லேகளி கூட்டவும் வேண்டிநான்
மூட்டும் அன்புக் கனலொடு வாணியை
முன்னுகின்ற பொழுதிலெ லாங்குரல்
காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்
கவிதை யாவும் தனக்கெனக் கேட்கிறாள்'

'சொல்லி னுக்கெளி தாகவும் நின்றிடாள்
சொல்லை வேறிடம் செல்ல வழிவிடாள்'

மனிதர்கள் கதைபொதி கவிதைகள் காவியங்கள் கவிதை நாடகங் களை இயற்ற வேண்டினர். தெய்வங்களோ நாட்டு மக்களின் பிணி, வறுமை அகலவும், அறம் இது என எடுத்துக்காட்டவும் வேண்டின. இந்தக் கோரிக்கைகள் என்னவாயின? 'அன்னை பராசக்தி என் கவிதை முழுவதையும் எனக்குத் தா என்று கேட்கின்ற காட்சியைத்தான் காணமுடிகிறது. கோரிக்கை வைத்த மனிதர்கள் தெய்வங்கள் என்பன எல்லாம் பாரதியார் மனத்திலே மூண்ட விருப்பங்கள் தாம். அவைதாம் மனிதக் கோரிக்கை யாகவும் தெய்வக் கோரிக்கையாகவும் ஏற்றிக் கூறப்படுகின்றன.

'நமக்குத் தொழில் கவிதை. நாட்டிற்குழைத்தல்: இமைப் பொழுதும் சோராதிருத்தல் என்ற தொடரில் உள்ள தெளிவும் உறுதியும் இரண்டாவது குறிக்கோளை வெளியிடும் 'பராசக்தி' பாடலில் இல்லை. ஊசலாட்டமான நிலை: இறுதியில் தன் பாடலைப் பராசக்திக்கே கொடுக்க வேண்டியுள்ளதே என்ற தவிப்பு; அவள் என் சொல்லினுக்குள்ளும் வரமாட்டேன் என்கிறாள். என் சொல்லையும் மற்ற இடத்தில் செலுத்த விட மாட்டேன் என்கிறாள் என்று கூறும் செயலற்ற நிலை. அவர்



பராசக்தியின் மயக்கத்தில் இருந்தாலும் தன்னுடைய மயக்க நிலையைத் தெளிவான சொற்களால் தீட்டிக் காட்டுகின்றார். ஆற்றல் மிக்க ஒரு கவிஞன் எப்படிச் சேர்ந்தவரின் வண்ணமாகிச் சீரழிந்தான் என்பதற்குப் பாரதியாரின் வாழ்க்கை ஒரு வருத்தந் தரும் எடுத்துக்காட்டு. புதுச்சேரி போனால் அமைதிகிட்டும். ஆயிரம் நூல்கள் எழுதலாம் என்றுதான் எண்ணினான். ஆனால் போன இடத்தில் அரவிந்தராலும் சாமியார்களாலும் அவன் போக்கு மாற்றப்பட்டு விடுகின்றது. இதன் விளைவு அவன் ஆசைகள் நிறைவேறாத ஆசைகளாகவே நின்று விட்டன. பரா சக்தி பாடலின் மையக் கருத்து என்ன? நாட்டு விடுதலையையும், நாட்டு மக்களின் அவலங்களையும் பாட வேண்டும் என்ற குறிக்கோளின் இடத்தைப் பராசக்தியைப் பாடுதல் என்ற குறிக்கோள் பிடித்தக் கொள்கிறது என்பது தான். பாரதியார் விடுதலை' என்ற தலைப்பில் பாடிய பாடல் வருமாறு:-

'பறையருக்கும் இங்குதீயர் புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை

என்று சமூக விடுதலையையும்,

'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை சாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே.'

என்று பொருளாதார விடுதலையையும்,

'தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'

என்று பெண்விடுதலையையும் பாடிய பாரதியார் அரவிந்தரின் தொடர்பும் சாமியார்களின் தொடர்பும் ஏற்பட்ட பிறகு, 'விடுதலை வெண்பா' என்ற தலைப்பிலே என்ன பாடுகிறார் என்று பாருங்கள்.

'வேலைப் பணிந்தால் விடுதலையாம்; வேல்முருகன்
காலைப் பணிந்தால் கவலைபோம் - மேலறிவு
தன்னாலே தான்பெற்று சக்திசக்தி சக்தியென்று
சொன்னால் அதுவே சுகம்.'

இன்னும் ஒரு பாடல் 'விடுதலை வேண்டும்' என்ற தலைப்பில் பாடியது. அதனையும் காண்போம்.

வேண்டுமடி எப்போதும் விடுதலை அம்மா!
தூண்டு மின்ப வாடை வீச துய்ய தேன்கடல்
சூழ நின்ற தீவி லங்கு சோதி வானவர்
ஈண்டு நமது தோழராகி எம்மோ டமுதமுண்டுகுலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய நிலைத்திடுமின்பம்

(வேண்டு)

இப்பாடலைத் தங்கள் முன்னிலையிற் பாடியதாகப் பாவேந்தர் குறிப்பிடுகின்றார்.

'வேண்டுமடி எப்போதும் விடுதலைஎன்
றாரம்பம் செய்தார் அரைநொடியிற் பாடிவிட்டார்.

(பாரதிதாசன் தொகுதி உ:78)

இதனால் இப்பாடல் புதுச்சேரியில் பாடப்பட்டதே என்றும் அறிகின்றோம். நாட்டு விடுதலை. சமுதாய விடுதலை. பொருளாதார விடுதலை, பெண் விடுதலை என்று பரந்துபட்ட அரங்கிலே பாடித்திரிந்த அந்தப் பறவை புதுச்சேரி வந்த பின்னர் ஆன்ம விடுதலை என்ற சிறிய கூண்டுக்குள் நின்று பாட நேர்ந்து விட்டதைப் பார்க்கின்றோம். மக்களைப் பாடுதல் என்ற குறிக்கோள் கூடக் கொஞ்சம் மறக்கப்பட்டுத் தன்னளவில் சக்தி சக்தி என்று சொல்லிச் சுகம்தேட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. எத்தகைய கவிஞன் எப்படி மாற்றப்பட்டு விட்டான் என்ற கழிவிரக்கம்தான் நம் நெஞ்சை நிறைக்கின்றது.

பாரதியார் புதுச்சேரிக்கு வந்ததனால் ஒரு பாவேந்தர் கிடைத்தார். பாரதியாரின் புதுச்சேரி வருகை பாவேந்தருக்கு நன்மையைத் தந்தது. ஆனால் பாரதியாருக்கு நன்மையைத் தரவில்லை. அவருடைய குறிக்கோளில் மாற்றம் ஏற்படாமல் இருந்திருந்தால். காவியங்கள், கவிதை நாடகங்கள், மனிதர்களின் வறுமை நையப் பாடிய பாடல்கள் ஏராளமாகப் பாடியிருப்பார். இப்பாடல்கள் பாரதியாரின் புகழை இன்னும் வெகுவாக உயர்த்தியிருக்கும் என்பது என் கருத்து. 'சக்திக்குள் தன்னை மூழ்கடித்துக் கொண்டதனால் பாரதியார் கவிதைகளில் வேறு செய்திகள் மிகுதியாக இடம்பெற முடியவில்லை. இதற்கெல்லாம் காரணம் அரவிந்தரும் சாமியார்களுமே என்பது என் உறுதியான முடிவு.



பாரதியார் தம் குறிக்கோளைப் பொறுத்தவரையில் நாட்டு விடுதலையில் இருந்து ஆன்ம விடுதலைக்குப் போனார். பாரதிதாசன் தன் குறிக்கோளை எப்படி வெளிப்படுத்துகின்றார் என இனி நோக்குவோம்:

பாரதியார் புதுவையில் இருந்த வரையில் பாரதிதாசன் பாரதியாரின் நிழலாகவே விளங்குகின்றார். பாரதியாரை அடியொற்றியே தேசியப் பாடல்களும் சக்திப் பாடல்களும், இயற்றியுள்ளார்.

'உலகத்தை ஓங்கச்செய் ஓபரா சக்தி
கலகத்தை நீங்கச்செய் காண்.'

(கருப்புக்குயிலின் நெருப்புக்குரல், ப- 124)

என்ற பாடலாலும், சக்திக்கு விண்ணப்பம் என்ற பகுதியாலும், எங்கெங்குக் காணினும் சக்தியடா என்ற பாடலாலும் பாரதியாரிடம் இருந்த 'சக்தி உணர்வு' பாரதிதாசனிடமும் படிந்திருக்கப் பார்க்கின்றோம். இந்த உணர்வுகள் எல்லாம் 1930வரைதான் - அதன் பின்னர் அவர் போக்கிலே பெருமாற்றம் நிகழ்ந்து விடுகிறது. தன்னுடைய குறிக்கோள் பற்றித் 'தமிழ்ப் பேறு' என்ற பாடலிலே தெளிவாக வெளிப்படுத்துகின்றார். அத் தமிழ்ப் பேற்றிலே காட்டப்படும் குறிக்கோள் அவர் இயற்கை எய்தும் வரை மாறவில்லை. இதோ தமிழ்ப் பேறு:-

'ஏடெடுத் தேன்கவி யொன்றுவ ரைந்திட
என்னை எழுதென்று சொன்னதுவான்
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியம் தீட்டுக என்றுரைக்கும்
காடும் கழனியும் கார்முகி லும்வந்து
கண்ணைக் கவர்ந்திட யத்தனிக்கும்
ஆடும் மயில்நிகர் பெண்களெல் லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார்'

'சோலைக்கு ளிர்தரு தென்றல் வரும்பசுந்
தோகை மயில்வரும் அன்னம்வரும்
மாலைப்பொ ழுதினில் மேற்றிசை யில்விழும்
மாணிக்கப் பரிதி காட்சிதரும்

வேலைச்சு மந்திடும் வீரரின் தோள்உயர்
வெற்பெனச் சொல்லி வரைகளும்
கோலங்கள் யாவும் மலைமலை யாய்வந்து
கூவின என்னை இவற்றிடையே

இன்னலி லேதமிழ் நாட்டி னிலேயுள்ள
எந்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே.'

(கவிதைகள் தொகுதி 1 ப-95)

கவிஞர் கவிதை எழுதத் தாளும் எழுதுகோலும் எடுத்துக்கொண்டு உட்காருகின்றார். வானம், ஓடைகள், தாமரைப் பூக்கள், காடுகள், கழனிகள், கார்முகில்கள், மயிலனைய பெண்கள், 'எங்களைப் பற்றி எழுது! எங்களைப் பற்றி எழுது' என்று கூறியவாறு இரந்து நின்று கவிஞரின் கண்களைக் கவர்ந்திட முனைகின்றன.

இன்னொரு பக்கம் தென்றல், மயில், அன்னம், மாணிக்கப் பரிதி, மாவீரனின் தோள்கள் இவையெல்லாம் வரிசையாக வந்துநின்று 'எம்மைப் பாடுக! எம்மைப் பாடுக!' என்று கவிஞரின் கவனத்தை ஈர்க்க முனைகின்றன. 'இத்தனை அழகுக் காட்சிகள் என்னைத் தொட்டிழுக்கின்றன. ஆனால் என்மனம் அதிலே தோயவில்லை. என்னுடைய தமிழ்நாட்டு மக்கள் துன்பத்தில் உழன்றும் விழிப்படையாது தூங்கிக்கொண்டிருக்கின்றார்களே; இந்தக் காட்சி இரக்கத்தை உண்டாக்கி என் உயிரிலே வந்து கலந்தது. ஏனைய காட்சிகள் எல்லாம் ஐம்புலன்களில் தான் வந்து கலந்தன. துன்பத்தில் தூங்கும் என் மக்களின் காட்சியோ என் ஆவியிலே வந்து கலந்துவிட்டது' என்கின்றார் பாவேந்தர். இன்பஞ் செய்யும் இயற்கை அழகைப் பாடுவதை விட இன்னலில் உறங்கும் தமிழனின் உறக்கத்தைக் கலைக்கப்பாடுவதே என் குறிக்கோள்' என்று கூறுகிறார் பாவேந்தர்.

பாரதியார் மனிதனைப் பாடிப் பின்னர் (பெரும் பாலும்) தெய்வத்தைப் பாடப் போனவர். பாவேந்தரோ தெய்வத்தைப் பாடிய பின்னர் (பெரும்பாலும்) மனிதனைப் பாட வந்தவர். இரண்டுமே இருவருக்கும் குறிக்கோளாக இருந்தது உண்மை தான். அவை முன்னும் பின்னுமாக மாறிப் போய்விட்டது தான் வேறுபாடு.



ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் போவது வளர்ச்சி நிலையாக இருப்பதும் உண்டு; தளர்ச்சி நிலையாக இருப்பதும் உண்டு. இருவரும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் போய்விட்டவர்களே என்பதை எடுத்துக் காட்டுவதுதான் என்னுடைய நோக்கம்.

புலவர்கள் தத்தம் கண்களால் எத்தனையோ காட்சிகளைக் காணுகிறார்கள். அப்படிக் காணுகின்ற பொழுது அக்காட்சியினுள் தன்னுடைய குறிக்கோளையும் சேர்த்தே காணுவது தமிழ்ப் புலவர்களின் மரபாக இருந்து வருகிறது. பெரிய புராணம் பாடிய சேக்கிழார் வானத்தில் முழுநிலவைக் காண்கிறார். நிலவொளி பரந்து கிடப்பது எங்கும் பரந்த திருநீற்றின் பேரொளி போல விளங்குவதாகப் பாடுகின்றார்.

'ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
ணீற்றின் பேரொளி போன்றது வெண்ணிலா.'

சேக்கிழார் சைவ சமயத்தவர் ஆதலின் நிலவின் பேரொளியை வெண்ணீற்றின் பேரொளியாகக் காணுகின்றார். இன்னொரு சைவப் பெரியவராகிய சிவப்பிரகாசர் கடலிலிருந்து மேலே எழுந்து வரும் வெண்ணிலவையும் விண்மீன்களையும் இவ்வாறு பாடுகின்றார்.

''கடல்முரசம் ஆர்ப்பக் கதிர்க்கயிற்றால் ஏறி
அடைமதி விண்கழை நின்றாடக் - கொடைமருவும்
எங்கள் சிவஞான ஏந்தல் இறைத்தமணி
தங்கியவே தாரகைகள் தாம்'

நிலவு எழுகின்றது, வானில் இங்கொன்றும் அங்கொன்றுமாக விண்மீன்களும் கண்சிமிட்டுகின்றன. பழுத்த சைவரான. சிவப்பிரகாசர் இக் காட்சியை எப்படிப் பார்க்கின்றார்? கடலாகிய முரசும் முழங்குகின்றது. நிலவின்கதிர்களாகிய கயிற்றைப் பற்றிக் கொண்டு மதி என்னும் கழைக்கூத்தி வானம் என்ற கழையிலே ஏறியாடுகின்றாள். கொடைத்தன்மை மிக்க எங்கள் சிவபெருமான் அவள் ஆடலைக்கண்டு மகிழ்ந்து அள்ளி வீசினார் வெள்ளிக்காசுகளை, அவை விண்ணிலே விண்மீன்களாகத் தங்கி விட்டன. நிலவும் விண்மீனும் தோன்றும் ஒரு காட்சியைத் தன் குறிக்கோளுக்கேற்ப எப்படிச் சிவமயமாக ஆக்கியிருக்கின்றார் பார்த்தீர்களா? சேக்கிழாரும் சிவப்பிரகாசரும் சைவப்

பெரியார்கள் ஆதலின் நிலவு, விண்மீன் காட்சிகளில் சைவத்தைக் காண்கின்றார்கள்.

இதுபோலப் பாரதியார் இயற்கைக் காட்சிகளைப் பாடும் போது தன்குறிக்கோளை அதன்மீது ஏற்றிப் பாடுகின்றாரா? என்ற ஒரு வினாவை எழுப்பினால் விடை வேறு மாதிரியாக வருகின்றது. பெரும்பாலும் அவர் இயற்கைக் காட்சிகளைப் பாடியிருப்பது குறைவு. அவ்வாறு பாடினாலும் தன்குறிக்கோளை அதனுள் ஏற்றிப்பாடுவது மிகமிகக்குறைவு. இதோ பாரதியார் பாடும் விண்மீன் காட்சி.

'பட்டுக் கருநீலப் - புடவை
பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில்'-தெரியும்
நட்சத்தி ரங்களடி'

-இதில் தன் குறிக்கோள் எதனையும் ஏற்றிக் கூறாமல் வெறும் உவமையை மட்டும் கூறிப்பாடலை முடித்து விடுகின்றார்.

பொதுவாகப் பாரதியார் பாடல்களில் இயற்கைப் புனைவு குறைவு என்று கூறினேன். பாரதியார் பாடல்களைப் படிப்ப வர்கள் இதனை நன்கு அறியலாம். அதிலும் பாவேந்தரோடு ஒப்பிட்டால் பாவேந்தர் கடலளவு; பாரதியார் கடுகளவு என்று சொல்லுமாறு இயற்கைப் புனைவின் விகிதம் அமைந்துள்ளது. கவிஞர்களின் பொதுவான இயல்பு இயற்கையைப் பாடுவதுதான். ஏன் பாரதியார் பாடல்களில் மட்டும் குறைவாக இருக்க வேண்டும்? இவ்வினா நம்முள்ளத்தில் எழுவது இயல்பே.

எந்தச் செய்தியையும் நேரே அழுத்தமாக வெளிப்படுத்த வேண்டுமேயல்லாமல் அதற்குப் புனைந்துரை வண்ணம் பூசுவதைப் பாரதியார் விரும்புவதில்லை. இதனைப் பாரதி தாசனைப் பற்றிப் பாரதியார் எழுதிய தராசுப் பகுதியில் இருந்து அறிய முடிகிறது.

'காசிப் பட்டுப் போலே பாட்டு நெய்ய வேண்டும். அல்லது உறுதியான உழவனுக்கு வேண்டிய கச்சை வேஷ்டி போல நெய்ய வேண்டும். 'மல்' நெசவு கூடாது. 'மஸ்லின்' நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை



இத்தனையும் இருக்க வேண்டும். இதற்கு மேலே நல்லவர்ணஞ் சேர்ந்தால் குற்றமில்லை. சேராமலிருந்தால் விசேஷம்'

(பாரதி நூல்கள் வசனங்கள் ப-734)

பாரதியார் இங்கு நல்ல வர்ணம் என்று குறிப்பிடுவது எதனை? புனைந்துரையைத்தான். பாடலில் புனைந்துரை கூடாது என்ற கோட்பாட்டைப் பாரதியார் தமக்குத் தாமே வகுத்துக் கொள்வதானாலேதான் அதிகமாக இயற்கைப் புனைவையோ அவ்வியற்கைக் காட்சியுள் தன் குறிக்கோளை ஏற்றிக் கூறும் புனைவையோ மிகுதியாகப் பார்க்க முடியவில்லை. சில இடங்களில் தான் அப்புனைவுகள் (தன் கருத்தை ஏற்றிக்கூறும்) இருக்கின்றன.

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா-நின்றன்
கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா-நின்றன்
பச்சைநிறம் தோன்றுதையே நந்தலாலா'

இப்பாடலில் காக்கையின் சிறகிலும் இலைகளிலும் கண்ணனின் வண்ணத்தைக் காண்பதாகத் தன் குறிக்கோளை ஏற்றிப் பாடுகின்றார். இதுபோல இன்னும் இரண்டு மூன்று இடங்கள் தாம் உள்ளன. இதோ பாவேந்தர் விண்மீன்கள் தோன்றும் ஒரு காட்சியைப் பாடுகின்றார்.

'மண்மீதில் உழைப்போ ரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம்இ தைத்தன்
கண்மீதில் பகலில் எல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்பு ளித்த
விரிவானம் பாராய் தம்பி'

-அழகின் சிரிப்பு

உழைப்பவர் உரிமை கேட்டால் செல்வர்களாகிய புலையர்கள் கடுஞ்சொல் என்னும் அம்பை வீசுகிறார்கள். அதுவும் ஏற்கெனவே வறுமையால் நொந்து போயிருக்கும் மனப்புண்ணில் வீசுகின்றார்கள். இதனைப் பகலில் எல்லாம் பார்த்துப் பார்த்து

வானத்திற்கு உடற் சூடேறி உடலெங்கும் கொப்புளங்கள் தோன்றிவிட்டன. இக்கொப்புளங்கள் தாம் விண்மீன்களாகக் காட்சிதருகின்றன என்கின்றார்.

இதோ (பாவேந்தர் காட்டும்) ஒரு நிலவுக் காட்சியையும் பார்ப்போம்.

> ‘திணைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
> சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
> கனத்திருந்த வெண்சோறு காணுமின்பம்
> கவினிலவே உனைக்காணும் இன்பந்தானே’

(தொகுதி 1, ப. 20)

நிலவைக் காணுமின்பம் எப்படிப்பட்டது? பசியால் வாடிய மக்கள் கூழிருக்குமா என்று தேடிப்போன வேளையில் பானை நிறையச் சோறு- அதுவும் வெண் சோறு இருந்தால் பசித்தவர் எத்தகைய இன்பம் அடைவார்கள்? அத்தகைய இன்பம் நிலவே உனைக் காணும்போது ஏற்படுகிறது என்றார்.

விண்மீனும், நிலவும் இன்பந்தரும் காட்சிகள், இவ்வின்பந் தரும் காட்சிகளைக் காணும்போது உழைப்போர் உற்ற இன்னலும் பசித்தோர் படும் துயரமும் உடன் எழுவது ஏன்?

> ‘சித்திரச் சோலைகளே-உமைநன்கு
> திருத்தஇப் பாரினிலே
> எத்தனை தோழர்கள் இரத்தம் சொரிந்தன
> ரோஉங்கள் வேரினிலே.’

(தொகுதி 1, ப. 156)

சித்திரச் சோலைகளைப் பார்க்கின்ற பொழுது தோழர்களின் இரத்தம் நினைவிற்கு வருவானேன்? அழகிய காட்சிகள் அழகுணர்ச்சியைத் தூண்டாமல் வேறொரு ஆவேச உணர்ச்சியை அல்லது அவல உணர்ச்சியைத் தூண்டுவானேன்? பெரும்பாலும் அழகுக் காட்சிகளில் மூழ்கித் தன்னைக் கரைத்துக் கொள்வது தான் கவிஞர்களின் பொது இயல்பு. பாவேந்தர் அப்பொது இயல்பிலிருந்து விடுபட்டுத் தனித்து நிற்பது ஏன்? தன் குறிக்கோளை வரையறுத்த போது குறிப்பிட்டாரே.



> ‘இன்னலிலே தமிழ் நாட்டினி லேஉள்ள
> என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
> அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கியென்
> ஆவியில் வந்து கலந்ததுவே’

என்று. அவ்வாறு ஆவியிற் கலந்துவிட்ட அக்குறிக்கோள் எத்தகைய பேரழகைப் பார்த்தாலும் அதனுள் அவர் மூழ்கி விடாது தடுத்தாட் கொண்டு விடுகின்றது என்பது தான் உண்மை. இதனைப் பாவேந்தரின் பாடல்களில் பல படக் காணலாம்.

பாரதியாரும் பாவேந்தரும் குறிக்கோளிலும் ஒன்றுபட்டிருக்க வில்லை. குறிக்கோளை வெளிப்படுத்தும் நெறிமுறையிலும் ஒன்றுபட்டிருக்கவில்லை. இந்நிலையில் பாவேந்தரைப் பாரதி தாசன் என்பது எவ்வாறு பொருந்தும்?

# 9. பாரதிக்குத் தாசனா?

நாடு, நூல்கள், தெய்வம் சார்த்திக் கூறல், நாட்டு விடுதலை, பொதுவுடைமை போற்றல், தமிழ், குறிக்கோள் வெளிப்பாடு என வரும் தலைப்புக்களில் எல்லாம் பாரதியாரும் பாவேந்தரும் வேறுபட்டும் முரண்பட்டும் நிற்கின்ற செய்திகளை எல்லாம் விரிவாகப் பார்த்தோம். இன்னும் சிறிய சிறிய துண்டு துண்டாக வரும் சில செய்திகளிற்கூட முரண்பட்டு நிற்பதை அறிய முடிகிறது. எடுத்துக்காட்டிற்காக ஒன்று காண்போம்.

'முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடை வில்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
லாரிய ராணியின்வில்'

என்று இலங்கைத்தீவை நினைக்கின்ற பொழுதே இராவணனும் அவனுடைய வழித்தோன்றல்களும் இராமனால் அழிக்கப்பட்ட காட்சிதான் பாரதியாருக்குத் தோன்றுகிறது. மேலும் அவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்களே என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார். ஆனால் பாரதிதாசனோ,

'தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா
அன்றந்த இலங்கையினை ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்
என்தமிழர் மூதாதை என்தமிழர் பெருமான்
இராவணன்காண் அவன்நாமம் இவ்வுலகமறியும்'

என்று பெருமிதத்தோடு பாடுகின்றார். ஆக இருவருக்கும் உள்ள வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் கண்ட நாம் பாவேந்தரைப் பாரதிதாசன்தான் என்று அடையாளம் காட்டக் கூடிய ஆதாரங்களையும் காண வேண்டியது நம் கடமையாகும். அவற்றையும் கண்டால் தான் ஒரு முடிவிற்கு வரமுடியும்.



பாரதியார் பாவேந்தர் சந்திப்பு நிகழ்வதற்கு முன்னர்ப் பாவேந்தரின் கவிதைகள் எதனை மையமாகக் கொண்டு பாடப் பட்டன என்று பார்த்தால் அப்பாடல்களில் ஒரு குறிக்கோள் இருப்பதாகக் கூற முடியாது. இளமைச் செருக்கும் புலமை மதர்ப்பும் ஒரு சேர அமைந்திருந்த பாவேந்தர் சில பக்திப் பாடல் களையும் சில தனிப்பாடல்களையுமே இயற்றியுள்ளார். இதோ பாவேந்தர் தம் பதினாறாம் அகவையில் பாடிய ஒரு இலாவணிப் பாடல்,

'நீலமலர் தன்னையும்
கோலக்கெண்டை மீனையும்
நிகர்க்குதே இவள் நேத்ரம்
என்ன காத்ரம்?
நான் எம் மாத்ரம்?-இந்த
வாலைப் பெண்ணைப்புணர
வேண்டுமே கொக்கோக சாத்ரம்

ஏககா லத்திலிரு
சூரியன் புறப்பட்டால்
எப்படித் தானிருக்கும் ஓது
அதுபோல் காதில்
இருப்ப தேது?
ஒப்பாலாயிரம் பெறும்
கொப்பு முதல் நகைகள்
இழையா லாயிரம் பெறும்தாவணி
மற்றும் பூவணி - கனக
சுப்பு ரத்தினம் சொன்னான்
அடியா லாயிரம் பெறும் இலாவணி.

(பாவேந்தர் நினைவுகள்; ப. 90)

மாபெரும் புரட்சிக்கவிஞன் பாடல் என்று இதனைச் சொல்ல முடியுமா? இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இலாவணிப் பாட்டுக்களுக்கு மக்களிடத்திலே செல்வாக்கு இருந்தது உண்மைதான். அச்செல்வாக்கின் காரணமாகத்தான் இந்த இலாவணிப் பாட்டைப் பாவேந்தர் பாடியிருக்க வேண்டும். இப்பாட்டைப் பாடிய அக்காலத்தில் பாவேந்தர் காலத்தோடு உடன் ஓடும் கவிஞராக இருந்திருக்கின்றாரே தவிரக் காலத்தை எதிர்த்து நின்று பாடும் கவிஞராக உயரவில்லை என்று

அறிகிறோம். புரட்சிக்கவிஞர் பாவேந்தரோ காலத்தை எதிர்த்து நின்று பாடிய பெருமைக்குரியவர். காலத்தோடு ஓடிக் கொண்டிருந்த கவிஞனைத் தடுத்து நிறுத்திக் காலத்தை எதிர்த்து நின்று குரல் கொடுக்க வைத்தது யார்? அந்த வலிமையை அவன் குரலுக்குத் தந்தவர் எவர்?

குறிக்கோளின்றிக் காட்டாற்று வெள்ளம்போல் கவிதை பாடித் திரிந்த பாவேந்தரை இந்திய விடுதலை இயக்கத்திற்குள் இழுத்து விட்டவரும், அதன் வாயிலாக இந்திய மக்களின் இன்னல்களைப் பாட வைத்தவரும் பாரதியாரே என்றால் அது மிகையில்லை. குறிக்கோள் இலாது பாடிய காலத்திற்கும், பாரதியாரின் அடிச் சுவட்டிலிருந்து விலகத் தொடங்கிய காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் அதாவது பாரதியார் காட்டிய நெறியில் இயங்கிய காலத்தில் (7.11.1922) பாவேந்தர் பாடிய ஒரு பாடலைப் பார்ப்போம்.

'சேர்வீர் தொண்டர்படைக் கெல்லாரும்-அரைநொடியில்
பாரீர் நமக்கு வந்த கேடு-பொறுக்கவில்லை
வாரீர் இதனை அடியோடு கல்லஎம்மோடு (சேர்வீர்)

'வாழ்வே மிகச்சிறிய நேரம்-இதற்கிடையில்
மானம் இழப்பது விகாரம்-உயிர்கொடுத்தும்
தாழ்வை அகற்றுவது வீரம்-நமதுரிமை
தாங்கி நடத்தல் சமுசாரம்-அரைவயிற்றுக்
கூழோ டிறப்பது விகாரம்-அதிக கோரம் (சேர்வீர்)

இழையாலாயிரம் பெறும் தாவணியைப் பாடிய வாய் இன்னுயிரை விடச் சிறந்தது மானம்; அதனைப் பேணாதிருப்பது அவமானம்; ஆகவே மானத்தைக் காக்கத் தொண்டர் படையிலே சேருங்கள்; நமக்கு வந்த கேடு களைய எம்மோடு வாருங்கள் என்று அறைகூவிப் பாடும் வாயாக மாறியது எப்படி? அதுவா? அது பாரதியாரின் சொற்படி என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய குறிக்கோளை மாற்றிக் கொண்டு திராவிட விடுதலைப் போராட்டத்தைப் பாடப் போய்விட்ட நிலையில் பாரதியார் ஊட்டிய குறிக்கோள் வழியில்தான் பாரதிதாசன் இயங்கினார் என்பது பொருந்துமா என்று சிலர் வினவக்கூடும்.



பாரதியார் இந்திய தேசிய விடுதலைக் களத்திலே பாவேந்தரை இறக்கிவிட்டதும் உண்மை, பாவேந்தர் அக்களத்தை விட்டு நீங்கித் திராவிட தேசிய விடுதலைக் களத்திற்கு வந்து விட்டதும் உண்மை. இந்திய தேசியம் திராவிட தேசியமாக மாறுகிறதே யன்றி விடுதலைக் களம் மாறவில்லை. நாட்டு விடுதலைக் களத்திலே தான் நிற்கின்றார் பாவேந்தர். நாட்டு விடுதலைக் களத்திலே நில்லாமல் விலகிப் போயிருந்தால் தான் பாரதியார் பாவேந்தருக்கு வழங்கிய குறிக்கோளில் இருந்து மாறிவிட்டார் என்று கூற முடியும். குறிக்கோளே இல்லாத நிலையில் பாரதியார் வழங்கிய குறிக்கோள் திராவிட விடுதலைக் களத்திற்குப் போய்விட்ட நிலையிலும் பாவேந்தரிடம் இருந்தது என்றுதான் கொள்ள வேண்டும். மேலும் இந்திய விடுதலைக்கும் திராவிட விடுதலைக்கும் அதிக வேறுபாடு இல்லை. நாட்டின் பரப்பளவிலும் எல்லைக்கோடுகளிலும்தான் வேறுபாடே தவிர விடுதலை வேண்டும் என்பதற்கான காரணங்களில் வேறுபாடு இல்லை. ஆகப் பாரதியாரின் குறிக்கோள் வழியில் தான் பாவேந்தர் தம் கவிதைத் தேரைச் செலுத்தினார் என அறிகிறோம்.

**நடையொப்புமை:** பாவேந்தர் எளிய சொற்கள் எளிய தொடர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கவிதை இயற்றும் முறையைப் பாரதியாரிடம் இருந்தே அறிந்து கொண்டிருக்கின்றார். 'பாஞ்சாலி சபதத்தை' எதிர்பாராவகையில் (கையெழுத்துப்படியை) காண நேர்ந்ததையும் அதன் எளிய நடை தன்னைக் கவர்ந்ததையும் பாவேந்தரே பாராட்டியுள்ளார். இன்னும் பாவேந்தர்,

'சுப்பிர மண்ணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்'

என்று எழுதுவதும் இங்குக் கருதத்தக்கது. இவ்வாறு எழுதுவது பாரதியாரோடு தொடர்புகொண்டிருந்த காலத்திலன்று; 1960-இல் தன்னுடைய 69-ஆம் அகவையில் அவரே தன்னுடைய நடையும் முறையும் பாரதியாரால் காட்டப்பட்டவை என்பதை ஒப்புக் கொள்கிறார். மேலும் பாரதிதாசனின் பழம் பாடல் ஒன்றையும் பிற்காலப் பாடல் ஒன்றையும் ஒப்பு நோக்கி நடை வேறுபாட்டை அறிவோம்.

'நதியோடும் பிறையணிந் திடுபரம் பொருளெனும்'
சிவனைவந் தனைபுரிந்தாலே-உயர்

நலமரு விடுநிலை கலைகுடிபு கவரும்
அறிவு பெருகிவிடும் உலகுபுகழ்பரவும்
ஆருமெச்சு வார்பகைவர்
பேர்நினைத்தி டார்நிதிகு
பேரனுக்கு மேல்நிறையும்
வாழ்வளிக்கு மேமனித
ரேயுமக்கெ லாமளிக்க வேவிருப்ப மாயிருக்கி றானிருக்கு
மாலையத்தி லேமிதித்த காலடிக்கு நேரிலுற்று வாழ்வளிக்க
வேணுமப்ப னேயெனச்சொ னால்நொடிக்கு ளேயளிப்பன்'

(கருப்புக்குயிலின் நெருப்புக்குரல், ப. 160)

இப்பாடலின் நடையைப் பாருங்கள். இதோ இனி வரும் பாடலின் நடையையும் பாருங்கள்:

'தலைவாரிப் பூச்சூட்டி உன்னைப்-பாட
சாலைக்குப் போவென்று சொன்னாள்உன் அன்னை
சிலைபோல ஏனங்கு நின்றாய்-நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்'

இப்பாடலில் உள்ள எளிமையையும் முதற்பாடலில் உள்ள கடுமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பாவேந்தர் நடை எவ்வளவு மாறியுள்ளது என்பது நன்கு புலனாகும். முதற்பாடலை பலாப் பழம் என்றால் இரண்டாவது பாடலை உரித்த வாழைப்பழம் என்றுதான் சொல்ல வேண்டும்.

'கரும்புத் தோட்டத்திலே-ஆ
கரும்புத் தோட்டத்திலே
கரும்புத் தோட்டத்திலே-அவர்
கால்களும்கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே-இந்து
மாதர்தம் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்கு கின்றனரே-அவர்
துன்பத்தை நீக்க வழியில்லை யேஒரு
மருந்தி தற்கிலையோ-செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகிறார் அந்தக் (கரும்பு)

பாரதியாரின் இப்பாடலில் காணப்படும் அதே எளிமை பாரதி தாசனின் பாடலிலே அமைந்திருப்பதனைச் சாதாரண மக்களே கண்டு கொள்ள முடியும். முடியவே பாரதியாரின் எளிய



நடையைப் பின்பற்றியதில் பாரதிக்குத் தாசனாகவே பாவேந்தர் விளங்குகிறார் எனத் தெளியலாம்.

**இசைத்தமிழ் விடுதலை:** சங்க இலக்கியத்திலும், சிலப்பதி காரத்திலும், தேவாரத்திலும் பயின்ற தமிழ் இசை பிற்காலத்திலே கொஞ்சம் திரிக்கப்பட்டுத் தெலுங்குக்கும். வடமொழிக்கும் அடிமையாக்கப்பட்ட செய்தியை அறிவோம். இசையோ தமிழ் இசை; அவ்விசையைத் தாங்கி நிற்கும் பாடல்களோ தெலுங்கு வடமொழிப் பாடல்கள். இசை இன்பத்தை முழுமையாக நுகர வேண்டுமானால் பாடலின் பொருள் விளங்க வேண்டும். விளங்கா மொழிப்பாடலின் இசை எவ்வளவு தரமானதாக இருந் தாலும் அது உள்ளத்தை ஈர்க்காது. ஆகவே இசையரங்குகளில் தமிழே கூட அன்று, தமிழ்ப் பாடலும் பாடப்பட வேண்டும் என்ற இயக்கம் ஒன்று அரசர் அண்ணாமலையாரால் தொடங்கப் பட்டதனையும் அறிவோம். அத்தமிழிசை இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர் பாவேந்தர் என்பதை நாடு அறியும். இத்தீவிரம் பாவேந்தருக்கு எப்படி வந்தது? இயல்பாகவே வந்ததா? பாரதியாரிடமிருந்து வந்ததா?

'சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல
தமிழ் வளர்த்திடல் ஒன்று
பாதியை நாடு மறந்தால் - மற்றப்
பாதி துலங்கு வதில்லை
என்றுரைப் பாரென் னிடத்தில் - அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்னும் மறைந்திட வில்லை - நான்
இன்னும் இருப்பத னாலே.'

(பாரதிதாசன் தொகுதி-2, பக். 80)

முதற்பணி சாதியை ஒழிப்பது; அடுத்த பணி தமிழை வளர்ப்பது- என்று பாரதியார் தன்னிடம் கூறியதாகப் பாவேந்தர் கூறுகின்றார். தமிழ் வளர்ப்பது என்றால் மொழியை வளர்ப்பது மட்டுமன்று. தமிழிசையை- தமிழ்க் கூத்தை வளர்ப்பதும்தான். ஆகவே தமிழிசை வளர வேண்டும்; வாழ வேண்டும் என்ற பாரதியின் கருத்தைத் தான் பாரதிதாசனார்,

''தெலுங்குதமிழ் நாட்டினிலேன்?
செத்தவட மொழிக்கிங்கே
என்ன ஆக்கம்
இலங்கும்இசைப் பாட்டுக்கள்
பிறமொழியில் ஏற்படுத்த
இசைய லாமோ?

என்று பாடுகின்றார்.

தமிழ் வளர்ச்சி என்று பாரதியார் கூறியதைத் தமிழிசை வளர்ச்சி என்று பொருள் கொண்டு தெலுங்கையும் வடமொழியையும் தாக்குவது பொருத்தமில்லை என்று சிலர் சொல்லக்கூடும். அவர்களுக்காகப் பாரதியாரின் கட்டுரையில் இருந்து ஒரு பகுதியை எடுத்துத் தருகிறேன்.

'நானும் பிறந்தது முதல் பார்த்துக் கொண்டு வருகின்றேன். பாட்டுக்கச்சேரி தொடங்குகின்றது. வித்வான் 'வாதாபி கணபதி' என்று ஆரம்பஞ் செய்கின்றார் 'ராமநீ சமான மெவரு', 'மரியாத காதுரா', 'வரமுலொஸகி' ஐயயோ! ஐயயோ! ஒரே கதை.''

'எந்த ஜில்லாவுக்குப் போ. எந்த கிராமத்துக்குப் போ. எந்த வித்துவான் வந்தாலும் இதே கதைதான். தமிழ்நாட்டு ஜனங் களுக்கு இரும்புக் காதாக இருப்பதனால் திரும்பத் திரும்ப திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தோற்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்? முத்துச்சாமி தீட்சிதர், தியாகய்யர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் இந்த மூன்று பேருடைய கீர்த்தனைகளைத்தான் வழக்கத்தில் அதிகமாகப் பாடுகிறார்கள். தீட்சிதரின் கீர்த்தனைகள் பச்சை சமஸ்கிருத பாஷையிலே எழுதப்பட்டவை. இவை கங்கா நதியைப்போலே கம்பீர நடையும் பெருந்தன்மையும் உடையன. வேறு பல நல்ல லக்ஷணங்கள் இருந்த போதிலும் ஸமஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருப்பதால் இவை நமது நாட்டுப் பொது ஜனங்கள் ரஸானுபவத்துடன் பாடுவதற்குப் பயன்பட மாட்டா.''

''புதிய புதிய கீர்த்தனங்களை வெளியே கொண்டு வர வேண்டும். இப்போதே சங்கீத வித்வான்களிலே தலைமைப் பட்டிருப்போர் தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங்கள் செய்ய முயல வேண்டும்.''

(பாரதியார் கட்டுரைகள் ப. 410-414)



தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் உள்ள பழம் பாட்டுக்களை மீண்டும் மீண்டும் சொல்லுதல் நியாயமில்லை. இதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்.'

(பாரதியார் கட்டுரைகள் ப. 416)

இங்கே காட்டப்பட்ட பகுதியிலிருந்து தமிழிசைக்காகப் பாரதியார் எழுதியுள்ள கருத்துக்கள் எவ்வளவு தீவிரமானவை என்று அறியலாம். இசைத்துறையில் தெலுங்கும், வடமொழியும் இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்ற கருத்து பாரதியாருக்கு உள்ளது. இதனைப் பாரதியார் எப்பொழுது வெளியிட்டார். தமிழிசை இயக்கம் தோன்றுவதற்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே வெளியிட்டு விட்டார். தமிழிசை இயக்கம் 1940க்குப் பிறகுதான் தோன்றியது. பாரதியார் 1921இல் காலமாகிவிட்டார். தமிழிசை தழைக்க வேண்டும் என்ற கருத்தைப் பாவேந்தர் முதலில் தமிழிசை இயக்கத்திடமிருந்து பெறவில்லை. பாரதியா ரிடம் இருந்துதான் பெற்றுள்ளார். மேலும் அவர்கள் ஒன்றாகக் கலந்து பழகிய நாட்களில் இது பற்றியெல்லாம் உரையாடி இருக்கவும் கூடும். எனவே தமிழிசை மறுமலர்ச்சியில் பாரதியா ரின் கருத்தையே பாவேந்தர் உடன்பட்டுப் பாடுகின்றார் என்பது தான் உண்மை.

'சிந்து நதியின் மிசை நிலவினிலே' என்ற பாட்டில் 'சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து' என்று பாடியது தெலுங்கிசையை ஆதரிப்பதாகாதா? எனச் சிலர் வினவக்கூடும். இப்பாடலின் மையக்கருத்து கூடித் தொழில் புரிய வேண்டியதையும், செப்பு மொழி பதினெட்டாக இருந்தாலும் சிந்தனை ஒன்றாக இருக்க வேண்டியதையும் வலியுறுத்த எழுந்ததாகும். மொழி வேறுபாடு களைக் கடந்து இந்திய மக்கள் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்ற விழைவைப் பாரதியார் இப்பாடலில் வெளிப்படுத்துகின்றார். ஓர் இளம்பெண் தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தால் மொழி வேறுபாடு ஒரு பொருட்டாக இருப்பதில்லை. மேலும் எந்த வேறு பாடும் எழுவதில்லை. கருத்தொருமித்த நிலையே தோன்றுகிறது. அவளிடத்தில் இவனும் இவனிடத்தில் அவளும் கொள்ளும் அன்பில் தன்னை மறக்கின்றனர். இது போல் இந்திய மக்கள் அனைவரும் வேறுபட்டதாய மொழியுடையவரிடத்தில் கருத் தொருமித்து அன்புகாட்ட வேண்டும் என்பதனைக் குறியீட்டு

வகையால் வெளிப்படுத்துகின்றார் பாரதியார். காதல் வயப்பட்ட நிலையில் என்ன மொழி, என்ன நிறம் என்பதெல்லாம் நினைவிற்கே வருவதில்லை. இந்திய மக்களும் அன்பு வழிப்பட்டு நின்று மொழி நிற வேறுபாடுகளைக் கடந்து பெண்ணின் அருகில் இருக்கும் போது தோன்றும் பேதமற்ற நிலையை மற்ற மொழியினர் மாட்டு வெளிப்படுத்த வேண்டும் என்கிறார். இது தமிழனுக்கு மட்டும் கூறப்பட்ட அறிவுரையன்று. வங்காளி மராட்டியனிடத்திலும், மராட்டியன் தமிழனிடத்திலும், தமிழன் பஞ்சாபி இடத்திலும், பஞ்சாபி பீகாரியிடத்திலும் இப்படித் தான் நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கவே மேற்கூறிய பாடலைப் பாடுகின்றார். இதில் எல்லாரும் சமம் என்ற கருத்து வலியுறுத்தப் படுகின்றதேயன்றி, பெண்களிலே சேரநாட்டவர் உயர்ந்தவர் என்பதோ பாடல்களிலே தெலுங்குப் பாடல் உயர்ந்ததென்பதோ நதிகளில் சிந்துநதி உயர்ந்ததென்பதோ பாரதியார் கருத்து அன்று. எனவே தெலுங்கிசைக்குச் சிறப்பிடம் தந்தார் பாரதியார் என்பது உண்மையன்று.

**சீர்திருத்த நோக்கு:** பாவேந்தரின் பாடல்களில் சீர்திருத்த நோக்கு குறிப்பிடத்தக்க இடம்பெற்றுள்ளதனை அறிவோம். சாதி ஒழியாமல் தமிழர் ஒன்றுபட முடியாது. தமிழர் ஒன்றுபடவில்லை என்றால் தமிழர்களின் உரிமை பறிபோய்விடும் என்பதிலே அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தார். ஆகவே சாதி யொழிப்பு உடனடித்தேவை என்பது பாவேந்தர் கருத்து. இந்தக் கருத்து அவருக்கு எவ்வாறு வந்தது? இக்கருத்தை ஊட்டியவர் யார்? இதற்கான உந்து சக்தியைப் பாரதியாரிடமிருந்து பெற்றுள்ளாரா என்று பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

சாதி அமைப்பைத் தகர்த்திட வேண்டும் என்பதில் பாரதியார் மிகுந்த அக்கரை கொண்டிருந்தார். இதனால்தான் 'ஜாதி நூறுசொல்லுவாய் போ! போ! போ!' என்று பாடுகின்றார்.

'எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மக்கள்'

என்று சாதி நீங்கிய சமுதாய நீதியையும், பொருளாதார வேறுபாடுகள் நீங்கிய அரசியல் நீதியையும் எடுத்து மொழிகின்றார். இன்னும்,



'சாதிப் பிரிவுகள் சொல்லி-அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்-
அங்குநித்தமும் சண்டைகள் செய்வார்
சாதிக் கொடுமைகள் வேண்டாம்-அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்'

என்று சாதிப் பிரிவுகளுக்கேற்ப நீதிப்பிரிவுகள் செய்யும் மனுநீதியை மெலிதாக எடுத்துச் சொல்லித் திருத்துகின்ற இடமும் உண்டு.

'சாதிகள் இல்லையடி பாப்பா-குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்'

என்று பிஞ்சு உள்ளங்களில் நியாயத்தை எடுத்து ஓதுவதும் உண்டு.

'மனிதரில் ஆயிரம் சாதி-என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை'

என்று எதிர்த்து நின்று எக்காளமிடுவதும் உண்டு.

'தகரென்று கொட்டு முரசே-பொய்மைச்
சாதி வகுப்பினை எல்லாம்'

என்று போர்ப் பாட்டுப் பாடியதும் உண்டு. இவ்வாறாகச் சாதி முறைக்கு எதிராகச் சொற்சவுக்கினைப் பாரதியார் பாவேந்தருக்கு முன்பே பயன்படுத்தி விட்டார் என்று அறிகிறோம்.

பாரதியார் கொண்டிருந்த சாதியொழிப்பு மனப்பான்மை பற்றிப் பாவேந்தர் என்ன கருதுகிறார் என்றும் பார்ப்போம். 'பாரதி உள்ளம்' என்ற தலைப்பிலே வரும் பாவேந்தரின் கவிதை இது.

''மேலவர் கீழவர் இல்லை- இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை
நாலு தெருக்களின் கூட்டில் -மக்கள்
நாலாயி ரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர்என்று -சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்
மேலுமப் பாரதி சொல்வார் - சாதி
வேரைப் பொசுக்குங்கள்' என்றே.

(தொகுதி உ, ப-80)

'படரும் சாதிப் படைக்கு மருந்து' என்று பாரதி யாரைப் பாராட்டுவார். சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதைப் பொழுது போக்காகக் கூறியவர் அல்லர் பாரதியார். நாற்சந்தியிலே நாலாயிரம் மக்கள் காண நின்று சாதியில் தாழ்ந்தவர் சமைத்த உணவை உண்பார், என்று பாவேந்தர் குறிப்பிடுவதனாலும் சாதி வேரைப் பொசுக்குங்கள்' என்று தங்களுக்குக் கட்டளையிட்ட தாகக் கூறுவதானாலும் சாதியொழிப்பு உணர்ச்சியில் பாவேந்தர் பாரதியாரையே பின்பற்றுகிறார் என அறியலாம்.

**பெண்விடுதலை:** பாவேந்தர் பெண் விடுதலையைக் கண் போலப் போற்றியவர். கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்; அந்நிலத்தில் புல்விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை - என்று பெண்ணுக்குக் கல்வி தர வேண்டியதன் இன்றியமையாமையை எடுத்துமொழிவார்.

'அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்'

என்றும்,

'பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே' என்றும்,

'ஆணுயர் வென்பதும் பெண்ணுயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை
வாணிகம் செய்யலாம் பெண்கள் - நல்
வானூர்தி யோட்டலாம் பெண்கள்.'

என்று கல்வியிலும், மூடத்தன ஒழிப்பிலும், தொழில் செய்வதிலும் பெண்ணும் ஆணும் ஒருவருக் கொருவர் விஞ்சியவர்களும் அல்லர். தாழ்ந்தவர்களும் அல்லர். சரி நிகர் ஆனவர்களே என்று எடுத்துக் காட்டுகின்றார். இன்னும் ஆண்களைப் போலவே.

'தமிழ்காத்து நாட்டினைக் காப்பாய் - பெண்ணே
தமிழின மேன்மையைக் காப்பாய்
தமிழகம் நம்மதென் றார்ப்பாய்
தடையினைக் காலினால் தேய்ப்பாய்'

என்று பெண்டிருக்குப் போராட்டக் குணமும் தேவை என்று வலியுறுத்துகின்றார். 'படியாத பெண்ணினால் தீமை- என்ன பயன் விளைப்பாளந்த ஊமை' என்று வினவுவதன் வாயிலாகப்



பெண்விடுதலைக்கு முரசு கொட்டுகிறார் பாவேந்தர். இப்பெண் விடுதலை பற்றிப் பாரதியார் கருத்து என்ன?

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையம் தழைக்குமாம்' என்றும்,

நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்குமஞ் சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்

அமிழ்ந்து பேரிரு ளாம்அறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்.' என்றும்,

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள் ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்
பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும றிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி' என்றும்

ஆணும் பெண்ணும் நிகராக வாழ்வதே அகிலம் தழைக்கும் நெறி என்றும், மகளிர் அறியாமையில் மூழ்கிக் கிடப்பதை உமிழ்ந்து தள்ள வேண்டும் என்றும், பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் இயற்றவும் பெண்கள் முன்வர வேண்டும் என்றும் கூறுகின்றனார். இன்னொரு பாடல் பாவேந்தரையும் பாரதியாரையும் இணைப்ப தாக இருக்கின்றது.

'நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்
நீசத் தொண்டு மடமையும் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சால வேயரி தாவதோர் செய்தியாம்'

நிலத்தின் தன்மைக்கேற்ப விளைச்சல் இருப்பது போலவே தாய்க்குக் கல்வியறிவு இல்லாதிருப்பின் பெருமைக்குரிய குழந்தை களைப் பெற்றெடுக்க முடியாது என்கின்றார். பெண் விடுதலை யில் பாரதியின் குறிக்கோளை மட்டுமன்று; பாரதியாரின் கருத்துக்களையும் தொடர்களையும் கூடப் பாவேந்தர் வாங்கிப்

பாடுகின்றார் என்பதற்கு இப்பாடல் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ‘கல்வியில்லாத பெண்கள் களர் நிலம், அந்நிலத்தில் புல் விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை’ என்ற பாவேந்தர் பாடலையும், ‘நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்; நீசத் தொண்டும்மடமையும் கொண்டதாய், தலத்தில் மாண்புறு மக்களைப் பெற்றிடல், சாலவேயரி தாவதோர் செய்தியாம்’’ என்ற பாரதியார் பாடலையும் ஒப்பிட்டுப் பாருங்கள். பாரதியாரின் குறிக்கோளை மட்டுமன்று; பாரதியாரின் பாட்டுக் கருத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்வது புலனாகும். இவ்வாறு பாடலால் ஒத்திருக்கும் இடங்கள் மிகச் சில தாம். அவற்றில் இது குறிப்பிடத்தக்கது. ஆகப் பெண். விடுதலை யிலும் பாவேந்தர் பாரதிக்குத் தாசனாகவே விளங்குகின்றார்.

**கைம்மைக் கொடுமை:** கணவன் இறந்துவிட்டால் மனைவி எவ்வளவு வயது குறைந்தவளாக இருந்தாலும் வெள்ளைப் புடவையைக் கொடுத்துப் பொட்டை அழித்துப் பூவை அகற்றி, நல்ல உணவும் மறுக்கப்பட்டுக் கைம்பெண் என்ற பட்டத்தையும் சார்த்தி மூலையில் உட்கார வைக்கும் கொடிய பழக்கம் தமிழகத்தில் இன்றும்கூட இருப்பதனை அறிகின்றோம். அவர்கள் சகுனத்தடைகளாக மதிக்கப்பட்டு இகழப்பட்டனர். அவர்களுக்கு மறுமணம் செய்ய வேண்டும் என்று சொன்னால் தம் கண்களா லேயே எரித்து விடுவார்கள் அந்நாளையப் பெரிய மனிதர்கள். அந்த அளவுக்கு பெண்ணடிமைத் தனம் வேரூன்றிப் போயிருந்தது.

இக்கொடுமைகள் சமுதாயத்தில் ஆதிக்கம் செய்வதை மக்கள் நலம் பேணும் கவிஞன் பார்த்துக் கொண்டிருத்தல் இயலாது. எனவேதான் பாவேந்தர் பாரதிதாசன் கைம்மை’ பற்றிப் பல பாடல்களைப் பாடுகின்றார். கண்ணீர் வடியும் சொற்களாலும் கனல் உமிழும் தொடர்களாலும் இத்தீமையை அகற்றப் பாடு கின்றார்.

‘கோரிக்கை யற்றுக்கி டக்குதண்ணே இங்கு
வேரிற் பழுத்த பலா - மிகக்
கொடியதென் றெண்ணிடப் பட்ட தண்ணேகுளிர்
வடிகின்ற வட்ட நிலா
சீரற்றி ருக்குதய் யோகுளிர் தென்றல்
சிறந்திடும் பூஞ்சோலை - சீ



சீயென் றிகழ்ந்திடப் பட்ட தண்ணேநறுஞ்
சீதளப் பூமாலை’

‘இன்பவ ருக்கமெ லாம்நிறை வாகி
இருக்கின்ற பெண்கள் நிலை- இங்
கிவ்வித மாக இருக்குதண் ணேயிதில்
யாருக்கும் வெட்கமிலை’

என்று இரங்கலையும் எரிச்சலையும் வெளிப்படுத்தியதோடு தன்வேலை முடித்துவிட்டதாக அவன் கருதவில்லை. இனிச்செய்ய வேண்டியது என்ன என்பதையும் சுட்டிக்காட்டுகிறான்.

‘துணைவி இறந்தபின் வேறு துணைவியைத்
தேடுமோர் ஆடவன் போல் - பெண்ணும்
துணைவன் இறந்தபின் வேறு துணை தேடச்
சொல்லிடு வோம்புவி மேல்

இந்தப் பரிந்துரையோடு ஒரு கட்டளையையும் சமுதாயத்திற்கு இடுகின்றான்.

‘‘காதல்சு ரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூர்க்காதீர் - ஒரு
கட்டழ கன்திருத் தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்காதீர்.

இதோ உயிர்போகும் நிலையில் உள்ள ஓர் இளைஞன் தன் மனைவியை அருகில் அழைத்து ஓர் ‘உபதேசம்’ செய்வதாகப் பாவேந்தர் பாடுகின்றார்.

அந்திய காலம் வந்ததடியே! பைந்தொடியே:
இளம்பிடியே! பூங்கொடியே!
சிந்தையொன் றாகிநாம் இன்பத்தின் எல்லை
தேடிச் சுகிக்கையில் எனக்கிந்தத் தொல்லை
வந்ததே இனிநான் வாழ்வதற் கில்லை
மனத்தில் எனக்கிருப்ப தொன்றே - அதை
இன்றே குணக்குன்றே! கேள் நன்றே
கடும்பிணி யாளன் இறந்தபின் மாதே
கைம்பெண்ணாய் வருந்தாதே பழிஎன்றன் மீதே
அடஞ்செயும் வைதிகம் பொருட்படுத் தாதே
ஆசைக் குரியவனை நாடு - மகிழ்வோடு
-தார்சூடு நலம்தேடு

நம்நாட்டு இளைஞர்களுக்கு இம்மன உறுதி வர வேண்டும். அதன் வாயிலாகக் கைம்மையால் கருகும் இளம்பெண்களின் வாழ்வு மலரும் என்ற பாவேந்தரின் தணியாத வேட்கையை இப்பாடலில் பார்க்கின்றோம்.

கைம்மையைப் பற்றிப் பாரதியார் ஏதேனும் பாடியுள்ளாரா என்று பார்த்தால் இப்படியொரு பாடலை அவர் பாடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பாடல் பாடவில்லையே தவிர அவருடைய கட்டுரையில் எழுதியுள்ளார். அதுவும் தான் 'மகாத்மா' என்று கருதும் காந்தியடிகளின் கருத்தையே எதிர்த்துக் கைம்பெண்களுக்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை வேண்டும் என்று எழுதுகிறார் இதோ அப்பகுதி:

'விதவைகளின் தொகையைக் குறைப்பதற்கும், அவர்களுடைய துன்பங்களைத் தீர்ப்பதற்கும் ஒரு வழிதான் இருக்கிறது. அதை நம்முடைய ஜனத் தலைவர்கள் ஜனங்களுக்குத் தைரியமாகப் போதிக்க வேண்டும். அதை ஜனங்கள் எல்லோரும் தைரியமாக அனுஷ்டிக்க வேண்டும். அதாவது யாதெனில்- நாகரீக தேசத்தார் எல்லோரும் செய்கிற படி விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்குத் தகுந்த புருஷரைப் புனர் விவாஹம் செய்து கொள்ளலாம். இந்த ஏற்பாட்டை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர வேண்டும்.''

''பால்ய விதவைகள் புனர்விவாகம் செய்து கொள்ளலாம் என்று ஸ்ரீமான் காந்தி சொல்கிறார். ஆனால் அதைக்கூட உறுதி யாகச் சொல்ல அவருக்குத் தைரிய மில்லை; மழுப்புகிறார். எல்லா விதவைகளும் மறுமணம் செய்துகொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில் மாதருக்குச் செய்யப்படும் அநியாயங்கள் எல்லா வற்றிலும் பெரிதான இந்த அநியாயத்திற்குச் செய்யப்படும் மாற்று. மற்றப்பேச்செல்லாம் வீண்கதை.''

கைம்மைக் கொடுமை பற்றிய பாரதியாரின் கட்டுரைப் பொருளையும் பாவேந்தரின் பாடல்களையும் ஒப்புநோக்கினால் அடிப்படைக் கருத்தொற்றுமை இருப்பது புலனாகும். ஆக இதிலும் பாவேந்தர் பாரதி தாசனாகவே விளங்குகிறார்.

**குழந்தை மணம்:** பொம்மைக் கல்யாணம் செய்து மகிழும் குழந்தையைப் போலப் பெரியவர்களும் பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்கின்ற



கொடுமை தமிழ் நாட்டிலே தலை விரித்தாடியது உண்டு; பின்னர் அக்கொடுமை சட்டத்தால் தடுக்கப்பட்டது. அண்மையில் சிதம்பரத்தில் உள்ள தீட்சிதர்கள் தங்கள் குழந்தைகட்குத் திருமணம் செய்து வைத்ததாக வந்த செய்தி நாட்டையே திடுக்கிட வைத்தது. இன்னும் அக்கொடுமைக்கு உயிர்கொடுக்க நினைக்கிறார்கள் போலும்; குழந்தை மணத்தின் கொடுமையைப் பாவேந்தர்.

ஏழு வயதே எழிற்கருங் கண்மலர்
ஒருதா மரைமுகம்; ஒருசிறு மணியிடை
சுவைத்தறி யாத சுவைதருங் கனிவாய்;
இவற்றை யுடைய இளம்பெண்; அவள்தான்
கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு
தாவாச் சிறுமான் மோவா அரும்பு;
தாலி யறுத்துத் தந்தையின் வீட்டில்
இந்தச் சிறுமி இருந்திடு கின்றாள்:
இவளது தந்தையும் மனைவியை இழந்து
மறுதார மாயொரு மங்கையை மணந்தான்
புதுப்பெண் தானும் புதுமாப் பிள்ளையும்
இரவையே விரும்பி ஏறுவார் கட்டிலில்,
பகலைப் போக்கப் பந்தா டிடுவர்:
இளந்தலைக் கைம்பெண் இவைகளைக் காண்பாள்
தனியாய் ஒருநாள் தன்பாட் டியிடம்
தேம்பித் தேம்பி அழுத வண்ணம்
ஏழு வயதின் இளம்பெண் சொல்லுவாள்
என்னை விலக்கி என்சிறு தாயிடம்
தந்தை கொஞ்சுதல் தகுமோ? தந்தை
அவளை விரும்பி அவள்தலை மீது
பூச்சூடு கின்றார் புறக்கணித் தாரெனை;
தாமும் அவளும் தனியறை செல்வார்;
நான்ஏன் வெளியில் நாய்போற் கிடப்பது?
அவருக்கு நான்மகள்; அவள்எதிர் சென்றால்
'நீபோ' என்று புருவம் நெறிப்பதோ?
பாட்டி மடியிற் படுத்துப் புரண்டே
இவ்வா றழுதாள் இளம்பூங் கொடியாள்;
இந்நிலைக் கிவ்வா றழுதாள்- இவளது
பின்னிலை எண்ணிப் பாட்டி பெரிதும்

அழுத கண்ணீர் வெள்ளம் அந்தக்
குழந்தை வாழ்நாட் கொடுமையிற் பெரிதே."

(தொகுதி 1, ப-11)

குழந்தை மணத்தின் கொடுமையை நினைந்து பாட்டி அழுத கண்ணீரோடு படிப்பவர்கள் கண்ணீரும் கலக்குமாறு இப்பாடலைப் பாடியுள்ளார் பாவேந்தர். இக்குழந்தை மணக் கொடுமை குறித்துச் சில பாடல்களே பாடியுள்ளார். எனினும் படித்தவர்கள் அப்பாடல்களை மறக்க முடியாது.

சரி. இக்குழந்தை மணத்தின் கொடுமைப்பற்றிப் பாரதியார் பாடியுள்ளாரா? அவரே குழந்தை மணம் புரிந்து கொள்ள வேண்டிய இடர்ப்பாட்டுக்கு ஆளானவர் அல்லவா? இதில் இவருக்கும் கருத்தொற்றுமை உண்டா? இதோ பாரதியார் பாடல் 'சுயசரிதை'யில் இருந்து:

பால ருந்து மதலையர் தம்மையே
பாதகக் கொடும் பாதகப் பாதகர்
மூலத் தோடு குலங்கெடல் நாடிய
மூட மூடநிர் மூலப் புலையர்தாம்
கோல மாக மணத்திடைக் கூட்டுமிக்
கொலையெ னுஞ்செய லொன்றினை உன்னவும்
சால இன்னுமோர் ஆயிரம் ஆண்டுகள்
தாத ராகி அழிகெனத் தோன்றுமே.'

இப்பாடலில் வரும் 'பாதகக் கொடும் பாதகப் பாதகர்' என்ற தொடரும். 'மூட மூட நிர்மூலப் புலையர்' என்ற தொடரும். 'ஆயிரம் ஆண்டுகள் தாதராகி அழிக' என்ற வசையும் குழந்தை மணத்தின் கொடுமையை விளக்க வல்லனவாகும். குழந்தை மணத்தின் கொடுமையைப் பாடுவதில் இருவரும் கருத்தொருமித்தவர்களாகவே உள்ளனர். ஆக இதிலும் பாரதிதாசன் பாரதிதாசனாகவே உள்ளார்.

**பார்ப்பனிய எதிர்ப்பு:** பிரம்மனின் முகத்திலே பிறந்தவர்கள் என்றும், அதனாலே மற்றவர்களில் இருந்து தாங்கள் மேம்பட்டவர் என்றும் கூறிக் கொண்ட பார்ப்பனர்கள், மூவேந்தர்கள் ஆட்சிக் காலத்திலும் இடைக் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும் தங்கள் மேலாதிக்கத்தை இறுக்கிக் கொண்டு வந்து நாட்டு அரசியலில் முதலிடத்தைப் பெற்றுவிட்டனர். பல்வேறு



சாதிப் பிரிவுகட்கும் வித்திட்டனர். இதனால் தமிழர்களிடையே பிளவு மனப்பான்மையும் பகையுணர்ச்சியும் ஏற்படுமாறு செய்தனர். ஆகவே பார்ப்பனர் தமிழ்நாட்டிலே வாழ்ந்தாலும். தமிழையே பேசினாலும் தம்பார்ப்பனத் தன்மையை விடாதவரை அவர்கள் தமிழ் இனத்தவராக முடியாது என்று பாவேந்தர் நம்பினார். அதனால்தான்.

இனமல்லடா அவன் பகைவன் - இனியும்
ஏமாற வேண்டாம் தமிழா (இனமல்ல)

மனம் ஒன்று செயலொன்று அன்னோர்க்கு - கெட்ட
வஞ்சகரைக் கண்ட இடமெலாம் தாக்கு
தனியாண்ட செந்தமிழ்த் தாய்க்கு - நீ
தலைவன் நீ தலைவன் வாளினைத் தூக்கு (இனமல்ல)

அலுவல்கள் எல்லாம் அவர்க்கா?
அடிமையும் மிடிமையும் உனக்கா?
கொலுவிருந் திடும்நிலை நரிக்கா?
கூடியே கெஞ்சுநிலை வேங்கைப் புலிக்கா? (இனமல்ல)

கோயிலுக்குள் பார்ப்பனர்களின் ஆதிக்கக் கொடுமையையும், வடமொழி மந்திரங்களின் ஆதிக்கக் கொடுமையையும் கண்ட பாவேந்தர்.

'மடிகட்டிக் கோயிலிலே மேலுடையை
இடுப்பினிலே வரிந்து கட்டிப்
பொடிகட்டி இல்லாது பூசியிரு
கைகட்டிப் பார்ப்பா னுக்குப்
படிகட்டித் தமிழரெனப் படிக்கட்டின்
கீழ்நின்று தமிழ்மா னத்தை
வடிகட்டி அவன்வடசொல் மண்ணாங்கட்
டிக்குவப்பீர் 'மந்த்ரம்' என்றே'

என்று கோயிலுக்குள் தமிழன் தாழ்வும் பார்ப்பனன் உயர்வும் இருக்கும் நிலையை எடுத்தியம்புகின்றார். கோயில் தேர்த் திருவிழாவில்

எல்லோரும் கயிறிழுக்க இயங்குமொரு
தேர்மீதில் ஆரியத்தைச்
சொல்லிடுமோர் சொரிபிடித்த பார்ப்பானைக்
குந்தவைத்தல் தூய்மை தானோ?

என்றும் கேட்பார். பார்ப்பன மேலாதிக்கத்தின் மீது அவருக் கிருந்த சினத்தின் அளவைக் கீழ்வரும் இவ்வொரு பாடலே நன்கு விளக்கும்.

"பார்ப்பான்பால் படியாதீர்: சொற்குக்கீழ்ப்
படியாதீர்: உம்மை ஏய்க்கப்
பார்ப்பான்: தீதுறப்பார்ப்பான்; கெடுத்துவிடப்
பார்ப்பான்எப் போதும் பார்ப்பான்
ஆர்ப்பான்நம் நன்மையிலே ஆர்வமிக
உள்ளவன்போல்; நம்ப வேண்டாம்
பார்ப்பனின் கையைஎதிர் பார்ப்பானை
யேபார்ப்பான் தின்னப் பார்ப்பான்'

பார்ப்பன மேலாண்மையின் மீது ஏற்பட்ட வெறுப்பும் சினமும் பார்ப்பனர்மீது ஏற்பட்ட வெறுப்பாகவே வெளிப் படுகின்றது. தனிப்பட்ட முறையில் அவர் பார்ப்பனர்களிடத்தில் வெறுப்புக் கொண்டவரல்லர் என்பதை அவருக்குப் பார்ப்பன நண்பர்கள் பலர் இருப்பதாலேயே அறிந்து கொள்ளலாம். அவர் 'பார்ப்பனிய விரோதியல்லர்; பார்ப்பன விரோதியே' என்று சிலர் சொல்லக்கூடும். அவ்வாறு பார்ப்பன விரோதியாக அவர் இருந்திருந்தால் இப்பாடலைப் பாடியிருக்கமாட்டார்.

இந்த நூற்றாண்டில் இருவர் பார்ப்பனர்
செந்தமிழ்ப் பற்றுடையர்கள் - (இந்த)
முந்து பாவலன் பாரதி மற்றவன்
முத்தமிழ் வல்லவன் பரிதிமாற் கலைஞன் (இந்த)

சூரிய நாராயண சாத்திரி என்ற
தூய்மை யற்றதன் ஆரியப் பெயரை
ஏர்பெறு தமிழால் பரிதிமாற் கலைஞன்
என்று மாற்றிய நற்றமிழ் அறிஞன் (இந்த)

வாழிய பரிதிமாற் கலைஞன் எனும் பெயர்
வாழிய அன்னோன் வாழிய பெரும் புகழ் (இந்த)

(தேனருவி -106)

இது போலவே பாரதி பிறப்பால் பார்ப்பனரா யிருந்தாலும் அவரைப் பாரதியார் என்று கூறாது 'ஐயர்' என்றே அழைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். திருச்சிக்கு ஒரு முறை பாரதியார் மனைவி செல்லம்மாள் வந்திருக்கும் செய்தியைத் திரு.திருலோக சீதாராம் அவர்கள் பாவேந்தர் அவர்களிடம் சொன்னபோது 'யார்? ஐயர் மனைவியா' என்று வினவினாராம்.



திருவாளர் கல்கி அவர்கள் ஆனந்தவிகடன் ஆசிரியராக இருந்த பொழுது அவ்விதழில் 'பாரதியார் உலககவி அல்ல' என்றும், 'அவர் பாடலில் வெறுக்கத்தக்கன உள்ளன' என்றும் எழுதினா ராம். அதற்கு மறுப்பாக 'மகாகவி' என்ற தலைப்பில் ஒன்பது பாடல்களைப் பாடுகிறார் பாவேந்தர். அதில் இறுதியில் வருவது இப்பாடல்.

வையகத்து மாகவிஞர் மறைந்து போனார்
வைதிகர்க்குப் பாரதியார் பகைவ ரேனும்
செய்வதென்ன? மேலுக்குப் புகழ்ந்தே வந்தார்
சிலநாட்கள் போகட்டும் எனஇ ருந்தார்
உய்யும்வழி கெடாதிருக்க மெதுவாய் இந்நாள்
உலககவி அல்லஅவர்' எனத்தொ டங்கி
'ஐயர்கவி தை'க்கிழுக்கும் கற்பிக்கின்றார்
அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவாருண்டோ

(தொகுதி உ, ப- 84)

இவ்விருத்தப்பாவில் பாரதியார் பாடலை 'ஐயர் கவிதை' என்றே குறிப்பிடுகின்றார். பாவேந்தர் பார்ப்பன எதிர்ப்பாளராகவே இருந்திருந்தால் 'ஐயர் கவிதை' என்று சொல்லியிருக்கமாட்டார். ஐயர் என்ற பழந்தமிழ்ச் சொல்லின் முழுப் பொருளுக்கும் உரியவராகப் பாரதியார் விளங்கியதனால்தான் இவ்வாறு கூறி யிருக்கின்றார். ஆகவே பாவேந்தர் பார்ப்பனிய எதிர்ப்பாளரே யன்றிப் பார்ப்பன எதிர்ப்பாளர் அல்லர் என்பதே உண்மை.

பார்ப்பனிய எதிர்ப்புணர்வு பாவேந்தருக்கு இயல்பாகத் தானே அமைந்ததா? வேறு பிறரிடம் இருந்து பெற்றதா? பாரதியாருக்குப் பார்ப்பனிய எதிர்ப்புணர்வு உண்டு என்பதனை அவர் கவிதையைப் படிப்பவர்கள் அறியலாம்; இதனால்தான் கல்கி போன்றவர்கள் எதிர்த்தார்கள் போலும். எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத உள்ளம் பாரதியார் உள்ளம். ஆகவே தம் மனத்திற்குச் சரியென்று பட்டதை ஒளிவு மறைவு இன்றி எடுத்துக் கூறினார். பாரதியாரின் பார்ப்பனிய எதிர்ப்புப் பாடல்களையும் பார்ப் போம். 'மறவன்பாட்டு' என்ற தலைப்பில் வருவது இப்பாடல்.

'முன்னாளில் ஐயரெல்லாம் வேதம் - ஓதுவார்
மூன்றுமழை பெய்யுமடா மாதம்
இந்நாளிலே பொய்மைப் பார்ப்பார் - இவர்
ஏதுசெய்தும் காசுபெறப் பார்ப்பார்'

'பேராசைக் காரனடா பார்ப்பான் - ஆனால்
பெரிய துரையெனில் உடல் வேர்ப்பான்'
'பிள்ளைக்குப் பூணூலாம் என்பான் - நம்மைப்
பிச்சுப் பணங்கொ டெனத் தின்பான்'

'நாயும் பிழைக்கு மிந்தப் பிழைப்பு
நாளெல்லாம் மற்றிதிலே உழைப்பு
பாயும் கடிநாய்ப் போலீசுக் - காரப்
பார்ப்பானுக் குண்டிதிலே பீசு'

பார்ப்பனர்கள் செய்யும் குணக் கேடுகளால் விளைந்த எரிச்சலில் போலீசுக்காரனையும் பார்ப்பானாகவே பார்க்கின்றார் பாரதியார். இன்னும் 'பார்ப்பானை ஐயரென்று காலமும் போச்சே' என்ற பாடல்வரியும் நம் நினைவை விட்டு அகல வில்லை. இதோ பாரதியாருடைய வசன கவிதையில் இருந்து ஒரு பகுதி.

'தமிழ்நாட்டிலே சாஸ்திரங்களில்லை. உண்மையான சாஸ்திரங் களை வளர்க்காமல் தமிழ் நாட்டுப் பார்ப்பார் இருப்பன வற்றையும் மறந்துவிட்டுப் பொய்க் கதைகளை மூடரிடம் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்'

இவ்வாறு பார்ப்பனர்களின் முறைகேடான வாழ்க்கையைக் கடுமையாகத் தாக்கி எழுதுகிறார் பாரதியார். ஆகப் பார்ப்பனிய எதிர்ப்புணர்ச்சியிலும் பாவேந்தர் பாரதியாரையே வழிகாட்டி யாகக் கொண்டுள்ளார். ஏன்? இவ்வுணர்ச்சியைப் பெரியாரிட மிருந்து பெற்றிருக்கக்கூடாதா? என்று சிலர் கேட்கக்கூடும். இக்கருத்துக்களை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தோன்றும் முன்பே பாரதியார் எழுதிவிட்டார். இதனைப் பாவேந்தரே கூறுகிறார்.

பெரியாரின் பெருந்தொண்டராகிய பெண்ணாகரம் நஞ்சையா அவர்கள் ஒரு நாள் பாவேந்தரிடம் 'பார்ப்பனியம் இந்த நாட்டின் 'நச்சுப் பாம்பு' என்று பெரியார் அடிக்கடி சொல்கின்றார். நீங்கள் பாரதியாரைப் போற்றக் காரணம் என்ன' என்று கேட்டாராம்



அதற்கு விடை கூறுமுகத்தான் பாவேந்தர் 'பாரதியாரிடத்தில் பார்ப்பனத்தன்மை எள்ளளவும் கிடையாது. 'பார்ப்பானை ஐயரென்று காலமும் போச்சே' என்று பெரியாருக்கு முன் முரசு கொட்டிச் சொன்னவன் பாரதி. நான் புரட்சிக் கவிதைகள் எழுதக் கற்றுக் கொண்டதே அவரிடம் தான்... அதனால் தான் பாரதி தாசன் என்று புனை பெயரும் வைத்துக் கொண்டேன்.'

(குயில் கூவிக்கொண்டிருக்கும் ப-111)

இவ்வாறு பெரியாருக்கு முன்பே பாரதியார் பார்ப்பனிய எதிர்ப்பைத் தொடங்கி விட்டார் என அறிகிறோம். மேலும் புரட்சிக் கவிதைகள் எழுதக் கற்றுக் கொண்டதே அவரிடம் தான் என்று கூறுவதனாலும் பார்ப்பனிய எதிர்ப்புணர்வையும் அவரிட மிருந்தே பெற்றிருக்கின்றார் என்பதனாலும் பாவேந்தரைப் பாரதிதாசன் என அழைப்பதில் தவறேதும் இருக்க முடியாதுதான்.

**புராண நம்பிக்கையின்மை:** பாவேந்தர் புராணங்களை நம்புவதில்லை; நம்பாதது மட்டுமல்லாமல் அவை தாம் தமிழரின் வாழ்வை நாசப்படுத்தியவை என்ற நம்பிக்கையும் கொண்டவர். அவைகள் எல்லாம் பொய்யையேமுதலாகக் கொண்டவை என்று கருதுகின்றார். இதனால்தான்.

'பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள நூல்களை ஒப்புவ தெப்படி.

என்று கேட்கின்றார். அந்நூல்கள் மக்களை ஏமாற்றப் படைத்த நூல்கள். இவைகளை ஏன் ஏற்க வேண்டும் என்ற வினாவுக்கு என்ன விடையிறுப்பது?

கடவுளையே நம்பாதவர் கடவுளின் திருவிளையாடல்களாகிய புராணங்களை எப்படி நம்புவார்? அவர் நம்பாததில் வியப்பொன்றும் இல்லை. பாவேந்தர் புராணங்களில் நம்பிக்கை கொள்ளாமைக்கும் பாரதியார் தான் காரணமோ என்று எண்ணு மாறுள்ளது. பாரதியாரின் சில பாடல்கள் புராண நம்பிக்கைக்கு வேட்டு வைப்பனவாக உள்ளன. புராணக் கருத்துக்களைச் செய்தி யாகவும் உவமையாகவும் பாரதியார் பாடுவது உண்மைதான். என்றாலும் அவைகளைப் பழைய கதைகள் என்ற அளவில் ஏற்றுக் கொள்கின்றார் போலும்.

'செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திட லாமென் றெண்ணி யிருப்பார்
பித்த மனிதர்; அவர்சொலும் சாத்திரம்
பேயுரை யாமென் றூதேடா சங்கம்'

செத்தபின் கைலாயம், வைகுந்தம் சேரலாமென்றெண்ணி யிருப்பவர்கள் பித்த மனிதர்கள் என்றும், அதனை வெளிப் படுத்தும் நூல் பேயுரை என்றும் பாரதியாராலே இகழ்ந்துரைக்கப் படுகின்றது. சாத்திரங்களையும் கடுமையான மொழியிலே தாக்குகின்றார்.

தெய்வங்களைப் பற்றியும், வேதங்களைப் பற்றியும், இதிகாசங் களைப் பற்றியும், புராணங்களைப் பற்றியும் தன்னுடைய கருத்து என்ன என்பதனைப் பொட்டில் அடித்தாற்போல 'உயிர்பெற்ற தமிழர் பாட்டு' என்ற தலைப்பில் பாடுகின்றார்.

'உண்மையின் பேர்தெய்வ மென்போம் - அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம் - பிறிது
உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்

கடலினைத் தாவும் குரங்கும் - வெங்
கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்
வடமலை தாழ்ந்தத னாலே - தெற்கில்
வந்து சமன்செய்யும் குட்டை முனியும்

நதியினுள் ளேமுழு கிப்போய் - அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுற வேமணம் செய்த - திறல்
வீமனும் கற்பனை என்பது கண்டோம்.

ஒன்றுமற் றொன்றைப் பழிக்கும் - ஒன்றில்
உண்மையென் றோதிமற் றொன்றுபொய் யென்னும்
நன்றுபு ராணங்கள் செய்தார் - அதில்
நல்ல கவிதை பலப்பல தந்தார்

கவிதை மிகநல்ல தேனும் - அக்
கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்
புவிதனில் வாழ்நெறி காட்டி - நன்மை
போதிக்கும் கட்டுக் கதைகள் அவைதாம்



உண்மையின் பெயர்தான் தெய்வம்; பிறதெய்வங்கள் பொய்; உண்மை தான் வேதம்; பிறவேதங்கள் எல்லாம் கதை; அனுமனும் பாஞ்சாலியும், அகத்திய முனிவனும், வீமனும் உண்மை மாந்தர் அல்லர்; கற்பனை மாந்தரே. ஒன்றில் உண்மையென்று கூறி மற்றொன்றில் அதனையே பொய்யென்று கூறுவதுமாகிய புராணங்களைச் செய்தார்கள். அப்புராணக்கதைகள் பொய் யானவை. அவை உலகில் வாழும் நெறியைச் சுட்டிக் காட்டி நன்மையை எடுத்துக் கூறவந்த கட்டுக் கதைகள் என்றெல்லாம் புராணங்களைப் பற்றிப் பாரதியார் தரும் விளக்கம் பாவேந்தரின் உள்ளத்தில் படிந்து புராண நம்பிக்கையின்மையாக வளர்ந்திருக் குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. உயிர்பெற்ற தமிழர் பாட்டில் பாரதியார் மேலும் தொடர்கிறார்.

'பின்னும் ஸ்மிருதிகள் செய்தார் - அவை
பேணும் மனிதர் உலகினில் இல்லை
மன்னும் இயல்பின வல்ல: இவை
மாறிப் பயிலும் இயல்பின வாகும்

காலத்திற் கேற்ற வகைகள் - அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் - எந்த
நாளும் நிலைத்திடு நூலொன்றும் இல்லை

சூத்திர னுக்கொரு நீதி - தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடு மாயின் - அது
சாத்திர மன்று; சதியென்று கண்டோம்'

சூத்திரனுக்கு ஒரு நீதியும், தண்டச் சோறுண்ணும் பார்ப்ப னர்க்கு வேறொரு நீதியும் சொல்லும் நூல்கள் சாத்திரம் காட்டும் நூல்கள் அல்ல; அவை சதிகார நூல்கள் என்று பாடுகின்றார். ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசுவது மனுஸ்மிருதி. திருவிளையாடற் புராணத்துள் வரும் மாபாதகந்தீர்த்த படலம் முதலியனவும் ஒரு குலத்துக்கு ஒரு நீதிபேசுவனவே. ஆகவேதான் பாவேந்தர் புராண நூல்களில் நம்பிக்கை கொள்ளவில்லை. இந்த நம்பிக்கை யின்மைக்குக் கூடப் பாரதியார் ஒரு காரணமாக இருந்திருக்க லாம். உயிர்பெற்ற தமிழர் பாட்டிலே இவ்வாறு பாரதியார் கூறுகிறார் என்றால் அவர்கள் இருவரும் உரையாடிய காலத்திலும் இக்கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டே இருந்திருக்கும்.

தெய்வங்கள், புராணங்கள் வேதங்கள் பற்றி முன்னர்க்கூறிய கருத்துக்களோடு 'உயிர்பெற்ற தமிழர் பாட்டு' முரண்பட்டு நிற்பதனை அறியலாம். இந்த முரண்பாட்டுக்கு என்ன காரணம்? ஒன்று; மக்களிடம் வழங்கும் நம்பிக்கைகளை அப்படியே வாங்கிக்கொண்டு முன்னர்ப்பாடிய பாடல்களைப் பாடியிருக்க வேண்டும். இரண்டு; பாரதியாருக்கே அந்த நம்பிக்கைகள் எல்லாம் இருந்து பின்னர்த் தெளிவு பெற்று உயிர் பெற்ற தமிழர் பாட்டைப் பாடியிருக்க வேண்டும். ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகின்றது. புராண நம்பிக்கையின்மையில் பாவேந்தரும் பாரதியாரும் ஒத்த கருத்தினராகவே உள்ளனர்.

பாவேந்தர் பாரதிதாசன் என்று பெயர் வைத்துக் கொண்டதற்கு இன்னொரு காரணம் பாரதியார் புரட்சிக் கருத்துக்களைப் பாடியவர் மட்டுமல்லர்; அதனை வாழ்நாளில் கடைப்பிடித்தும் காட்டினார் என்பதுமாம். வாய்ச் சொல்லில் வீரராக இல்லாமல் வாழ்விலே ஏற்று நடந்து வறுமையைப் பரிசாக வாங்கிக் கொண்டவர் என்பதனைப் பாவேந்தர் இவ்வாறு எடுத்துக்காட்டுகின்றார்.

> தேசத்தார் நல்லுணர்வு பெறும்பொ ருட்டுச்
> சேரியிலே நாள் முழுவதும் தங்கி யுண்டார்
> காசுதந்து கடைத்தெருவில் துலுக்கர் விற்கும்
> சிற்றுணவு வாங்கியதைக் கனிவாய் உண்டார்
>
> பேசிவந்த வசைபொறுத்தார்; நாட்டிற் பல்லோர்
> பிறப்பினிலே தாழ்வுயர்வு பேசு கின்ற
> மோசத்தை நடக்கையினால் எழுத்தால் பேச்சால்
> முரசறைந்தார் இங்கிவற்றால் வறுமை உற்றார்.

சேரியிற்சென்று உண்ணாமலும், துலுக்கர் கடை உணவை வாங்கிப் பலர் காணத் தின்னாமலும் பிறப்பிலே உயர்வு தாழ்வில்லை என்று பேசாமலும் எழுதாமலும் இருந்திருந்தால் அவர் வறுமையை ஏற்க வேண்டிய தேவை நேர்ந்திருக்காது. பேசியவாறே வாழ்க்கையில் நடந்து காட்டினார். உயர் சாதி இந்துக்கள் பேசிய வசையைப் பொறுத்துக் கொண்டார். அவர்கள் மறைமுகமாகவும் நேரிடையாகவும் தந்த தொல்லையினால் வறுமையுற்றார் என்று அறிகின்றோம். அந்த வறுமை எத்தகையது? இதோ, பாரதியாரே கூறுகின்றார்.



'தாயே! என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைப்படுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும் உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால் - உன்னை எப்படிப் பாடுவேன்... செட்டி பணத்துக்கு எத்தனை நாள் பொய் சொல்கிறது? வாயிதா! பொய் வாயிதா! பொய் வாயிதா! - தினம் இந்தக் கொடுமை தானா? சீச்சி!!

'பராசக்தி - உன்னை நான் நம்புவதை முற்றிலும் விட்டு நாஸ்திகனாய் விடுவேன்; நீ என்னை அற்பத் தொல்லைகளுக்கு உட்படுத்திக் கொண்டே இருந்தால்.'

(பாரதி நூல்கள் வசனங்கள், ப - 770 - 772)

இத்தகைய கொடிய வறுமையை ஏற்றாலும் பரவாயில்லை; மனத்திற்குப் பட்டதைச் சொல்வோம்; செய்வோம் என்று துணிந்துவிட்ட பாரதியாரின் ஆளுமை பாவேந்தரைக் கவர்ந்ததும், அவருக்கு இவரை அடிமையாக்கியதும் வியப்பில்லைதான். ஏனெனில் பாவேந்தரின் வாழ்க்கையே அப்படிப்பட்டது தானே! நெஞ்சிற்குச் சரி என்று பட்டதை ஒளியாமல் உரைத்த ஒரே காரணத்தினால் தான் அவர் பெரும்பாலும் தொடக்கப்பள்ளி ஆசிரியராகவே இருக்க நேர்ந்தது. ஊர்ஊருக்குப் பந்தாடப் பட்டார்! ஒரு வகையில் பார்த்தால் கருத்தினாலே மட்டுமில்லை; வாழ்க்கை முறையினாலும் பாவேந்தர் பாரதியாரின் நிழல் போலவே தோற்றமளிக்கின்றார்.

பாரதியாருக்கும் பாவேந்தருக்கும் உள்ள வேற்றுமைகளையும் கண்டோம். ஒற்றுமைகளையும் கண்டோம். இனி 'மிகை நாடி மிக்க கொளல்' வேண்டும்.

நாடு, வடமொழி நூல்கள், தெய்வம் சார்த்திப் பாடுதலும் விடுதலை பற்றிய கருத்தும், பொதுவுடைமை போற்றுதல், தமிழின் தோற்றம், குறிக்கோள் வெளிப்பாடு ஆகிய ஆறு செய்திகளில் பாரதியாரோடு - பாவேந்தர் வேறுபட்டும் முரண்பட்டும் நிற்கின்றார்.

குறிக்கோள் ஒன்று பெறுதல், மக்களைப்பாடுதல், பாடலிற் புதுமுறை புதுநடை, பெண் விடுதலை. கைம்மைக் கொடுமை, குழந்தை மணம், சாதியொழிப்பு, இசைத்தமிழ் மறுமலர்ச்சி, பார்ப்பனிய எதிர்ப்பு, புராண நம்பிக்கையின்மை, சொன்னபடி வாழ்ந்து காட்டிய திறம் ஆகிய பதினொரு செய்திகளில்

பாவேந்தர் பாரதியாரைப் பின்பற்றிச் செல்லும் தாசனாகவே விளங்குகிறார்.

பாரதிதாசன் என்பது தான் வெறுக்கின்ற வடமொழிப்பெயராக இருந்த போதும், அதனைத் தன் வாழ்நாள் வரையிலும் அவரே விரும்பிச் சுமந்திருக்கிறார் என்றால் 'பாரதி' அவர் உள்ளத்தில் ஏற்படுத்தி இருக்கும் தாக்கம் எளிமையானதன்று. அவர்தம் ஊனிலும், உயிரும் கலந்துவிட்ட ஒன்றாக இருந்தால் மட்டுமே இது நடக்கும், பாரதியாரின் உணர்வுகள் பாவேந்தருக்குள் நிறைந்து பொங்கித் ததும்பியதனாலே தான் அந்த வடமொழிப் பெயரை மகிழ்ச்சியோடு சுமந்தார் என்றுசொல்ல வேண்டும். தமிழ் நாட்டிலிருந்து வடமொழியை அறுத்தெறிய வேண்டும் என்று பாடியவர்; 'பாரதிதாசன்' என்ற வடசொல்லை அப்படியே ஏற்றுக் கொண்டார் என்றால் பாரதிக்கு அவர் அடிமையாகி விட்டார் என்பது தானே உண்மை. அவர் தம்முடைய சொந்த விருப்பத்தின்படி பாரதிதாசன் என வைத்துக் கொண்டதை நம் ஆய்வின் படியும் உறுதிசெய்து பாரதிதாசன் வாழ்க என்று முழங்குவோம். பாரதிதாசன் என்னும் பெயர் இடுகுறிப் பெயராக மாறிவிடவில்லை; என்றென்றும் அது காரணப் பெயராகவே விளங்கும்.



**பாவலர் மணி**

# புலவர் ஆ. பழநி

நெல்லை தனித்தமிழ் இலக்கியக் கழகத்தின் 'பாவலர் மணி'; குன்றக்குடி அடிகளாரின் 'கவிக்கோ'; தமிழக அரசின் 'பாவேந்தர் விருது'; கோயில்பட்டி திருவள்ளுவர் மன்றத்தின் 'திருவள்ளுவர் விருது'; காரைக்குடி சுழற் குழுவினரின் 'புலவர் மாமணி'; பாரதிதாசன் தமிழ்ப் பேரவையின் 'தமிழ்ச் செம்மல்'; மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'தமிழ்ச் செம்மல்' ஆகியன பேராசிரியர் பெற்ற விருதுகளில் சில.

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| அனிச்ச அடி | செய்யுள் நாடகம் |
| அன்னி மகள் | செய்யுள் நாடகம் |
| சாலி மைந்தன் | காப்பியம் |
| காரல் மார்க்சு | காப்பியம் |
| களம் கண்ட கவிதைகள் | கவிதைத் தொகுப்பு |
| பண்டித மணியின் நாடகத் தமிழ் | திறனாய்வு |
| இளங்கோவடிகளின் காப்பியக் கட்டமைப்பு | திறனாய்வு |
| பாண்டியன் பரிசில் வரலாற்றுப் பார்வையும் குறியீட்டுச் செய்தியும் | திறனாய்வு |
| கம்பன் காட்டும் போரற்ற உலகம் | திறனாய்வு |
| திருக்குறள்: உரைகளும் சில குறைகளும் | திறனாய்வு |